மகாத்மா காந்தி

இந்திய சுயராஜ்யம்

597
2.21

19 MAY 1921

THE COMMERCIAL PRINTING & PUBLISHING CO.

பரலி சு. நெல்லையப்ப பிள்ளை
மொழிபெயர்ப்பு.

முக்கால் ரூபாய்.

Dre
1227

BG
N21

PRINTED AT
THE COMMERCIAL PRINTING AND PUBLISHING CO.
84, ARMENIAN ST., MADRAS.

77507

19 MAY 1921
MADRAS

முகவுரை

இது காந்தியடிகள் கூர்ஜர பாஷையில் இயற்றிய "ஹிந்து ஸ்வராஜ்" என்ற நூலின் மொழி பெயர்ப்பு. முதனூலின் ஆங்கில மொழி பெயர்ப்பைத் துணையாகக் கொண்டு இம் மொழிபெயர்ப்பை நான் இயற்றினேன். இதில் உள்ள விஷயங்கள் முழுமையும் காந்தியடிகள் தென் ஆப்பிரிக்காவில் இருந்த காலை, வங்காளப் பிரிவினை 'ரத்' தாவதற்கு முன்னர், தாதாபாய், கோகலே முதலிய தேசபக்தர்கள் உயிரோடிருந்த காலத்தில், நேட்டாலில் நடைபெறும் 'இந்தியன் ஒப்பீனியன்' என்ற பத்திரிகையில் பகுதி பகுதியாக வெளியானவை யாகும். இந்நூல் குஜராத்தி, ஹிந்தி, வங்காளி, தெலுங்கு, ஆங்கிலம் முதலிய பாஷைகளில் மொழி பெயர்க்கப்பட்டு, பதினாயிரக் கணக்காகச் செலவாய் வருகிறது. இம்மொழி பெயர்ப்பை நான் சுமார் ஆறுமாதங்களுக்கு முன்னரே முடித்திருந்தும், எண்ணிறந்த காரணங்களால், இதனை வெளியிட இவ்வளவு தாமதமாயிற்று. சில அச்சுக்கூடக்காரர்கள் இதனை அச்சிட அஞ்சினமை அவற்றில் ஒரு காரணமாகும்.

இந்திய சுயராஜ்ய விஷயத்தை காந்தியடிகள் இந்நூலில் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார், காந்தியடிகள் கருத்தை நான் கூடியவரை தமிழில் விளக்க முயன்றுள்ளேன். மொழி பெயர்ப்புக்கு மட்டுமே நான் பொறுப்பாளி. எனவே, இதிலுள்ள குணங்களெல்லாம் முதனூலாசிரியரான காந்தியடிகளைச் சேர்ந்தவை யாதலின், அவரைப்போற்றுமாறும், இதிலுள்ள குற்றங்களுக்காக என்னை மன்னிக்குமாறும் தமிழ் நாட்டாரை வேண்டுகின்றேன்.

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை,
ரௌத்திரி, பங்குனி.

பரலி சு. நெல்லையப்பன்.

பொருளடக்கம்.

௧. தேசிய மகாசபையும் (காங்கிரஸ்) அதன் அதிகாரிகளும்.

௨. வங்காளப் பிரிவினை.

௩. அதிருப்தியும் அமைதியின்மையும்.

௪. சுயராஜ்யம் என்பது யாது?

௫. இங்கிலாந்தின் நிலைமை.

௬. நாகரிகம்.

௭. இந்தியாவை ஏன் இழந்தோம்?

௮. இந்தியாவின் நிலைமை.

௯. இருப்புப்பாதைகள்.

௧௦. ஹிந்துக்களும் மகமதியர்களும்.

௧௧. வக்கீல்கள்.

௧௨. வைத்தியர்கள்.

௧௩. உண்மையான நாகரிகம் யாது?

௧௪. இந்தியா விடுதலை பெறுவது எப்படி?

௧௫. இத்தலியும் இந்தியாவும்.

௧௬. மிருகபலம்.

௧௭. சத்தியாக்கிரகம்.

௧௮. கல்வி.

௧௯. யந்திரங்கள்.

௨௦. முடிவு.

கண்டனங்களுக்கு மறுமொழி.

இந்திய சுயராஜ்யம்

அதிகாரம்—க

காங்கிரசும் அதன் அதிகாரிகளும்

வாசகர்:—இப்பொழுது இந்தியாவில் சுயராஜ்யக் கிளர்ச்சி ஒன்று தோன்றி யிருக்கிறது. நமது நாட்டார் அனைவரும் நாட்டின் விடுதலைக்குத் தவித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. தென் ஆப்ரிக்காவிலே கூட நம்மவர்களிடம் இந்த உணர்ச்சி பரவி யிருக்கிறது. இந்தியர்கள் தங்கள் உரிமைகளை அடைவதில் ஆவல் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த விஷயத்தில் தங்கள் கருத்தினை விளக்குவீர்களா?

பத்திராதிபர்:—நீர் நன்றாய் வினவினீர். ஆனால் அதற்கு மறுமொழி கூறுவது எளிதன்று. ஜனங்களின் உணர்ச்சியை அறிந்து, அதனை வெளியிடுதல் பத்திரிகையின் நோக்கங்களில் ஒன்று. விரும்பத்தக்க சில நல்லுணர்ச்சிகளை ஜனங்களிடை உண்டுபண்ணல் மற்றொன்று. ஜனங்களின் குறைகளை அச்சமின்றி வெளியிடுதல் மூன்றாவதாகும். உமது கேள்விக்கு விடையளிப்பதில் இந்த மூன்று கடமைகளையும் செலுத்தவேண்டியதா யிருக்கிறது. ஜனங்களின் நோக்கத்தை நான் ஒருவாறு வெளியிடவேண்டும்; சில உணர்ச்சிகளை வளர்க்க வேண்டும்; சில குறைகளை வெளியிடவேண்டும். ஆனால் நீர் வினவியிருக்கிறபடியால் அதற்கு விடை கூறுவது எனது கடமை.

வா:—அவ்வாறாயின், சுய ராஜ்ய விருப்பம் எம்மவர்களுக்கு ஏற்பட்டு விட்டதென்று தாங்கள் கருதுகிறீர்கள்?

பத்:—அந்த விருப்பத்தால் தான் தேசிய மகாசபை (நேஷநல் காங்கிரஸ்) ஏற்பட்டது. 'தேசிய' என்ற சொல் அதனைக் குறிப்பிடுகிறது.

வா:—நிச்சயமாக, அவ்வா றல்ல. வாலிப இந்தியர்கள் அதனைப்பொருட் படுத்துவதாகத் தோன்றவில்லை. பிரிட்டிஷ் ஆட்சியை என்றென்றும் நிலைக்கச் செய்யுமாறு தோன்றிய கருவியென்று அவர்கள் அதனைக் கருதுகிறார்கள்.

பத்:—அவ்வாறு கருதுவது சரியல்ல. பாரத நாட்டின் அரும்பெருங் கிழவனார் ஆதியில் வேலை செய்திராவிடின் இப்பொழுது நமது வாலிபர்கள் சுயராஜ்யத்தைப்பற்றிப் பேசியிருக்கவும் மாட்டார்கள். காங்கிரஸின் நோக்கங்களை அடையுமாறு ஸ்ரீ ஹியூம் எழுதியிருப்பதையும், வேலை செய்யுமாறு நமக்கு அவர் ஊக்கம் அளித்ததையும், பெரு முயற்சி செய்து நமக்கு விழிப் பூட்டியதையும் நாம் எவ்வாறு மறக்க முடியும்? ஸர். வில்லியம் வெட்டர்பர்ன் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் அதன் பொருட்டே அளித்திருக்கின்றார். அவர் எழுதியவை அனைத்தும் இன்றும் படிக்கத் தக்கன. அறிஞர் கோக்கலே நாட்டைச் சுய ஆட்சிக்குத் தகுதியாக்குமாறு, வறுமை விரதம் பூண்டு, தமது வாழ்க்கையில் இருபது வருஷ காலம் வேலை செய்தார். இப்பொழுதும் அவர் வறுமையில் வாழ்கின்றார்.* காலஞ் சென்ற நீதிவான் பத்ருதின் டயப்ஜியும் 'காங்கிரஸ்' வாயிலாக சுயராஜ்ய வித்தை நாட்டில் விதைத்தவர்களில் ஒருவர். இது போலவே, வங்காளத்திலும் தென்னாட்டிலும் பஞ்சாபிலும் மற்ற இடங்களிலும் இந்தியர்களும் ஆங்கிலேயர்களுமான இந்திய அபிமானிகளும் காங்கிரஸ் பிரமுகர்களும் வேலை செய்திருக்கிறார்கள்.

* இந்நூல் அவர் இறக்கு முன் எழுதப்பட்டது.

வா:—நிறுத்துங்கள், நிறுத்துங்கள். தாங்கள் மிகுந்த தூரம் போகிறீர்கள். எனது கேள்வியிலிருந்து தாங்கள் விலகிச் செல்கிறீர்கள். நான் தங்களிடம் சுய ஆட்சியைப்பற்றிக் கேட்டேன். தாங்கள் அந்நிய ஆட்சியைப்பற்றி விரிவாய்ப் பேசுகிறீர்கள். ஆங்கிலப் பெயர்களைக் காதினால் கேட்க நான் விரும்பவில்லை. அந்தப் பெயர்களைத் தாங்கள் எனக்குச் சொல்லிக்கொண்டு வருகிறீர்கள். இத்தகைய நிலைமையில் நாம் இருவரும் ஒரு முடிவுக்கு வரமுடியுமென்று எனக்குத் தோன்றவில்லை. சுயஆட்சி விஷயத்தை மட்டும் தாங்கள் பேசவேண்டுகிறேன். மற்றப் பேச்செல்லாம் எனக்கு வேண்டாம்.

பத்:—நீர் ஆத்திரப்படுகிறீர். நான் அவ்வாறிருக்க முடியாது. நான் சொல்வதை நீர் சிறிது நேரம் பொறுமையுடன் கேட்டால் நீர் விரும்புவது வருமென்று நினைக்கிறேன். விதை ஒரே நாளில் மரமாய் விடாதென்ற பழமொழியை நினைவில் வைத்துக்கொள்ளும். நீர் என் பேச்சை இடையில் தடுத்தமையும், இந்தியாவின் நன்மையைக் கருதுகிறவர்களைப்பற்றிக் கேட்க நீர் விரும்பாமையும், உமக்குச் சுய ராஜ்யம் வெகு தொலையில் இருக்கிறதென்று காட்டுகின்றன. உம்மைப் போல இன்னும் பலர் நமது நாட்டில் இருந்தால், நாம் ஒரு நாளும் எத்தகைய முன்னேற்றமும் அடைய முடியாது. இதனை நீர் கவனிக்கவேண்டும்.

வா:—சுற்றிச் சுற்றிப்பேசி நீர் எனது கேள்விக்கு விடையளியாது, கடத்திவிடக் கருதுகிறீரென்று எனக்குத் தோன்றுகிறது. நமது நாட்டின் நன்மையைக் கருதுபவர்களென்று தாங்கள் கருதுபவர்களை நான் அவ்வாறு கருதவில்லை. எனவே, அத்தகைய மனிதர்களைப் பற்றித் தாங்கள் கூறுவதை நான் ஏன் கேட்கவேண்டும்? நமது நாட்டிற்குத் 'தாதா' வென்று தாங்கள் கருதுகிற அவர் அதற்கு என்ன நலம் புரிந்திருக்கிறார்? ஆங்கில அதிகாரிகள் நீதி செய்வார்களென்றும், அவர்களுடன் நாம் ஒத்துழைக்க வேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார்.

பத்:—அந்தப் பெரிய மனிதரைப் பற்றி நீர் இழிவாகப் பேசுவது, நமக்கு வெட்கமான காரியமாகும். அவர் செய்த வேலையைப் பாரும். அவர் நாட்டின் ஊழியத்திற் கென்று தமது வாழ்க்கையை அர்ப்பணம் செய்திருக்கிறார். நாம் நமக்குத் தெரிந்த விஷயங்களை அவரிடமிருந்து படித்திருக்கிறோம். ஆங்கிலேயர்கள் நமது ஸ்வாதந்திரத்தை உறிஞ்சி விட்டார்களென்று நமக்குக் கற்பித்தவர் மகானான அந்த தாதாபாயே யாவர். அவருக்கு இன்னும் ஆங்கிலேயர்களிடம் நம்பிக்கை யிருந்தால், அதனால் என்ன தவறு? இளமையின் கொழுப்பால் நாம் அவரை விட ஓர் அடி முன்னே செல்லச் சித்தமாயிருந்தால், அதனால் தாதாபாயின் பெருமையைக் குறைக்கலாமா? அந்தக் காரணத்தால் நாம் அவரை விட அறிவாளிகளாய் விடுவோமா? மேலே ஏறுவதற்குக் காரணமாயிருந்த படியை உதைத்து வீழ்த்தா திருப்பது அறிவாளிகளுக்கு அடையாளமாகும். படிக்கட்டில் ஒரு படியை நீக்கினால் கட்டடம் முழுமையும் கீழே விழுந்து விடும். குழந்தைகளாயிருந்து நாம் வாலிபர்களாய் விட்டால் நாம் குழந்தைப் பருவத்தை இகழ்வதில்லை. ஆனால் நாம் நமது குழந்தைப் பருவநாட்களை மகிழ்ச்சியுடன் நினைக்கிறோம். பல வருஷகாலம் படித்து, ஆசிரியர் எனக்குச் சில விஷயங்களைக் கற்பித்த பின், அந்த ஆசிரியர் போட்ட அஸ்திவாரத்தின் மீது நான் சிறிது மிகுதியான விஷயங்களை அறிந்துவிட்டால், அதனால் நான் அந்த ஆசிரியரைவிட அறிவாளியாய் விடமாட்டேன். அவருக்கு எப்பொழுதும் நான் வணக்கம் செய்வேன். தாதாவின் விஷயமும் இதுபோன்றதே. நாட்டில் தேசியவுணர்ச்சி ஏற்படுவதற்கு அவர் மூலகர்த்தாவென்று நாம் அங்கீகரிக்கவேண்டும்.

வா:—தாங்கள் நன்கு பேசினீர்கள், தாதாபாய் வணக்கத்திற் குரியவரென்பது இப்பொழுது எனக்கு விளங்குகிறது. அவரும் அவரைப் போன்றவர்களும் இல்லாவிடின், இப்பொழுது நம்மைப் பற்றியுள்ள புதிய உணர்ச்சி அனேகமாய் நமக்கு ஏற்பட்டிராது. இங்ஙனமே கோகலேயைப்பற்றி எவ்

வாறு சொல்லலாம்? அவர் ஆங்கிலேயர்களுக்குப் பெரிய நண்பராயிருக்கிறார். நாம் ஸ்வராஜ்யத்தைப் பற்றிப் பேசுமுன்னர், நாம் அவர்களிடமிருந்து எவ்வளவோ கற்றுக்கொள்ள வேண்டுமென்றும், அவர்களுடைய அரசியல் ஞானத்தை அறிந்துகொள்ள வேண்டுமென்றும் அவர் சொல்லுகிறார். அவர் பேச்சைப் படிப்பதில் எனக்கு வெறுப்பு உண்டாய்விட்டது.

பத்:—அவ்வாறிருப்பின் அது உமது பொறுமைக் குறைவையே காட்டுகிறது. பெற்றோர்களின் நாமத்தைப் பற்றி அதிருப்தியுற்று, அவர்கள் தங்களுடன் சமமாக ஓடவில்லையென்று கோபமடையும் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களை அவமதிப்பவர்களென்று கருதுகிறோம். கோகலே தந்தையின் நிலையில் இருக்கிறார். அவர் நம்முடன் ஓடமுடியாவிட்டால் அதனால் என்ன? ஸ்வராஜ்ய பதவியை அடைய விரும்பும் ஒரு நாட்டார் தங்கள் முன்னோர்களை இகழ்ந்து பேசலாகாது. நமது பெரியோர்களுக்கு நாம் பெருமை அளிக்காவிடின், நாம் பயனற்றவர்களாய் விடுவோம். முதிர்ந்த யோசனைகள் உள்ளவர்களே தங்களை ஆட்சிபுரியத் தகுதியுள்ளவர்கள். அவசர புத்தியுள்ளவர்களால் அது முடியாது. மேலும், நமது நாட்டாரின் கல்விக்காக கோகலே தம்மை அர்ப்பணம் செய்தகாலத்தில் அவரைப்போல நாட்டில் எத்தனை பேர் இருந்தனர்? கோகலே என்ன செய்த போதிலும் அவர் நல் லெண்ணத்துடனும், நாட்டிற்குத் தொண்டு புரியும் கருத்துடனும் அவர் செய்கிறாரென்று நான் உறுதியாக நம்புகிறேன். அவசியமானால் அவர் நாட்டிற்காக உயிரையும் அளிப்பார்; தாய் நாட்டின்மீது அவருக்கு அவ்வளவு பக்தியிருக்கிறது. அவர் சொல்லுவதெல்லாம் எவரையும் புகழ்வதற்காக அல்ல; உண்மை யென்று நம்புவதால்தான் அவர் சொல்லுகிறார். எனவே, அவர் மீது நாம் மிகவும் பெரிய மதிப்பு வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

வா:—அவ்வாறானால் ஒவ்வொரு விஷயத்திலும் நாம் அவரைப் பின்பற்றி நடப்பதா?

பத்:—நான் அவ்வாறு ஒன்றும் சொல்லவில்லை. மனப்பூர்வமாக நாம் அவர் கருத்தினின்று மாறுபட்டால், அவரைப் பின்பற்றாமல், நமது மனச்சாட்சி கூறுமாறே நடக்குமாறு அவரே நமக்குப் புத்தி சொல்லுவார். நமது முக்கிய நோக்கம் அவர் வேலையைத் தாழ்த்திக் கூறுவதல்ல; நம்மைவிட அவர் மிகவும் பெரியவரென்றும், அவர் நாட்டிற்குச் செய்துள்ள வேலையை நோக்க, நமது வேலை மிகவும் அற்பமென்றும் உறுதியாக அறிவோம். பல பத்திரிகைகள் அவரைப்பற்றி இழிவாக எழுதுகின்றன. அவ்வாறு எழுதுவதைப்பற்றிக் கண்டிப்பது நமது கடமை. கோகலே போன்றவர்களை சுய ராஜ்யத்திற்குத் தூண்களென்று நாம் கருதவேண்டும். பிறருடைய சிந்தனைகள் தீயவையென்றும், நமது சிந்தனைகள் மட்டும் நல்லவையென்றும், நம்மினின்று மாறுபடும் கொள்கையுடையவர்கள் நாட்டிற்குப் பகைவர்களென்றும் கூறுவது தீய வழக்கமாகும்.

வா:—தாங்கள் கூறுவதை நான் இப்பொழுது ஒருவாறு அறியத் தொடங்கியிருக்கிறேன். நான் அந்த விஷயத்தைப் பற்றிச் சிந்திக்கவேண்டும். ஆனால் தாங்கள் ஹியூமைப் பற்றியும் வெட்டர்பர்னைப்பற்றியும் கூறுவது எனக்கு விளங்கவில்லை.

பத்:—அதே விதி ஆங்கிலேயர்களுக்கும் இந்தியர்களுக்கும் பொருந்தும். ஆங்கிலேயர்கள் அனைவரும் தீயவர்கள் என்ற கூற்றை நான் ஒருகாலும் அங்கீகரிக்க மாட்டேன். இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வேண்டுமென்று அநேக ஆங்கிலேயர்கள் விரும்புகிறார்கள். மற்றவர்களைவிட ஆங்கிலேயர்கள் ஒருவாறு மிகுந்த சுய நல முள்ளவர்களென்பது உண்மையே. ஆனால் அதனால் ஒவ்வோர் ஆங்கிலேயரும் தீயவரென்று கூறலாகாது. நீதியை நாடுகின்ற நாம் மற்றவர்களுக்கும் நீதி செய்யவேண்டும். ஸர். வில்லியம் வெட்டர்பர்ன் இந்தியாவுக்குத் தீங்கை விரும்பவில்லை. இந்த விஷயம் நமக்குப் போதுமானது. நாம் நியாயமாய் நடந்தால் இந்தியா மிக விரைவில் விடுதலை பெறு

மென்பதை, நமது பேச்சில் நாம் போகப் போக நீர் அறிவீர். ஒவ்வோர் ஆங்கிலேயனையும் நாம் நமது பகைவனாகக் கருதி நாம் வெறுப்போமாகுல், நமக்குச் சுயராஜ்யம் தாமதமாகு மென்பதையும் நீர் அறிவீர். ஆனல் நாம் அவர்கள் விஷயத்தில் நியாயமாயிருந்தால் நமது நோக்கத்தை அடையும் நமது முயற்சியில் நாம் அவர்கள் ஆதரவைப் பெறுவோம்.

வா:—இவையெல்லாம் மூடத்தனமென்று எனக்கு இப்பொழுது தோன்றுகிறது. ஆங்கிலேயர் ஆதரவும் நாம் சுயராஜ்யம் பெறுதலும் ஒன்றுக்கொன்று நேர்மாருனவை. நாம் சுயராஜ்யம் பெறுவதை ஆங்கிலேயர்கள் எவ்வாறு பார்த்துக்கொண்டு இருப்பார்கள்? ஆனல் இக்கேள்விக்குத் தாங்கள் இப்பொழுது முடிவு செய்ய வேண்டியதில்லை. அதில் காலத்தைச் செலவிடுவது பயனற்ற காரியம். நமக்குச் சுயராஜ்யம் எவ்வாறு கிடைக்குமென்று தாங்கள் காட்டுகின்ற பொழுது தங்கள் கருத்துக்களை நான் ஒருகால் அறிந்து கொள்வேன். ஆங்கிலேயர்களின் உதவியைப்பற்றிப் பேசித் தங்களுக்கு விரோதமாக என்னைச் செய்து விட்டீர்கள். எனவே இந்த விஷயத்தை இன்னும் தொடர்ந்து பேசா திருக்குமாறு தங்களை வேண்டிக் கொள்கிறேன்.

பத்:—அவ்வாறு செய்ய நான் விரும்பவில்லை. என்மீது உமக்கு வெறுப்பு ஏற்பட்டிருப்பது பெரிய விஷயமல்ல. தொடக்கத்தில் விருப்ப மில்லாத விஷயங்களை நான் சொல்லுவது நன்றே. உமது வெறுப்பைப் பொறுமையாக நீக்க முயல்வது இனி எனது கடமையாகும்.

வா:—தாங்கள் இறுதியாகச் சொன்னதை நான் விரும்புகிறேன். அதனுல் நான் விரும்புவதைச் சொல்ல எனக்குத் துணிவு உண்டாகிறது. ஒரு விஷயம் இன்னும் எனக்கு விளக்கவில்லை. சுயராஜ்யத்திற்குக் காங்கிரஸ் எவ்வாறு கால் கோலியதென்பது எனக்குத் தெரியவில்லை.

பத்:—பார்ப்போம். காங்கிரஸ் மகா சபை நாட்டின் பல பகுதிகளிலிருந்து, இந்தியர்களை ஒன்று சேர்த்து, தேசிய உணர்ச்சியில் நமக்கு ஊக்கம் அளித்தது. அரசாங்கத்தார் அதனை அதிருப்தியுடன் நோக்கி வந்தனர். அரசியலையும், அதன் செலவையும் ஜனங்கள் நிர்வகிக்க வேண்டுமென்று காங்கிரஸ் எப்பொழுதும் வற்புறுத்தி வந்திருக்கிறது. கனடாவின் முறையில் சுயஆட்சி வேண்டுமென்று அது எப்பொழுதும் விரும்பியிருக்கிறது. அது நமக்குக் கிடைக்குமா, கிடையாதா, அதை நாம் விரும்புகிறோமா, இல்லையா, அதனைவிட விரும்பத்தக்க பிறிதொன்றுஇல்லையா—இவை யெல்லாம் வேறு விஷயங்கள். நான் காட்ட விரும்புவதெல்லாம் காங்கிரஸ் சுய ராஜ்யத்திற்கு ஓர் அஸ்திவாரம் உண்டுபண்ணிய தென்பதே. அந்தப் பெருமையை அதற்கு அளியாதிருத்தல் நியாயமல்ல. நாம் அவ்வாறு செய்தல் நன்றி கெட்ட காரியம் மட்டுமன்று; நமது நோக்கம் நிறைவேறுவதற்கும் தடையாகும். நாம் ஒரு ஜாதியாய் முன்னேறுவதற்கு இடையூறாய் நிற்பதென்று காங்கிரஸைக் கருதுவதால் நாம் அதனைப் பயனுள்ளதாக்கிக் கொள்ள முடியாமற் போய்விடும்.

அதிகாரம்—உ.

வங்காளப் பிரிவினை

வா:—விஷயத்தைத் தாங்கள் கூறுமாறு நோக்கும்பொழுது சுயராஜ்யத்திற்குக் கால் காங்கிரஸால் கோலப்பட்டதென்று சொல்வது சரியென்று தோன்றுகிறது. ஆனால் அதனை உண்மையான விழிப்பென்று கருத முடியாதென்பதைத் தாங்கள் ஒத்துக் கொள்வீர்கள். எப்பொழுது, எவ்வாறு உண்மையான விழிப்பு ஏற்பட்டது?

பத்:—வித்து எப்பொழுதும் காணப்படுவதில்லை. அது பூமியின் கீழ் வேலைசெய்து, தான் அழிந்துபோகிறது. பூமியின் மேல் எழும்பும் மரத்தையே நாம் காண்கிறோம். காங்கிரஸ் விஷயமும் இது போன்றதே. ஆயினும், தாங்கள் கூறுகிற உண்மையான விழிப்பு வங்காளப்பிரிவினைக்குப் பின் ஏற்பட்டது. அதற்காக நாம் கர்ஸன் பிரபுவுக்கு நன்றி பாராட்டவேண்டும். வங்காளப் பிரிவினைக் காலத்தில் வங்காளிகள் கர்ஸன்பிரபுவுடன் வாதாடிப் பார்த்தார்கள். ஆனால் அதிகாரப் பெருமையால் அவர் அவர்கள் விண்ணப்பங்களை யெல்லாம் பொருட்படுத்தவில்லை. இந்தியர்கள் கூக்குரலிடமட்டும் செய்வார்களென்றும், பயனுள்ள வேலைகளை அவர்கள் செய்ய முடியாதென்றும் அவர் கருதிக் கொண்டார். அவர் இந்தியர்களை இழிவாய்ப் பேசினார். எவ்வளவோ எதிர்த்தும் அவர் வங்காளத்தைப் பிரிவு செய்தார். அந்த நாளைப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைப் பிரித்த நாளென்று கருதலாம். இந்தப் பிரிவினையால் பிரிட்டிஷ் அதிகாரத்திற்கு ஏற்பட்டது போன்ற அதிர்ச்சி வேறு எந்தச் செயலாலும் ஏற்படவில்லை. ஆனால் இந்தியாவுக்குச் செய்த மற்ற அநீதிகள் பிரிவினையால் ஏற்பட்டதை விடக் குறைந்தனவென்பது இதன் கருத்தல்ல. உப்புவரி ஒரு சிறிய அநீதி யல்ல. இது

வென்ற பலத்தைப் பின்னர் நாம் அறியலாம். ஆனால் ஜனங்கள் பிரிவினையை எதிர்க்கச் சித்தமா யிருந்தார்கள். அவ்வமயம் ஜனங்களின் உணர்ச்சி மிகவும் உச்ச நிலையில் இருந்தது. தலைவர்களான அநேக வங்காளிகள் தங்கள் உடைமைகள் அனைத்தையும் இழக்கச் சித்தமா யிருந்தார்கள். அவர்கள் தங்கள் சக்தியை அறிந்து கொண்டார்கள். அதனால் தான் போராட்டம் ஏற்பட்டது. இப்பொழுது அதனை அடக்க முடியாது. அதனை அடக்கவும் அவசியம் இல்லை. பிரிவினை போய் விடலாம்; வங்காளத்தை மீட்டும் ஒன்று சேர்க்கலாம். ஆனால் ஆங்கில (அரசாங்க)ப்படையில் ஏற்பட்டுள்ள துவாரம் இருக்கவே செய்யும்; அது நாடோறும் விரிவடைந்து வரும். இந்தியா விழிப்படைந்துவிட்டது; இனி உறங்கப் போவதில்லை. வங்காளப் பிரிவினையை ஒழிக்கவேண்டுமென்று கேட்பது சுயராஜ்யம் வேண்டுமென்று கேட்பதற்கு நிகராகும். வங்காளத்திலுள்ள தலைவர்கள் இதனை அறிவார்கள்; பிரிட்டிஷ் அதிகாரிகளும் இதனை உணர்வார்கள். அதனால்தான் வங்காளப் பிரிவினை இன்றும் ஒழிக்கப் படவில்லை.* எனவே, எந்த நாடும் ஐக்கிய மடைந்துவிடும். ஒரு நாட்டார் ஒரே நாளில் ஒன்று பட்டுவிடுவதில்லை. அதற்குப் பல ஆண்டுகள் செல்லும்.

வா:—இந்தப் பிரிவினையால் ஏற்பட்ட பயன்கள் யாவை?

பத்:—குறைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு அரசனை அணுக வேண்டுமென்றும், விமோசனம் ஏற்படாவிட்டால், மீண்டும் விண்ணப்பஞ் செய்வதையன்றி, நாம் மௌனமாய் உட்கார்ந்திருக்கவேண்டுமென்றும் நாம் கருதியிருந்தோம். வங்காளப் பிரிவினைக்குப்பின், விண்ணப்பங்களுக்குப்பின், பின்பலம் இருக்கவேண்டுமென்றும், வருந்துவதற்குத் திறமையுள்ளவர்களாயிருக்கவேண்டுமென்றும் ஜனங்கள் அறிந்துகொண்டார்கள். இந்தப் புதிய உணர்ச்சியை வங்காளப் பிரிவினையின் முக்கிய

---

* இப்பொழுது ஒழிக்கப்பட்டதென்பதை நேயர்கள் அறிவார்கள். மொ—பெ.

பயமென்று கருதவேண்டும். அந்த உணர்ச்சி, பத்திரிகைகளில் வெளிப்படையாக எழுதிய வியாசங்களால் விளங்கியது. இதனாலும் ஜனங்கள் அச்சத்துடனும், அந்தரங்கமாகவும் சொல்லி வந்த விஷயங்களை யெல்லாம் பகிரங்கமாகச் சொல்லவும், எழுதவும் ஆரம்பித்தார்கள். சுதேசிமுயற்சி தொடங்கியது. சிறியவர்களும் பெரியவர்களுமான ஜனங்கள் ஆங்கிலேயர் முகத்தைக் கண்ட மாத்திரத்தில் ஓடிவிடுவது வழக்கமாயிருந்தது. இப்பொழுது அந்த அச்சம் ஒழிந்து விட்டது. சச்சரவிடவேனும், சிறைக்குச் செல்வதற்கேனும் அவர்கள் அஞ்சவில்லை. பாரத மக்களில் சிறந்தவர்களில் சிலர் இப்பொழுது நாடுகடத்தப் பட்டிருக்கின்றனர். இதற்கும், அம்பா விண்ணப்பஞ் செய்வதற்கும் ஒருவாறு வித்தியாசம் உண்டு. இவ்வாறு ஜனங்களுக்கு உணர்ச்சி ஏற்பட்டது. வங்காளத்தில் தோன்றிய உணர்ச்சி வடக்கே பஞ்சாபிற்கும், தெற்கே கன்னியா குமரிக்கும் எட்டி விட்டது.

வா:—இதனைத் தவிர வேறு முக்கிய பயன் ஏதாவது உண்டா?

பத்:—வங்காளப் பிரிவினை ஆங்கிலக் கப்பலில் ஒரு துவாரம் உண்டு பண்ணியது மட்டுமன்றி, நமக்குள்ளும் பிரிவை உண்டு பண்ணி யிருக்கிறது. பெரிய சம்பவங்களால், எப்பொழுதும் பெரும் பயன்களே ஏற்படுகின்றன. நமது தலைவர்கள் மிதவாதிகளென்றும், அமிதவாதிகளென்றும் இரண்டு கட்சியாகப் பிரிந் திருக்கிறார்கள். அவர்களை நிதானக் கட்சியா ரென்றும், அவசரக் கட்சியா ரென்றும் கூறலாம். சிலர் மிதவாதிகளைக் கோழைக ளென்றும் அமிதவாதிகளைத் தீரர்களென்றும் கூறுகிறார்கள். ஒவ்வொருவரும் தங்கள் மனம் போனவாறு அந்தப் பதங்களுக்குப் பொருள் கூறுகிறார்கள். இரண்டு கட்சிக்கும் இடையில் பகைமை ஏற்பட்டிருக்கிறது என்பது மட்டும் உண்மையான விஷயம். ஒரு சார்பார் மற்றொரு சார்பார் மீது அவநம்பிக்கை கொண்டு, அவர்கள் தீய நோக்கம் கொண்டிருப்பதாகக்

கூறுகின்றனர். சூரத்தில் காங்கிரஸ் கூடிய பொழுது அனேகமாய் ஒரு கலகமே ஏற்பட்டு விட்டது. இந்தப் பிரிவு நாட்டிற்கு நல்ல தல்லவென்று நான் கருதுகிறேன். ஆனால் இத்தகைய பிரிவுகள் நீண்டகாலம் நிலைத்திரா வென்றும் நான் நினைக்கிறேன். இவை எவ்வளவு காலம் நிலைத்திருக்கு மென்பது தலைவர்களைப் பொறுத்திருக்கிறது.

அதிகாரம்—௩.

அதிருப்தியும் அமைதியின்மையும்

வா:—ஏனையே வங்காளப் பிரிவினையை நமது நாட்டின் விழிப்புக்கு ஒரு காரணமென்று தாங்கள் கருதுகிறீர்கள்? அத னால் ஏற்பட்டுள்ள அமைதியின்மையைத் தாங்கள் நலமென்று கருதுகிறீர்களா?

பத்:—ஒருவன் உறக்கத்தினின்று எழும்பொழுது காலைக் கையை மடக்கிக்கொண்டு புரளுகிறான். அவன் முழுமையும் விழிப்படையச் சிறிது நேரம் செல்கிறது. அதுபோலவே வங் காளப் பிரிவினை விழிப்பை உண்டு பண்ணியுள்ள போதிலும் உறக்கமயக்கம் இன்னும் தெளியவில்லை. நாம் இன்னும் கைகால் களை மடக்கிக்கொண்டு புரண்டு கொண்டிருக்கிறோம். உறக்கத்திற்கும் விழிப்பிற்கும் இடையிலுள்ள நிலை எவ்வாறு இன்றியமையாததோ அது போலவே இந்தியாவில் இப்பொ ழுது ஏற்பட்டுள்ள அமைதியின்மையையும் அவசியமான தென்று கருதவேண்டும். எனவே அது சரியான நிலைதான். நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டிருக்கிற தென்ற அறிவே அநேகமாய் நம்மை அதனின்று நீக்கிவிடும். உறக்கத்தினின்று எழுந்து விட்டால் நாம் மயக்கத்திலேயே இருப்பதில்லை; ஆனால் நமது திறமைக்கேற்ப விரைவாகவோ, தாமதமாகவோ, நாம் முற்றிலும் விழிப்பெய்தி விடுகிறோம். அதுபோலவே ஒருவரும் விரும்பாத இந்த அமைதியின்மையினின்று நாம் விரைவில் நீங்கிவிடுவோம்.

வா:—வேறு வகையான அமைதியின்மை யாது?

பத்:—அமைதியின்மை, உண்மையில் அதிருப்தியேயாகும். அதிருப்தியை இப்பொழுது அமைதியின்மை யென்று கூறு

கிறார்கள். காங்கிரஸ் காலத்தில் அதனை அதிருப்தி யென்று கூறிவந்தார்கள். இந்தியாவில் அதிருப்தி பரவவேண்டுமென்று ஸ்ரீ ஹியூம் எப்பொழுதும் சொல்லி வந்தார். இந்த அதிருப்தி மிகவும் பயனுள்ள விஷயமாகும். ஒருவன், அவனது தற்கால நிலையில் திருப்தியுற்றிருக்கிற வரை அதனின்று விலக்குவது கஷ்டமான காரியம். எனவே, சீர்திருத்தம் ஏற்படவேண்டுமானால் அதற்கு முன்னர் அதிருப்தி ஏற்படவேண்டும். நம்மிடமுள்ள பொருள்களின் மீது வெறுப்பு ஏற்படும்பொழுது தான், அவற்றை நாம் எறிந்துவிடுகிறோம். இந்தியர்களும், ஆங்கிலேயர்களும் இயற்றிய பெரிய நூல்களைப் பயின்றபின்னர் நம்மவர்களுக்குள் இத்தகைய அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. அதிருப்தி அமைதியின்மையை உண்டுபண்ணியது. அமைதியின்மையால், அநேகர் மரணம் அடையவும் அநேகர் சிறைக்குச் செல்லவும், அநேகர் தேசப் பிரஷ்டத்தை அடையவும் நேர்ந்தது. இத்தகைய காரியங்கள் இன்னும் நடைபெறும். இவ்வாறுதான் இருக்கவேண்டும். இவை யனைத்தையும் நற்குறிகளென்று கருதலாம்; ஆனால் இவற்றால் தீயபயன்களும் விளையலாம்.

அதிகாரம்—௪

சுயராஜ்யம் என்பது யாது?

வா:—இந்தியாவை ஒன்று படுத்துவது காங்கிரஸ் செய்த வேலையையும், வங்காளப் பிரிவினை நாட்டில் விழிப்பை உண்டு பண்ணிய விதத்தையும், அதிருப்தியும் அமைதியின்மையும் ஏற்பட்டிருக்கும் பரவிய வரலாற்றையும் நான் இப்பொழுது அறிந்துகொண்டேன். சுயராஜ்யத்தைப் பற்றித் தங்கள் கருத்துக்களை இப்பொழுது நான் அறிய விரும்புகிறேன். இவ் விஷயத்தில் நம் இருவர் கருத்தும் மாறுபட்டிருக்கின்றனவென்று நான் நினைக்கிறேன்.

பத்:—சுயராஜ்யம் என்ற சொல்லுக்கு நாம் இருவரும் வெவ்வேறு பொருள் கொண்டிருக்கலாம். நீரும் நானும் இந்தியர்கள் அனைவரும் சுயராஜ்யம் பெற ஆத்திரம் கொண்டிருக்கிறோம். ஆனால் அது எத்தன்மையதென்று நமக்குள் ஓர் உறுதி ஏற்படவில்லை. ஆங்கிலேயர்களை நாட்டை விட்டு ஓட்டி விட வேண்டுமென்று பலர் சொல்லுகின்றனர்; ஆனால் அவ்வாறு ஏன் செய்யவேண்டுமென்று பலர் சரியாகச் சிந்தித்திருக்கின்றனரென்று தோன்றவில்லை. நான் ஒன்று கேட்கிறேன். நமக்கு வேண்டியவை அனைத்தும் கிடைத்துவிட்டால் ஆங்கிலேயர்களை நாட்டை விட்டுத் துரத்துவது அவசியமா?

வா:—நான் அவர்களை ஒன்று தான் கேட்பேன்: அதாவது "தயவு செய்து எங்கள் நாட்டை விட்டுப்போய் விடுங்கள்" என்று கூறுவேன்..

பத்:—நல்லது. அவ்வாறு ஆங்கிலேயர்கள் போய்விட்டார்களென்று வைத்துக்கொள்வோம். பின்னர் நீர் என்ன செய்வீர்?

வ:—இந்தக் கேள்விக்கு இந்த நிலைமையில் விடையளிக்க முடியாது. அவர்கள் போன பின்னர் உள்ள நிலைமை அவர்கள் போகும் மாதிரியைப் பெரிதும் பொறுத்திருக்கிறது. தாங்கள் கூறுகின்றவாறு அவர்கள் போய் விட்டார்களென்றால், அவர்கள் அரசாங்க அமைப்பை வைத்துக் கொண்டு, ஆட்சி நடத்துவோம். நாம் சொன்னவுடன் அவர்கள் போய் விட்டார்களென்றால், சேனை முதலியவை நமது கையில் சித்தமா யிருக்கும். ஆகவே, அரசாங்கத்தை நடத்துவதில் நமக்குத் தொல்லை யிராது.

ப:—நீர் அவ்வாறு நினைக்கலாம். நான் நினைக்கவில்லை. ஆனும் அந்த விஷயத்தை நான் இப்பொழுது பேச மாட்டேன். நான் உமது கேள்விக்குப் பதில் சொல்ல வேண்டும். உம்மிடம் பல கேள்விகள் கேட்பதாலேயே நான் அவ்வாறு செய்யக் கூடும். ஆங்கிலேயர்களை ஏன் துரத்த விரும்புகிறீர்?

வ:—இந்தியா அவர்கள் அரசாங்கத்தால் வறுமையடைந்து விட்டது. வருஷந்தோறும் அவர்கள் நமது பணத்தைக் கொண்டு போகிறார்கள். மிகவும் முக்கியமான உத்தியோகங்களையெல்லாம் தங்களுக்கே வைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் நம்மை அடிமை நிலையில் வைத்திருக்கிறார்கள். நம்மை இழிவாக நடத்துகிறார்கள்; நமது உணர்ச்சியைப் பொருட்படுத்துவதில்லை.

ப:—அவர்கள் நமது பொருளை வெளியே கொண்டுபோகாமல் இருந்தால், மரியாதையாக நடந்து கொண்டால், நமக்குப் பொறுப்புள்ள பதவிகளை அளித்தால் அப்பொழுதும் அவர்கள் இங்கே இருப்பது தீமையென்று கருதுவீரா?

வ:—இது பயனற்ற கேள்வி. புலி தனது இயற்கையை மாற்றிக் கொண்டால் அதனுடன் பழகலாமா வென்று கேட்பது போல் இருக்கிறது இந்தக் கேள்வி. இத்தகைய கேள்வியினால் காலம் வீணாகும். புலி தனது இயற்கையை மாற்றிக் கொள்

னும்பொழுது ஆங்கிலேயர்கள் தங்கள் இயற்கையை மாற்றிக் கொள்வார்கள். இது முடியாத காரியம்; முடியுமென்று கருதல் அநுபவத்திற்கு ஒத்ததல்ல.

பத்:—கானடா வாசிகளுக்கும் தென்ஆப்பிரிக்கா வாசிகளுக்கும் கிடைத்திருப்பது போன்ற சுய ராஜ்யம் நமக்குக் கிடைத்தால் அது போதுமா?

வா:—இந்தக் கேள்வியும் பயனற்றது. அவர்களுக்குள்ள அதிகாரம் நமக்கும் இருந்தால் நமக்குக்கிடைக்கும். அப்பொழுது நாம் நமது கொடியை உயர்த்துவோம். ஜப்பானைப்போல இந்தியாவும் இருக்கவேண்டும். நமக்குக் கடற்படையும், தரைப் படையும் இருக்கவேண்டும். நமது பெருமைகள் நமக்கு இருக்கவேண்டும். அப்பொழுது பாரத நாட்டின் வாக்கு உலகமெங்கும் கேட்கும்.

பத்:—நன்று கூறினீர். அதாவது, ஆங்கிலேயர்களை ஒழித்துவிட்டு ஆங்கில ஆட்சியை வைத்துக்கொள்ள வேண்டுமென்று நீர் விரும்புகிறீர். உமக்குப் புலிக்குணம் வேண்டும், ஆனால் புலி வேண்டாம். அதாவது இந்தியாவை நீர் ஆங்கில நாடாகச் செய்வீர்; அவ்வாறாகும்பொழுது அதற்கு ஹிந்துஸ்தானமென்ற பெயர் இராது; ஆங்கிலஸ்தானம் என்ற பெயர் ஏற்படும். நாம் விரும்பும் சுயராஜ்யம் இதன்று.

வா:—சுயராஜ்யத்தைப்பற்றி எனது அபிப்பிராயத்தைத் தங்களுக்குத் தெரிவித்து விட்டேன். நாம் பெற்றுள்ள கல்விப்பயிற்சி எவ்வித பயனையும் கொண்டதென்றால், ஸ்பென்சர், மில் முதலியவர்களின் நூல்களுக்கு மதிப்புண்டென்றால், ஆங்கில பார்லிமெண்டு சபை சகல சபைகளுக்கும் தாய்ச் சபையென்றால், நாம் ஆங்கிலேயர்களின் முறையைப் பின்பற்றலாமென்று நான் உறுதியாய்க் கருதுகிறேன்; அவர்கள் நாட்டில் ஓர் இலைபெறப் பிறரை அவர்கள் எவ்வாறு விடுவதில்லையோ அவ்வாறு நாமும் அவர்களை வேறும், மற்றவர்களை வேறும்

நமது நாட்டில் ஓர் இலை பெற விடலாகாது. இவ்வளவு வரை நாம் அவர்களைப் பின் பற்றலாம். அவர்கள் தங்கள் நாட்டில் செய்திருப்பது போல வேறு எந்த நாட்டிலும் செய்யப்படவில்லை. எனவே, அவர்கள் அரசாங்க முறைகளை நமது நாட்டில் ஏற்படுத்துவது நியாயமாகும். ஆனால் தங்கள் கருத்தென்ன?

பத்:—இன்னும் பொறுக்கவேண்டும். நாம் பேசிக்கொண்டு போகும் பொழுதே எனது கருத்து வெளியாகும். சுயராஜ்யத்தின் உண்மையான தன்மையை அறிவது தங்களுக்கு எவ்வளவு எளிதாகத் தோன்றுகிறதோ, அவ்வளவு கஷ்டமாகத் தோன்றுகிறது எனக்கு. எனவே, நான் இப்பொழுது தாங்கள் சுயராஜ்யம் என்று கூறுவது உண்மையில் சுயராஜ்யமல்லவென்று விளக்க முயல்வதோடு மட்டும் நிற்கிறேன்.

அதிகாரம்—ரு

இங்கிலாந்தின் நிலைமை

வா:—தாங்கள் கூறுவதினின்றும், இங்கிலாந்தின் அரசியல் முறை விரும்பத்தக்கதல்ல வென்றும், அது நாம் பின்பற்றத்தக்க தல்லவென்றும் நான் ஊகிக்கிறேன்.

பத்:—நீர் ஊகிப்பது சரியே. இதுகாலை இங்கிலாந்தின் நிலைமை இரங்குதற்குரியது. அந்த நிலைமையை நமது இந்தியா என்றும் அடையக்கூடாதென்று நான் இறைவனை வேண்டுகின்றேன். சபைகளுக்கெல்லாம் தாய்ச் சபையென்று நீர் கூறும் ஆங்கிலப் பார்லிமெண்டு சபை ஒரு மலடியைப்போலவும் வியபிசாரியைப் போலவும் இருக்கிறது. இவை இரண்டும் கடுமையான பதங்கள்; ஆனால் சரியாகப் பொருந்தும். அந்தப் பார்லிமெண்டு தானாக ஒரு நன்மையையும் இதுவரை செய்ததில்லை எனவே, அதனை ஒரு மலடிக்கு நிகராகக் கூறினேன். அந்தப் பார்லிமெண்டின் இயற்கையான தன்மை வெளியினின்று நிர்ப்பந்தம் ஏற்பட்டாலன்றி, அது ஒன்றும் செய்யமுடியாததாயிருக்கிறது. அடிக்கடி மாறிவரும் மந்திரிகளின் நிர்வாகத்தில் இருப்பதால் அதனை வியபிசாரிக்கு இணையாகக் கூறினேன்; இன்று அது ஸ்ரீ ஆஸ்க்வித்தின் தலைமையில் இருக்கிறது; நாளை அது ஸ்ரீ பால்பரின் தலைமையில் வரலாம்.

வா:—இதனைத் தாங்கள் விகடமாய்க் கூறியிருக்கிறீர்கள். 'மலடி' யென்ற வார்த்தை பொருத்தமானதல்ல. பார்லிமெண்டார் பொதுஜனங்களால் தெரிந்தெடுக்கப்படுதலின், பொதுஜனங்களின் கருத்துக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும். இது அதன் இயற்கை.

பத்.—நீர் சொல்லுவது தவறு. அதனை இன்னும் சிறிது நுணுக்கமாய் ஆராய்வோம். சிறந்த மனிதர்களை ஜனங்கள் தெரிந்தெடுக்கிறார்களென்று கருதப்படுகிறது. அவர்கள் சம்பளமின்றி, உழைக்கிறார்கள்; ஆதலால் பொது நலத்தின் பொருட்டு, உழைக்கிறார்களென்று கருதவேண்டும். அவர்களைத் தெரிந்தெடுப்பவர்கள் கல்விப் பயிற்சி யுள்ளவர்களென்று கருதப்படுகிறார்கள். எனவே அவர்கள் தெரிந்தெடுப்பதில் தவறிழைப்பதில்லை யென்று கருதவேண்டும். அத்தகைய பார்லிமெண்டுக்கு விண்ணப்பங்களின் தூண்டுதலோ வேறு எவ்வித தூண்டுதலோ வேண்டுவதில்லை. அதன் பயன் நாள் ஏற, நாள் ஏற வெளிப்படையாக விளங்குமாறு, அதன் வேலை அவ்வளவு ஒழுங்காய் நடக்கவேண்டும். ஆனால் உண்மையில், பார்லிமெண்டு அங்கத்தினர்கள் வேஷதாரிகளென்றும், சுயநல முள்ளவர்களென்றும் பொதுவாக அங்கீகரிக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் தமது சிறிய சுய நலத்தைக் கருதுகிறார். அச்சத்தினால் தான் ஏதோ காரியம் நடக்கிறது. இன்று செய்த காரியத்தை நாளை இல்லை யென்று செய்துவிடலாம். இறுதியாக முடிந்த விஷயமென்று ஒரு விஷயத்தையும் சொல்ல முடியாது. மிகவும் முக்கியமான விஷயம் பேசப்படும்பொழுது பார்லிமெண்டு மெம்பர்கள் காலையும் கையையும் பரப்பித் தூங்கக் கண்டிருக்கிறோம். சில சமயங்களில், கேட்பவர்கள் அலுத்துப்போகும் வரை அங்கத்தினர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள். கார்லைல் என்ற அறிஞர் அதனை 'உலகத்தின் பேச்சுக் கடை' யென்று கூறினார். அங்கத்தினர்கள் எதனையும் சிந்தியாமல், தங்கள் கட்சி எதுவோ அதற்கு 'ஓட்' கொடுக்கிறார்கள். அவர்கள் 'ஒழுங்கு' அவ்வாறு செய்யக் கட்டுப்படுத்துகிறது. எந்த அங்கத்தினரேனும், இதினின்றும் விலக்காக, தமது சித்தப்படி 'ஓட்' கொடுத்தால், அவர் பதிதராகக் கருதப்படுகிறார். பார்லிமெண்டார் செலவிடுகிற பொருளையும் காலத்தையும் சில நல்லோர்களிடம் ஒப்புவித்தால் ஆங்கில நாட்டார் இன்று உய

னிலும் மிகவும் உயர்ந்த நிலையில் இருப்பார்கள். பார்லிமெண்டு ஜனங்களின் விலை யுயர்ந்த விளையாட்டுப் 'பொம்மை' யாகவே யிருக்கிறது. இவை எவ்வாற்றானும், எனக்கு மட்டும் உள்ள கொள்கைகளல்ல. சில பெரிய ஆங்கில அறிஞர்கள் இவ்வாறு கூறியிருக்கிறார்கள். அந்தப் பார்லிமெண்டு மெம்பர்களில் ஒருவர் உண்மையான கிறிஸ்தவர் அதில் மெம்பரா யிருக்க முடியாதென்று சிறிது காலத்திற்கு முன்னர் சொன்னார். அது குழந்தை யென்று மற்றொருவர் கூறினார். எழுநூறு ஆண்டுகள் வாழ்ந்த பின்னரும் அது இன்னும் குழந்தையாக இருந்தால் குழந்தைப்பருவத்தினின்று வளர்வது எப்பொழுது?

வா:—தாங்கள் என்னைச் சிந்திக்குமாறு செய்து விட்டீர்கள். தாங்கள் சொல்வதை யெல்லாம் நான் உடனே ஏற்றுக்கொள்வேனென்று தாங்கள் எதிர்பார்த்தலாகாது. தாங்கள் மூன்றிலும் புதிய கருத்துக்களை வெளியிடுகிறீர்கள். அவற்றை நான் சிந்திக்க வேண்டும். 'வியபிசாரி' என்ற விஷயத்தைத் தாங்கள் இப்பொழுது அன்புகூர்ந்து விளக்குவீர்களா?

பத்:—எனது கருத்துக்களை நீர் உடனே ஏற்றுக்கொள்ள முடியாதென்பது நியாயமே. இந்த விஷயத்தைப் பற்றிய நூல்களை நீர் படித்தால் அதன் உண்மை சிறிது விளங்கும். பார்லிமெண்டுக்கு உண்மையான தலைவர் இல்லை. முதன் மந்திரியின் ஆதிக்கத்தில் அதன் வேலை ஒழுங்காய் நடைபெறுவதில்லை; ஆனால் ஓர் வியபசாரியைப்போல அல்லற்படுகிறது. முதன் மந்திரி பார்லிமெண்டின் நலத்தைவிடத் தமது அதிகாரத்தில் கவலை கொண்டவரா யிருக்கிறார். தமது கட்சிக்கு வெற்றி கிடைப்பதில் அவர் தமது கவனம் முழுவதையும் செலுத்துகிறார். பார்லிமெண்டு நியாயத்தைச் செய்யவேண்டுமென்று அவர் எப்பொழுதும் கவலை யடைவதில்லை. பிரதம மந்திரிகள் தங்கள் கட்சியின் நலத்திற்காகவே பல காரியங்களைப் பார்லிமெண்டு வாயிலாகச் செய்வித்திருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் சிந்திக்கவேண்டும்.

வா:—ஏனெனில், நாம் இதுவரை தேசாபிமானிகளென்றும், உண்மையுள்ளவர்களென்றும் கருதியிருந்த மனிதர்களையே தாங்கள் குறை கூறுகிறீர்கள்?

பத்:—ஆம்: அது உண்மை. முதன் மந்திரிகள்மீது எனக்கு ஒரு பகைமையும் இல்லை. ஆனால் நான் பார்த்த விஷயங்கள் அவர்களை உண்மையில் தேசாபிமான முன்னவர்களென்று கருதலாகாதென்று நினைக்குமாறு செய்கின்றன. பொதுவாக வழங்கும் லஞ்சத்தை அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லையென்ற காரணத்தால் அவர்களை யோக்கியர்களென்று கருதவேண்டுமென்றால், அவர்களை அவ்வாறு கருதிக்கொள்ளலாம்; ஆனால் அவர்கள் இன்னும் நுண்மையான செல்வாக்குகளுக்கு உட்படுகிறார்கள். அவர்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு, அவர்கள் நிச்சயமாகவே பட்டங்களை ஜனங்களுக்கு லஞ்சமாகக் கொடுக்கிறார்கள். அவர்களிடம் உண்மையான யோக்கியதையேனும், உயிருள்ள மனச்சான்றேனும் இல்லையென்று சொல்ல நான் தயங்கமாட்டேன்.

வா:—பார்லிமெண்டைப்பற்றித் தாங்கள் இந்தக் கருத்துக்களை வெளியிடுகின்றமையால் ஆங்கில ஜனங்களைப்பற்றியும் தங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன். அவ்வாறானால் அவர்கள் அரசாட்சியைப்பற்றியும் தங்கள் கருத்தை நான் அறிந்துகொள்ளலாம்.

பத்:—ஆங்கிலேய ஓட்டர்களுக்கு அவர்கள் (கட்சிப்) பத்திரிகைதான் வேதம். பெரும்பாலும் யோக்கியதை யற்றவையான அவர்கள் பத்திரிகைகளினின்றே அவர்கள் தங்கள் கருத்தை உண்டு பண்ணிக் கொள்கிறார்கள். ஒரே விஷயத்தை, வெவ்வேறு பத்திரிகைகள் வெவ்வேறு விதமாகத் தங்கள் கட்சியின் தன்மைக்கு இயைந்தவாறு, பொருள் கூறுகின்றன. ஒரு பத்திரிகை ஒரு பெரிய ஆங்கிலேயனை உண்மையில் 'அரிச்சந்திரன்' என்று கூறும். மற்றொன்று அவனை அயோக்கிய

என்று கூறும். இத்தகைய பத்திரிகைகளைக் கொண்ட ஜனங்களின் நிலைமை எவ்வாறிருக்கும்?

வா:—தாங்கள் அதனைச் சொல்லுங்கள்.

பத்:— இந்த ஜனங்கள் தங்கள் கொள்கைகளை அடிக்கடி மாற்றிக் கொள்கிறார்கள். எழு வருஷத்திற்கு ஒரு முறை அவர்கள் தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொள்கிறார்களென்று சொல்லப்படுகிறது. கடிகாரத்தின் 'தொங்கி'யைப்போல அவர்கள் கொள்கைகள் இயங்கிக் கொண்டிருக்கின்றன; அவை ஒருகாலும் உறுதியாய் நிலைத்திருப்பதில்லை. ஜனங்கள் நாவன்மையுள்ள ஒருவரையாவது, தங்களுக்கு விருந்து, கச்சேரி முதலியன நடத்துபவரையாவது பின்பற்றி நடப்பார்கள். ஜனங்களைப்போலவே அவர்கள் பார்லிமெண்டு சபையும் அமைந்திருக்கிறது. ஆனால் அவர்களிடம் ஒரு குணம் மட்டும் மிகவும் சிறந்து விளங்குகிறது. அவர்கள் தங்கள் நாட்டை இழந்துவிடும்படி ஒருகாலும் விடமாட்டார்கள். எவரேனும் அதன் மீது கண் வைத்தார்களானால், அவர் கண்களைப் பிடுங்கிவிடுவார்கள். ஆனால் அவர்களிடம் மற்ற நலன்கள் அனைத்தும் பொருந்தியிருக்கின்றனவென்றாவது, அவர்களைப் பின் பற்றவேண்டுமென்றாவது கருதலாகாது. இங்கிலாந்தின் முறையை இந்தியா பின் பற்றினால் அது கெட்டழியுமென்பது எனது உறுதியான கொள்கை.

வா:—இங்கிலாந்தின் இத்தகைய நிலைமைக்குக் காரணம் யாதென்று கூறுகிறீர்கள்?

பத்:—ஆங்கில நாட்டாரின் விசேஷ குறை ஏதும் அதற்குக் காரணமல்ல; ஆனால் தற்கால நாகரிகத்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அது பெயர் மட்டில்மட்டும் நாகரிகம்; அதன் பயனாக, ஐரோப்பாவிலுள்ள ஜனங்கள் தாழ்வடைந்து, நாளுக்கு நாள் கேடெய்தி வருகிறார்கள்.

அதிகாரம்—௬

நாகரிகம்

வா:—இப்பொழுது தாங்கள் நாகரிக மென்பது பற்றித் தங்கள் கருத்தை விளக்க வேண்டும்.

பத்:—நான் என்ன கருதுகிறேன் என்பதல்ல. நாகரிக மென்று பெயருடன் வழங்கும் அதனை நாகரிக மென்று கூற, பல ஆங்கில அறிஞர்கள் மறுக்கிறார்கள். அதுபற்றிப் பல நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன. நாகரிகத்தின் தீமைகளினின்று நாட்டை நீக்குமாறு பல சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்றன. ஒரு பெரிய ஆங்கில நூலாசிரியர் "நாகரிகம்: அதன் காரணமும் நிவர்த்தியும்" என்று ஒரு நூல் எழுதியிருக்கிறார். அதில் அவர் அதனை ஒரு நோயென்று கூறுகிறார்.

வா:—இதனைப் பொதுவாக நாம் ஏன் அறியவில்லை?

பத்:—இதற்கு விடை மிகவும் எளிது. ஜனங்கள் தங்களுக்கு விரோதமாகப் பேசுவதைக்காண்டல் அருமை. நவீன நாகரிகத்தின் மயக்க மடைந்துள்ளவர்கள் அதற்கு விரோதமாக எழுதமாட்டார்கள். அதற்கு ஆதாரமான விஷயங்களையும் நியாயங்களையும் கண்டு பிடிப்பதில் அவர்கள் கவலை செலுத்துவார்கள். அவர்கள் அதனை உண்மை யென்று கருதி, தங்களை அறியாமலே அவ்வாறு செய்கிறார்கள். ஒருவன் கனவு கண்டு கொண்டிருக்கும் பொழுது அந்தக் கனவை நம்புகிறான். அவன் உறக்கத்தினின்று விழிக்கும் பொழுதே தான் மயர்ந்து போன விஷயத்தை அறிகிறான். நாகரிகத்தில் மூழ்கியுள்ள மனிதன் கனவு காண்பவனைப் போல இருக்கிறான். நாம் வழக்கமாகப் படிக்கும் நூல்கள் நவீன நாகரிகத்தை ஆதரிப்பவர்களின் நூல்களாகும். இந்த நாகரிகத்தை ஆதரிப்பவர்களில் மிகவும் அறிவாளி

களும் மிகவும் நல்லவர்களும் கூட இருக்கிறார்கள். அவர்கள் தூண்டிலைப் பார்த்து நாம் மயங்கி விடுகிறோம். எனவே, ஒருவர் பின் ஒருவராக நாம் சுழலில் அகப்பட்டுக் கொள்கிறோம்.

வா:—இது மிகவும் நம்பத் தக்கதாயிருக்கிறது. இந்த நாகரிகத்தைப் பற்றித் தாங்கள் படித்திருப்பதையும், சிந்தித்திருப்பதையும் இனிச் சிறிது கூறுங்கள்.

பத்:—'நாகரிகம்' என்ற பதத்தால் எத்தகைய நிலைமை குறிப்பிடப்படுகிறதென்பதை நாம் முதலில் கவனிப்போம். அதில் வாழும் ஜனங்கள் சரீர சுகத்தை வாழ்க்கையின் நோக்கமென்று முடிவுசெய்து விடுகின்றனர். சில உதாரணங்கள் கூறுகிறேன். ஐரோப்பாவிலுள்ள ஜனங்கள் நூறு வருஷங்களுக்கு முன் வாழ்ந்ததை விட இப்பொழுது சிறந்த வீடுகளில் வாசம்செய்கிறார்கள். இது நாகரிகத்தின் ஓர் அறிகுறியென்று கருதப்படுகிறது. மேலும் இது சரீர சுகத்தை விருத்தி செய்யக்கூடியதாயிருக்கிறது. ஆதியில் அவர்கள் தோல்களை ஆடைகளாக உடுத்தியிருந்தார்கள். ஈட்டிகளை ஆயுதங்களாகக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது அவர்கள் நீண்ட காற்சட்டைகளைத் தரிக்கிறார்கள். உடம்பை அழகு படுத்துமாறு பற்பல உடைகளைத் தரித்துக் கொள்கிறார்கள். ஈட்டிகளுக்குப் பதிலாக அவர்கள் இப்பொழுது ஐந்து அல்லது ஆறு குழாய்கள் அமைந்த துப்பாக்கிகளை வழங்குகிறார்கள். மிருதியான உடைகளும் (பூட்ஸ்) பாதரக்ஷை முதலியனவும் தரிக்கும் வழக்கத்தை இதுவரை கொண்டிராத ஒரு நாட்டு ஜனங்கள் ஐரோப்பியர்களைப் போல உடை தரிப்பார்களானால், அவர்கள் மிருகப்பிராயத்தினின்று நாகரிகம் அடைந்து விட்டதாகக் கருதப் படுகிறார்கள். முற்காலத்தில் ஐரோப்பாவில் ஜனங்கள் தங்கள் நிலங்களை சரீர உழைப்பினாலேயே உழுது பயிர் செய்தார்கள். ஆனால் இப்பொழுது யந்திரங்களின் உதவியால் விரிவான பூமிகளை ஒருவன் உழுது பயிர் செய்து, அதன் வாயிலாகப் பெருஞ் செல்வம் சேர்க்கலாம். இது நாகரிகத்தின் ஒரு சின்னமென்று கருதப்படுகிறது. முற்

காலத்தில் ஒரு சிலர் நூல்களை இயற்றினர்; அவை மிகவும் பயனுள்ளவையாயிருந்தன. இப்பொழுது எவரும் தாம் விரும்புவது எதனையும் எழுதி, அச்சிட்டு ஜனங்களின் மனங்களைக் கெடுத்துவிடுகின்றனர். முற்காலத்தில் ஜனங்கள் கட்டை வண்டிகளில் ஏறிச்சென்றார்கள். இப்பொழுது அவர்கள் நாள் ஒன்றுக்கு நானூறு மைலும் அதற்கு மேலுமாகப் புகை வண்டிகளில் செல்லுகிறார்கள். இது நாகரிகத்தின் உச்சநிலை என்று கருதப்படுகிறது. இன்னும் காலஞ்சென்றால் அவர்கள் ஆகாயக் கப்பல்களில் பிரயாணம் செய்வார்களென்றும், உலகத்திலே எந்த இடத்திற்கும் சில நாழிகைகளில் போய்ச்சேர்ந்து விடுவார்களென்றும் சொல்லுகிறார்கள் *. மனிதர்கள் இனித் தங்கள் கைகால்களை உபயோகிக்க வேண்டிய அவசியம் இல்லை. ஒரு பொத்தானை அழுத்துவார்கள், உடனே அவர்கள் ஆடைகள் அவர்கள் முன்வந்து சேரும். மற்றொரு பொத்தானை அழுத்தினால் பத்திரிகை வந்துசேரும். மூன்றாவது பொத்தானை அழுத்தினால், உடனே ஒரு மோட்டார்வண்டி வந்து காத்து நிற்கும். மிகவும் சுவையுள்ள பலவகை உணவுகளும் கிடைக்கும். ஒவ்வொரு வேலையும் யந்திரத்தால் நடைபெறும். முற்காலத்தில் ஜனங்கள் ஒருவரோடொருவர் சண்டை செய்ய விரும்பினால், அவர்கள் தங்கள் தங்கள் சரீர பலத்தைச் சோதனைசெய்து கொண்டார்கள். இப்பொழுது ஒரு மனிதன் ஒரு குன்றில், ஒரு பீரங்கியின் பின்னே இருந்துகொண்டு, பீரங்கியின்வாயிலாக, ஆயிரக்கணக்கான உயிர்களை அழித்துவிடலாம். இது நாகரிகம். முற்காலத்தில் மனிதர்கள் திறந்தவெளியில் தாங்கள் விரும்புமட்டும் வேலை செய்தார்கள். இப்பொழுது ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் ஒன்று கூடி, பிழைப்பின் பொருட்டு, தொழிற்சாலைகளிலும் சுரங்கங்களிலும் வேலை செய்கிறார்கள். அவர்கள் நிலைமை மிருகங்களின் நிலைமையிலும், கேவலமாயிருக்கிறது. செல்வந்தர்களின் நன்மைக்

* இப்பொழுது இவ்வாறு நடந்துவருகிறது.

ளாக அவர்கள் மிகவும் ஆபத்தான தொழில்களில் தங்கள் உயிரைப் பொருட்படுத்தாது வேலை செய்யவேண்டியவர்களா யிருக்கிறார்கள். முற்காலத்தில் மனிதர்கள் சட்டத்தினால் அடிமைகளாக்கப் பட்டார்கள். இப்பொழுது பொருளாசையாலும், அதனால் வரும் சுகங்களுக்காகவும் அவர்கள் அடிமைக ளாகிறார்கள். முற்காலத்தில் ஜனங்கள் கனவிலும் காணாத நோய்களெல்லாம் இப்பொழுது தோன்றியிருக்கின்றன. அவற்றிற்கு மருந்து கொடுப்பதில் ஆயிரக்கணக்கான வைத்தியர்கள் அமர்ந்திருக்கிறார்கள். எனவே, வைத்திய சாலைகள் பெருகி யிருக்கின்றன. இது நாகரிகத்திற்கு ஒரு குறி. முற்காலத்தில் சுகங்கள் அனுபவிப்பதற்கு விசேஷ ஜதர்கள் வேண்டியதாக ஏற்பட்டது. மிகுந்த செலவும் ஏற்பட்டது. ஆனால் இப்பொழுதோ, காலணா செலவிட்டால் ஒரு கடித வாயிலாக எவரும் மற்றொருவரை வையலாம். அதே செலவில் ஒருவன் மற்றொருவனுக்கு வந்தனத்தைச் செலுத்தலாம் என்பதும் உண்மையே. முற்காலத்தில் ஜனங்கள், வீட்டில் செய்தவுணவுகளை இரண்டு அல்லது மூன்று முறை உண்டு வந்தார்கள். இப்பொழுது அவர்கள் இரண்டு மணி நேரத்திற்கு ஒரு முறை ஏதாவது சாப்பிடவேண்டியவர்களா யிருக்கிறார்கள். எனவே, வேறு எந்த வேலைக்கும் அவர்களுக்கு அனேகமாய் அவகாசம் இருப்பதில்லை. இன்னும் நான் விரித்துச் சொல்ல வேண்டுமா? பிரமாணமுள்ள பல நூல்களினின்றும் நீர் இவற்றையெல்லாம் அறிந்துகொள்ளலாம். இவை அனைத்தும் நாகரிகத்தின் உண்மையான குறிகளாகும். இதற்கு மாறாக எவரேனும் பேசினால், அவரை அறிவிலியென்று அறிந்து கொள்ளும். இந்த நாகரிகம் தர்மத்தையும் சமயத்தையும் பற்றிக் கவனிப்பதில்லை. தங்கள் கடமை சமயத்தைப் பயிற்றுவதல்லவென்று இந்த நாகரிக கோஷ்டியார் அமைதியாய்ச் சொல்லுகின்றனர். சிலர் அதனை மூடபக்தி யென்றும் கருதுகின்றனர். மற்றவர்கள் சமயத்தின் போர்வையைப் போர்த்திக்கொண்டு, தர்மத்தைப் பற்றி ஏதோ பிதற்றுகிறார்கள். ஆனால் இருபது

வருகை அநுபவத்திற்குப் பின், தர்மம் என்ற பெயருடன், அதர்மம் கற்பிக்கப்படுகிறதென்ற முடிவுக்கு நான் வந்திருக்கிறேன். நான் மேலே விவரித்திருப்பவை யனைத்திலும், தர்மத்திற்குத் தூண்டுகோலாய் ஒன்றும் இல்லை யென்பதைக் குழந்தை கூட அறிந்துகொள்ளலாம். நாகரிகம் சரீர சுகங்களைப் பெருக்க முயல்கிறது; ஆனால் அந்த வேலையிலும் அது தவறிவிடுகிறது.

இந்த நாகரிகம் நாஸ்திகமாகும். ஐரோப்பாவிலுள்ள ஜனங்களை இது உறுதியாகப் பற்றியிருக்கிறது; அதில் மூழ்கியுள்ளவர்கள் அரைப் பைத்தியம் கொண்டவர்களாகத் தோன்றுகிறார்கள். அவர்களிடம் உண்மையான உடல்வன்மையேனும் தைரியமேனும் இல்லை. மது பானத்தினால் அவர்கள் ஊக்கத்தை உண்டு பண்ணிக் கொள்கிறார்கள். தனிமையில் அவர்கள் சந்தோஷமாக இருக்க முடியாது. இல்லத்தரசிகளாய் விளங்க வேண்டிய மாதர்கள் வீதிகளில் திரிகிறார்கள், அல்லது தொழிற் சாலைகளில் அடிமைகளாய் வேலை செய்கிறார்கள். அற்ப வருவாயின் பொருட்டு இங்கிலாந்தில் மட்டும் அரை லட்சம் மாதர்கள் தொழிற் சாலைகளிலும் பிற இடங்களிலும் மிகவும் கஷ்ட நிலைமையில் உழைக்கிறார்கள். நாடோறும் வளர்ந்து கொண்டிருக்கும் (பெண்களுக்கு உரிமை வேண்டுமென்ற) ஸ்திரீ சுதந்தர வாதிகள் இயக்கத்திற்குரிய காரணங்களில் இந்த பயங்கரமான விஷயம் ஒன்றாகும்.

நாம் பொறுமையாக இருந்தால் இந்த நாகரிகம் தானாகவே அழிந்துபோகும். முகம்மது நபி கூறியவாறு இதனை அசுர நாகரிகமென்று கூறலாம். ஹிந்து சமயம் இதனைக் கலிகாலமென்று கூறுகிறது. நான் இதனைப் போதிய அளவு வர்ணிக்க முடியாது. இது ஆங்கில நாட்டாரின் உயிரையே உள்ளூற அரித்து வருகிறது. இதனை வெறுத்துத் தள்ள வேண்டும். பார்லிமெண்டுகள் உண்மையில் அடிமைத்தனத்தின் சின்னங்களேயாகும். நீர் இதுபற்றி நன்கு சிந்திப்பின், இதே கருத்தை நீரும்

கொண்டு ஆங்கிலேயரைப் பழிகூறுவதை நிறுத்துவீர். அவர்களுக்கு நாம் இரங்க வேண்டும். அவர்கள் புத்தியுள்ள ஜாதியார். எனவே அவர்கள் அந்தத் தீமையை ஒழித்து விடுவார்களென்று நான் நம்புகிறேன். அவர்கள் ஊக்கமும் உழைப்பும் உள்ளவர்கள். அவர்கள் சிந்தனையின் போக்கு இயற்கையிலேயே அதர்மமுள்ளதல்ல. அவர்கள் நியமித்தம் உள்ளவர்களு மல்ல. எனவே நான் அவர்களை மதிக்கிறேன். நாகரிகம் ஒரு தீராத நோயல்ல. ஆனால் ஆங்கிலேயர்களை அது பற்றியிருக்கிறதென்பதை என்றும் மறந்தலாகாது.

அதிகாரம்—எ

இந்தியாவை ஏன் இழந்தோம்?

வா:—நான் பெரிதும் சிந்திக்குமாறு தாங்கள் நாகரிகத்தைப் பற்றி மிகவும் கூறினீர்கள். ஐரோப்பிய நாட்டாரிடமிருந்து எதனைக் கொள்ளவேண்டுமென்பதும் எதனைத் தள்ள வேண்டுமென்பதும் எனக்குத் தெரியவில்லை. ஆனால் ஒரே கேள்வி மட்டும் என் உள்ளத்தில் இப்பொழுது தோன்றுகிறது. நாகரிகம் ஒரு நோயாயிருந்தாலும், அது ஆங்கிலேயரைப் பற்றியிருக்கிறதென்றாலும், அவர்கள் எவ்வாறு இந்தியாவைக் கைப்பற்றினார்கள்? எவ்வாறு அதனை வைத்துக் கொண்டிருக்கிறார்கள்?

பத்:—உமது கேள்விக்குப் பதில் சொல்லுவது மிகவும் கஷ்டமல்ல. இப்பொழுது சுயராஜ்யத்தின் உண்மையான இயல்பை நாம் அறிந்து கொள்வோம். ஏனெனில் அந்தக் கேள்விக்கு நான் இன்னும் பதிலளிக்கவில்லை என்பதை அறிவேன். ஆயினும் நான் உமது முந்திய கேள்வியை எடுத்துக் கொள்கிறேன். இந்தியாவை ஆங்கிலேயர்கள் பிடித்துக் கொள்ளவில்லை. அவர்களுக்கு நாம் அதனைக் கொடுத்திருக்கிறோம். அவர்கள் தங்கள் பலம் காரணமாக இந்தியாவில் இருக்கவில்லை. ஆனால் நாம் அவர்களை வைத்திருப்பதால் இருக்கிறார்கள். இந்த விஷயங்களுக்கு ஆதார முண்டாவென்று பார்ப்போம். ஆதியில் அவர்கள் வாணிபத்தின் பொருட்டு நமது நாட்டிற்கு வந்தார்கள். கும்பெனியாரை நினைவில் வைத்துக் கொள்ளும். யார் அவர்களை 'ராஜா' ஆக்கினார்கள்? அந்தக் காலத்தில் அவர்கள் ஒரு ராஜ்யத்தை ஸ்தாபிப்பதாகக் கனவிலும் கருதவில்லை. கம்பெனி அதிகாரிகளுக்கு உதவி செய்தவர் யார்? அவர்கள் பணத்தைக்கண்டு ஆசை கொண்டவர் யார்? அவர்கள் சரக்குகளை வாங்கினவர் யார்? எல்லாம் நாமே செய்தோமென்று

சரித்திரம் கூறுகிறது. மிக விரைவில் செல்வந்தர்களாகுமாறு, நாம் கம்பெனி உத்தியோகஸ்தர்களை எதிர்கொண்டழைத்தோம். நாம் அவர்களுக்கு உதவிசெய்தோம். எனக்கு 'கஞ்சா' குடிக்கிற வழக்க மிருந்து, அதனை ஒருவன் எனக்கு விற்றால், அவன் மீது பழிகூறுவதா, என் மீது பழிகூறுவதா? விற்றவன் மீது பழிகூறுவதால் நான் அந்த வழக்கத்தை ஒழிக்க முடியுமா? ஒரு வியாபாரியை ஓட்டிவிட்டால் மற்றொருவன் வரமாட்டானா? இந்தியாவின் உண்மையான ஊழியன் அந்த விஷயத்தின் மூல காரணத்தை நோக்கவேண்டும். மிதமிஞ்சிய உணவால் எனக்கு அஜீரணம் ஏற்பட்டிருந்தால், தண்ணீர் மீது பழி கூறுவதால் அது நீங்கிவிடமாட்டாது. நோயின் காரணத்தைக் கண்டறிபவனே உண்மையான வைத்தியன் ஆவான். இந்தியாவின் நோய்க்கு நீர் உண்மைவைத்தியனாகக் கருதினால் அதன் உண்மையான காரணத்தை நீர் கண்டறிய வேண்டும்.

வா:—தாங்கள் சொல்வது சரி. தங்கள் முடிவுகளை எனக்குத் தெரிவிக்க இனி என்னுடன் மிகுந்த வாதம் செய்ய வேண்டியதில்லையென்று தோன்றுகிறது. மேலே, தங்கள் கருத்துக்களைக் கேட்க நான் மிகுந்த ஆவலாயிருக்கிறேன். நாம் இப்பொழுது மிகுந்த சுவையான பேச்சில் இருக்கிறோம். ஆகவே, தாங்கள் சொல்வதை நான் கேட்டுக்கொண்டு வருகிறேன். சந்தேகம் வரும்பொழுது தங்களிடம் கேட்கிறேன்.

பத்:—உமக்கு ஆவல் இருப்பினும், நாம் மேலே செல்லச் செல்ல நமக்குள் அபிப்பிராய பேதம் ஏற்படுமென்று நான் நினைக்கிறேன். ஆயினும், நீர் என்னை நிறுத்தும்பொழுது மட்டும் நான் நியாயம் கூறுகிறேன். நாம் அவர்களை ஆதரித்ததனால்தான் ஆங்கிலேய வியாபாரிகளுக்கு இந்தியாவில் ஓர் உறுதி ஏற்பட்டதென்பதை நாம் முன்னமே அறிந்துகொண்டோம். நமது சிற்றரசர்கள் தங்களுக்குள் போராடியபொழுது அவர்கள் கம்பெனியாரின் துணையை நாடினார்கள். அந்த வர்த்தகக் கூட்டத்தார் வியாபாரத்திலும் யுத்தத்திலும் பயின்றவராயிருந்தனர்.

தர்மாதர்ம விஷயங்கள் அவர்களுக்கு இடையூறு செய்யவில்லை. வியாபாரத்தைப் பெருக்கிப் பொருள் சேர்ப்பதே அவர்கள் நோக்கம். நமது உதவியை அவர்கள் ஏற்றுக்கொண்டு, தங்கள் பண்டசாலைகளைப் பெருக்கினார்கள். அவற்றைக் காப்பாற்றுமாறு அவர்கள் ஒரு சேனையை வைத்துக்கொண்டார்கள். அது நம்மவர்களுக்கும் பயன்பட்டது. எனவே அந்தக் காலத்தில் நாம் செய்த காரியத்திற்கு ஆங்கிலேயர்கள் மீது பழி சுமத்துவது பயனற்றதல்லவா? மேலும் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் சல்லியம் செய்து கொண்டிருந்தார்கள்; இதனுலும் கம்பெனியாருக்குச் சமயம் வாய்த்தது. இவ்வாறாக, இந்தியாவின்மீது கும்பெனியாருக்கு அதிகாரத்தை அளித்த சந்தர்ப்பங்களை நாமே உண்டு பண்ணினோம். எனவே, இந்தியாவை இழந்தோம் என்பதைவிட, இந்தியாவை ஆங்கிலேயருக்கு நாம் அளித்தோம் என்று சொல்வது பொருந்தும்.

வா:—அவர்கள் இந்தியாவைத் தங்கள் வசம் எவ்வாறு காப்பாற்றி வைத்திருக்கிறார்களென்பதைத் தயவு செய்து சொல்லுங்கள்.

பத்:—இந்தியாவை எக்காரணங்களால் அவர்கள் அடைந்தார்களோ, அதே காரணங்களால் தான் அவர்கள் அதனை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். வாள் வலியால் அவர்கள் இந்தியாவைக் கைப்பற்றினார்களென்றும், வாள் வலியால் அதனை வைத்திருக்கிறார்களென்றும் சில ஆங்கிலேயர்கள் சொல்லுகிறார்கள். இந்த இரண்டு கூற்றும் தவறு. இந்தியாவை வைத்திருப்பதற்கு வாள் வலி முற்றிலும் பயனற்றது. நாமே அவர்களை வைத்துக் கொண்டிருக்கிறோம். நெப்போலியன் ஆங்கிலேயரை 'கடைக்கார ஜாதியார்' என்று கூறினான். அது பொருத்தமான வார்த்தையாகும். அவர்கள் தங்களுக்குள்ள நாடுகளையெல்லாம் தங்கள் வியாபாரத்திற்காகவே வைத்திருக்கிறார்கள். அதை ஆதரிப்பதற்காகவே அவர்கள் தரைப்படையும் கடற்படையும் ஏற்பட்டிருக்கின்றன.

டிரான்ஸ்வாலில் அத்தகைய வசதிகள் இல்லாமையால், அதனை ஆங்கிலேயர்கள் வைத்திருப்பது நியாயமல்ல வென்று கண்டு பிடித்தார். அது லாபமுள்ள விஷயமானபொழுது, அதனுடன் எதிர்த்துப் போர் செய்ய நேர்ந்தது. டிரான்ஸ்வால் மீது இங்கிலாந்திற்கு மேலதிகாரம்* உண்டென்று ஸ்ரீ சேம்பர்லேன் உடனே கூறினார். எவரோ ஒருவர் காலஞ் சென்ற க்ருகரை நோக்கிச் சந்திர லோகத்தில் தங்கம் உண்டா என்று கேட்டாராம். அதில் தங்கம் அநேகமாய் இராதென்றாராம். அதில் தங்கம் இருந்தால் அதனையும் ஆங்கிலேயர்கள் தங்கள் ராஜ்யத்துடன் சேர்த்துக் கொண்டிருப்பார்களென்றும் அவர் மறுமொழி கூறினாராம். பணமே அவர்கள் தெய்வமென்பதை நினைவில் வைத்துக்கொண்டால் அநேக விஷயங்களை முடிவு செய்து விடலாம். நாம் நமது அற்பமான சுயநலத்திற்காக இந்தியாவில் ஆங்கிலேயர்களை வைத்துக்கொண்டிருக்கிறோம். நாம் அவர்கள வியாபாரத்தை விரும்புகிறோம். அவர்கள் தங்கள் தந்திரமான வழிகளால் நம்மை மகிழ்ச்செய்து அவர்களுக்கு நம்மிடமிருந்து வேண்டியதை அடைந்து கொள்கிறார்கள். இதற்காக அவர்கள் மீது பழிகூறுவது, அவர்கள அதிகாரத்தை நிலைநிறுத்துவதாகும். மேலும் நாம் நமக்குள்ளேயே சச்சரவு செய்து கொள்வதால் அவர்கள பிடிப்பை இன்னும் வலுப்படுத்துகிறோம். மேலே கூறியவற்றை நீர் ஏற்றுக்கொண்டால், வர்த்தக வேலைகளுக்காக ஆங்கிலேயர்கள் இந்தியாவில் புகுந்தார்களென்பது தெளிவாகிறது. அதற்காகவே அவர்கள் இந்தியாவில் இருக்கிறார்கள்; அவ்வாறு செய்யுமாறு நாம் அவர்களுக்குத் துணை புரிகிறோம். அவர்கள் ஆயுதங்களும் வெடி மருந்துகளும் முற்றிலும் பயனற்றவை. ஜப்பானில் பறப்பது ஆங்கிலேயரின் கொடி; ஜப்பானியரின் கொடியல்லவென்பதை இதனை யொட்டி உமக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆங்கிலேயர்கள் தங்கள் வியாபாரத்தின் பொருட்டு ஜப்பானியருடன் ஓர் உடன்படிக்கை செய்திருக்கிறார்கள். அவர்கள் அதனை நிறைவேற்றினால் அவர்கள் வியாபாரம் அந்த

நாட்டில் மிகவும் பெருகும். அவர்கள் தங்கள் சரக்குகளுக்கு இந்த உலகம் முழுவதையும் ஒரு பெரிய சந்தையாகச் செய்து விட விரும்புகிறார்கள். அவ்வாறு அவர்கள் செய்ய முடியாதென்பது உண்மை தான்; ஆனால் அவர்கள் மீது பழி யிராது. அவர்கள் தங்கள் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகத் தங்கள் முயற்சியில் ஒரு சிறிதும் குறைவு வைக்கமாட்டார்கள்.

அதிகாரம்—௮

இந்தியாவின் நிலைமை

வா:—ஆங்கிலேயர்கள் இந்தியாவை ஏன் வைத்திருக்கிறார்களென்பது எனக்கு இப்பொழுது விளங்குகிறது. நமது நாட்டின் நிலைமையைப்பற்றித் தங்கள் கருத்தை அறிய விரும்புகிறேன்.

பத்:—அது மிகவும் பரிதாபமான நிலைமை. அதைப் பற்றி நினைக்கும்பொழுது என் கண்களில் நீர் ததும்புகிறது; எனது தொண்டை வரட்சியடைகிறது. எனது உள்ளத்தில் உள்ளதைத் தெளிவாய் விளக்க முடியுமாவென்று நான் பெரிதும் சந்தேகம் அடைகிறேன். இந்தியா ஆங்கிலேயர்களின் கீழல்ல, ஆனால், நவீன நாகரிகத்தின்கீழ் நசுக்குண்டு வருகிறதென்பது எனது உறுதியான அபிப்பிராயம். அந்த ராட்சசனின் கொடிய பாரம் பொறுக்கமாட்டாது, அது தவித்துக்கொண்டிருக்கிறது. அதினின்று தப்பிக்கொள்ள இன்னும் காலம் இருக்கிறது. ஆனால் நாள் செல்லச்செல்ல மிகுந்த கஷ்டமாகும். சமயம் எனக்கு அருமையானது; இந்தியா சமயத்தை மறந்து கொண்டு வருகிறதென்பது எனது முதற் குறை. இங்கே நான் ஹிந்து, மகமதிய அல்லது ஜொராஸ்ட்ர சமயங்களைச் சொல்லவில்லை. சமயம் அனைத்திற்கும் மூலமாயுள்ள சமயத்தைக் குறிப்பிடுகிறேன். நாம் கடவுளினின்று விலகிக்கொண்டு வருகின்றோம்.

வா:—எவ்வாறு?

பத்:—நாம் சோம்பலுள்ள மூடர்களென்றும், ஐரோப்பியர்கள் ஊக்கமும் உழைப்பும் உள்ளவர்களென்றும் நம்மீது ஒரு குறை கூறுகிறார்கள். நாம் அந்தக் குற்றத்தை ஏற்றுக்கொண்டோம்; அதனால், நாம் நமது நிலைமையை மாற்ற விரும்பு

கிறோம். ஹிந்து மதம், இஸ்லாம் மதம், ஸொராஸ்டர் மதம், கிறிஸ்தவமதம், மற்ற மதங்கள் அனைத்தும் நாம் உலக விஷயங்களில் பற்றின்றி யிருக்கவேண்டு மென்றும், தெய்விக விஷயங்களில் ஊக்கமாயிருக்கவேண்டு மென்றும், நமது உலக ஆசைக்கு ஓர் எல்லை யேற்படுத்தவேண்டு மென்றும், சமய சம்பந்தமான ஆசை எல்லையற்றதா யிருக்கவேண்டு மென்றும் கூறுகின்றன. நமது உழைப்பைப் பிந்திய வழியில் செலுத்தவேண்டும்.

நா:—மதப்பைத்தியங்களைத் தாங்கள் ஆதரிப்பதாகத் தோன்றுகிறது. அநேக மோசக்காரர்கள் இவ்வாறு பேசி ஜனங்களைக் கெடுத்திருக்கிறார்கள்.

பத்:—சமயத்தின்மீது நீர் ஒரு நியாயமற்ற பழிகூறுகிறீர். சகல சமயங்களிலும் மோசக்காரர்கள் இருக்கவே செய்கிறார்கள். ஒளியுள்ள இடத்தில் நிழலும் உண்டு. உலக விஷயங்களிலுள்ள மோசங்கள் சமய விஷயங்களிலுள்ள மோசங்களைவிட இழிவானவை யென்று நான் கூறுவேன். நான் உமக்கு விளக்கிக் காட்ட முயலும் நாகரிகத்தின் மோசத்தைச் சமயத்தில் காணமுடியாது.

நா:—தாங்கள் எங்ஙனம் அவ்வாறு சொல்லலாம்? சமயத்தின் பெயரால், இந்துக்களும் மகமதியர்களும் ஒருவரோடொருவர் போர் புரிந்தார்கள். அதற்காகவே கிறிஸ்தவர்கள் கிறிஸ்தவர்களுடன் சண்டையிட்டார்கள். அதன் பெயராலேயே ஆயிரக்கணக்கான நிரபராதிகள் கொலையுண்டார்கள்; ஆயிரக்கணக்கானவர்கள் கொளுத்தப்பட்டார்கள்; அடி யுண்டார்கள்; சித்திரவதை செய்யப்பட்டார்கள். உண்மையாகவே, இது எந்த நாகரிகத்தையும் விட மிகவும் கேவலமானது.

பத்:—நாகரிகத்தின் கஷ்டங்களைவிட மேற்கண்ட கஷ்டங்கள் பொறுக்கக்கூடியவை யென்று நான் உறுதியாகக் கூறுகிறேன். நீர் சொன்ன கொடுமைகள் சமயத்தின் பெயரால் செய்

யப்பட்டிருப்பினும், அவை சமயத்தில் அடங்கியவையல்லவென்பதை அனைவரும் அறிவர். எனவே, இந்தக் கொடுமைகளுக்குப் பின்னிகழ்ச்சி யில்லை. உலகத்தில் அறியாமையும் மூடபக்தியு முள்ள ஜனங்கள் இருக்கிற காலமெல்லாம் அவை நிகழ்ந்து கொண்டேயிருக்கும். ஆனால் நாகரிகத் தீயில் அழிந்தவர்களுக்கு ஒரு முடிவில்லை. அதனை மிகவும் நன்மையுள்ளதென்று கருதி, கொளுத்துகின்ற அதன் ஜுவாலைக்குள் ஜனங்கள் வருகிறார்கள். அவர்கள் மதத்திலும் சாய்ந்திலர்களாய், உண்மையில் உலகத்தினின்று ஒரு சிறிதும் பயன்பெறாது போகிறார்கள். நாகரிகமானது நமக்குச் சுகம் அளிக்கும் பொழுதே அரித்துக்கொண்டிருக்கும் சுண்டெலிக்கு நிகரானது. அதன் பயன் முழுமையும் ஓர்ந்தால் தற்கால நாகரிகத்தின் நிலைமையை நோக்க, சமயத்தை யொட்டிய மூடபக்தி நிகரற்றதென்பதை அறிவோம். மதசம்பந்தமான மூடபக்திகள் நிலைத்திருக்க வேண்டுமென்று நான் சொல்லவில்லை; நாம் அவற்றை ஒழிக்கவே முயல்வோம். ஆனால் சமயத்தை அலட்சியம் செய்வதால் நாம் ஒருகாலும் அவ்வாறு செய்ய முடியாது. சமயத்தை மதித்து அதனைப் பாதுகாப்பதால் மட்டுமே நாம் அவ்வாறு செய்ய முடியும்.

வா:—ஆனால் ஆங்கில அரசாங்கம் ஒரு பயனற்ற தடையென்று தாங்கள் கருதுகிறீர்களா?

பத்:—அதனால் அமைதி யேற்பட்டிருக்கிறதென்று உமக்குத் தோன்றலாம்; எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.

வா:—தக்கர்கள், பிண்டாரிகள், பில்லர்கள் செய்த கொடுமையை யெல்லாம் தாங்கள் எளிதாகக் கருதுகிறீர்கள் போலும்.

பத்:—அதனை நீர் சிறிது சிந்தித்துப் பார்த்தால் அது அவ்வளவு பெரிய காரியமல்லவென்பதை நீர் அறிவீர். அது அவ்வளவு பெருங்காரியமா யிருந்தால், ஆங்கிலேயர்கள் வருவதற்கு முன்னரே மற்ற ஜனங்கள் அழிந்து போயிருப்பார்கள். மேலும்

தற்கால முன்ன அனாதி பெயர் மட்டில் உள்ளதே; ஏனென்றால் அதனால் நாம் ஆண்மையற்றவர்களாயும் கோழைகளாயும் ஆய் விட்டோம். பிண்டாரிகள், பில்லர்களின் இயற்கையை ஆங்கிலேயர்கள் மாற்றி விட்டார்களென்று நாம் கருதலாகாது. எனவே, மற்றொருவர் நம்மைப் பாதுகாத்து அதனால் நம்மைப் பேடிகளாகச் செய்வதைவிடப் பிண்டாரிகளின் துன்பத்தை அநுபவித்தல் நலம். ஆண்மையில்லாமல், பிறருடைய உதவியை நாடுவதைவிட வில்லரின் அம்பினால் உயிரிழப்பது மேலென்று நான் நினைக்கிறேன். இத்தகைய பாதுகாப்பில்லாத அந்தக் காலத்தில் இந்தியா வீரம் நிறைந்த இந்தியாவாய் விளங்கியது. இந்தியர்களைக் கோழைகளென்று மெக்காலே கூறினார். அவர் அவ்வாறு கூறியது முற்றிலும் அறியாமையாகும். அந்தப் பழிக்கு அவர்கள் என்றும் ஆளாயிருந்ததில்லை. முரட்டு மலைவாசிகள் வாழ்வதும், ஓநாய், புலிகள் நிறைந்ததுமான ஒரு நாட்டில் வாழும் ஜனங்கள் கோழைகளாயிருப்பின் விரைவில் அழிந்து போவார்கள். நமது நிலங்களுக்கு நீர் எப்பொழுதாவது போயிருக்கிறீரா? நமது விவசாயிகள் இன்றுகூடத் தங்கள் வயல்களில் அச்சமின்றித் தூங்குகிறார்கள். ஆனால் ஆங்கிலேயரும், நீரும் நானும், அவர்கள் தூங்குகிற இடத்தில் தூங்குவதற்குத் தயங்குவோம். அச்சமற்றிருப்பதே பலம்; நமது உடம்பிலுள்ள தசையிலும் எலும்பிலும் அது பொருந்திருக்கவில்லை. சுயராஜ்யத்தை விரும்பும் உமக்கு நான் ஒன்று கூற விரும்புகிறேன். கடைசியாக, வில்லர்களும் பிண்டாரிகளும், அசாமைகாரர்களும், தக்கர்களும் நமது சொந்த நாட்டார்களே. அவர்களை ஜெயிப்பது உம்மையும் என்னையும் சேர்ந்த வேலை. நமது சொந்தச் சகோதரர்களிடம் நாம் அச்சம் கொண்டிருக்கிற வரை, நாம் நமது இலக்கை அடையத் தகுதி யற்றவர்களாவோம்

அதிகாரம்—௯

இந்தியாவின் நிலைமை (தொடர்ச்சி)

இருப்புப்பாதைகள்

வா:—இந்தியாவில் அமைதி யிருப்பதாக நான் கொண்டிருந்த திருப்தியைத் தாங்கள் ஒழித்து விட்டீர்கள்.

பத்:—சமயச் சார்பாகத்தான் நான் எனது அபிப்பிராயத்தைக் கூறியிருக்கிறேன். ஆனால் இந்தியாவின் வறுமையைப் பற்றி எனது கருத்துகளைச் சொன்னால், உமக்கு ஒருகால் என்மீது வெறுப்பு ஏற்படும்; ஏன் என்றால் இந்தியாவிற்கு நலமென்று நீரும் நானும் இதுவரை கருதியிருந்தவை அவ்வாறு எனக்கு இப்பொழுது தோன்றவில்லை.

வா:—அது என்ன?

பத்:—இருப்புப்பாதைகளாலும், வக்கீல்களாலும், வைத்தியர்களாலும் நமது நாடு வறுமையுற்றதாய் விட்டது. எனவே, நாம் காலத்தில் விழித்துக்கொள்ளாவிடின், நாம் அழிந்து போவோம்.

வா:—நமக்குள் உடன்பாடே ஏற்படாதென்று எனக்கு இப்பொழுது தோன்றுகிறது. நாம் இதுவரை நன்மையென்று கருதியிருந்தவற்றை யெல்லாம் தாங்கள் குறை கூறுகிறீர்கள்.

பத்:—நீர் சிறிது பொறுக்கவேண்டும். நாகரிகத்தின் தீமைகளின் உண்மையான உட்பொருளை நீர் கஷ்டப்பட்டுத்தான் அறிவீர். க்ஷய ரோகியானவன், இறக்கும் தறுவாயிலும் கூட, உயிரைப் பற்றிக் கொண்டிருக்கிறா னென்று வைத்தியர்கள் கூறுகிறார்கள். க்ஷய ரோகம் வெளிப்படையாக எவ்வித நோவையும் உண்டு பண்ணுவதில்லை; எல்லாம் சரியாயிருக்கிற

தென்று சம்புமாது, நோயாளியின் முகத்தில் ஒரு மோகன ஒளியையும் அது உண்டு பண்ணுகிறது. நாகரிகமும் இத்தகைய நோயே. எனவே நாம் மிகவும் ஜாக்கிரதையா யிருக்க வேண்டும்.

வா:—நல்லது, இருப்புப்பாதைகளைப் பற்றிச்சொல்லுங்கள்.

பத்:—இருப்புப் பாதைகள் இல்லாவிடின், ஆங்கிலேயர்களுக்கு இந்தியாவில் ஏற்பட்டிருப்பது போன்ற பிடி ஏற்பட்டிரா தென்பது உமக்குத் தெளிவாய் விளங்கலாம். மேலும் இருப்புப்பாதைகள் பிளேக் நோயையும் பரவச் செய்கின்றன. அவை இல்லா விடின் ஜனங்கள் இடம் விட்டு இடம் போகமாட்டார்கள். அவை பிளேக் கிருமிகளைக்கொண்டு போகின்றன. முற்காலத்தில் நாம் இயற்கையாக ஒதுங்கி, விலகி யிருந்தோம். இருப்புப்பாதைகள் பஞ்சத்தையும் அதிகப்படுத்தி விட்டன. ஏனென்றால் போக்குவரவு வசதிகள் ஏற்பட்டு விட்டமையால், ஜனங்கள் தங்கள் தானியங்களை விற்று விடுகிறார்கள். அவை கிராக்கியுள்ள சந்தைகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஜனங்கள் கவலையற்றவர்களாய் விட்டார்கள். எனவே பஞ்சத்தின் கொடுமை மிகுதிப்படுகிறது. அவை மனிதனது தீயஇயற்கையை வளர்க்கின்றன. தீயமனிதர்கள் தங்கள் தீய நோக்கங்களை மிகுந்த விரைவில் நிறைவேற்றுகின்றார்கள். இந்தியாவிலுள்ள புண்ணிய ஸ்தலங்களெல்லாம் பரிசுத்த மற்றனவாய்ப் போய் விட்டன. முற்காலத்தில் ஜனங்கள் மிகவும்பாடுபட்டு அவ்விடங்களுக்குச் சென்றார்கள். எனவே பொதுவாக உண்மையான பக்தர்களே அவ்விடங்களுக்குச் சென்றார்கள். ஆனால் தற்காலத்திலோ தீயவர்கள் தங்கள் தீய காரியத்தைச் செய்யுமாறு அவ்விடங்களுக்குச் செல்கிறார்கள்.

வா:—தாங்கள் ஒருதலையாகப் பேசுகிறீர்கள். தீயவர்களைப் போலவே நல்லோர்களும் அவ்விடங்களுக்குப் போகக் கூடும். இருப்புப்பாதைகளை அவர்கள் ஏன் முழுமையும் பயன் படுத்திக் கொள்ளலாகாது?

பத்:—நன்மையானது, நத்தை ஊர்வது போல மெதுவாகச் செல்லும். எனவே, அதற்கு இருப்புப்பாதை வேண்டுவதில்லை. நன்மைசெய்ய விரும்புவோர் சுயநல முள்ளவர்களல்ல. அவர்கள் அவசரப்படுவதில்லை. ஜனங்களிடம் நல்ல கிரியைகளை உண்டு பண்ண நீண்ட காலம் செல்லுமென்பதை அவர்கள் அறிவார்கள். ஆனால் தீமைக்கு இறக்கைகள் இருக்கின்றன. ஒரு வீட்டைக் கட்ட நாட்செல்லும்; அதனை இடிப்பது எளிது. எனவே, இருப்புப்பாதைகள் தீமையை மட்டுமே பரவச் செய்ய முடியும். இருப்புப் பாதைகளால் பஞ்சங்கள் பரவுகின்றனவா என்பதில் வாதத்திற்கு இடமிருக்கலாம்; ஆனால் அவை தீமையைப் பரவச் செய்கின்றனவென்பதில் சந்தேகம் இல்லை.

வா:—அவ்வாறேயிருக்கட்டும்; ஆனால் இந்தியாவில் நாம் பார்க்கிற புதிய சுதேசிய உணர்ச்சிக்கு இருப்புப்பாதைகளே காரணமானமையால், அவற்றால் ஏற்படும் தீமைகளுக்கு மேலாகவே நன்மை ஏற்பட்டிருக்கிறது.

பத்:—இது தவறென்று நான் சொல்லுகிறேன். நாம் ஒரே ஜாதியாராய் முன்னர் இருந்ததில்லையென்றும், நாம் அவ்வாறு ஆவதற்கு இன்னும் நூற்றாண்டுகள் செல்லுமென்றும், ஆங்கிலேயர்கள் நமக்குக் கற்பித்திருக்கிறார்கள். இது ஆதாரமற்ற கூற்று. அவர்கள் இந்தியாவுக்கு வருமுன்னர் நாம் ஒரே ஜாதியாராய் வாழ்ந்திருந்தோம். ஒரே சிந்தனையை நாம் கொண்டிருந்தோம்; ஒரே முறையில் வாழ்ந்திருந்தோம். நாம் ஒரே ஜாதியாராய் இருந்தமையால் தான் அவர்கள் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினார்கள். பிற்காலத்தில் அவர்கள் நம்மைப் பிரித்தார்கள்.

வா:—இதனைத் தாங்கள் விளக்கவேண்டும்.

பத்:—நாம் ஒரு ஜாதியாராய் இருந்ததனால், நமக்குள் பேதங்கள் இருந்ததில்லை என்று நான் கூறவில்லை. ஆனால் நமது பெரியோர்கள் கால்நடையாகவோ மாட்டு வண்டி

களிலே இந்தியா முழுமையும் யாத்திரை செய்தார்களென்று சொல்லுகிறேன். அவர்கள் ஒருவர் மற்றவர் பாஷையைக் கற்றுக்கொண்டார்கள்; அவர்களுக்குள் வேற்றுமை இருந்ததில்லை. தெற்கே சேதுபந்தன ராமேசுவரத்தையும், தென்கிழக்கே ஜகந்நாதத்தையும், வடக்கே ஹரித்துவாரத்தையும் * க்ஷேத்திரங்களாக ஏற்படுத்திய அறிவாளிகளான நமது மூன்னோர்களின் நோக்கம் யாதாயிருக்கலாமென்று நீர் நினைக்கிறீர்? அவர்கள் மூடர்களல்ல வென்பதை நீர் ஒப்புக்கொள்வீர். தெய்வம் தொழுதலை வீட்டில் இருந்தும் செய்யலாமென்பதை அவர்கள் அறிவார்கள். நர்ம சிந்தனை யுள்ளவர்களுக்கு அவர்கள் வீட்டிலேயே கங்கை யிருக்கிறதென்று அவர்கள் நமக்குக் கற்பித்திருக்கிறார்கள். ஆனால், இயற்கையாகவே, பிரிவுபடாத, ஒரே தேசமென்பதை அவர்கள் அறிந்தார்கள். எனவே, அது ஒரே ஜாதியாயிருக்க வேண்டுமென்று கருதினார்கள். அவ்வாறு கருதி, அவர்கள் இந்தியாவின் பல பகுதிகளிலும் க்ஷேத்திரங்களை ஏற்படுத்தி, பூலோகத்தின் மற்றெந்தப் பகுதியிலும் இல்லாத வண்ணம், ஒரே ஜாதியென்ற கொள்கையை ஜனங்களுக்கு உண்டு பண்ணினார்கள். எந்த இரண்டு ஆங்கிலேயர்களையும் விட எந்த இரண்டு இந்தியரும் ஒத்த கருத்துடையவர்களா யிருக்கிறார்கள். நாகரிகம் அடைந்தவர்களென்றும் உயர்ந்தவர்களென்றும் கருதிக் கொண்டிருக்கும் நீரும் நானும், மற்றவர்களுமே நாம் பல ஜாதியா ரென்று நினைக்கிறோம். இருப்புப்பாதைகள் தோன்றிய பின்னரே, நாம் வேற்றுமைகளில் நம்பிக்கை வைக்கத் தொடங்கினோம். அந்த வேற்றுமைகளை இருப்புப் பாதைகள் ஒழிக்கத் தொடங்கி யிருக்கின்றனவென்று இப்பொழுது நீர் சொல்லிக் கொள்ளலாம். அபினைச் சாப்பிட்ட பின்னர், அதன் தீமையை அறியத் தொடங்கிய காரணத்தால், அபின் தின்பவன் ஒருவன் அபின் தின்பது நல்லதென்று கூறலாம். இருப்புப்பாதையைப் பற்றி நான் கூறிய விஷயத்தை நன்கு சிந்திக்குமாறு நான் உம்மை வேண்டிக்கொள்கிறேன்.

* மேற்கே துவாரகையும், மத்தியில் காசியும்.

வா:—நான் அவ்வாறே செய்கிறேன். ஆனால் இப்பொழுதும் என் மனத்தில் ஒரு கேள்வி தோன்றுகிறது. மகமதியர் காலத்திற்கு முந்திய இந்தியாவைப்பற்றித் தாங்கள் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இப்பொழுது நமது நாட்டில் மகமதியர்களும், பார்சிகளும் கிறிஸ்தவர்களும் இருக்கிறார்களே. இவர்கள் எவ்வாறு ஒரே ஜாதியாராதல் கூடும்? இந்துக்களும், மகமதியர்களும் பழைய விரோதிகள். நமது பழமொழிகளே அதனை விளக்குகின்றன. மகமதியர்கள் தங்கள் தொழுகையை மேற்கே நோக்கிச் செய்கிறார்கள்; ஆனால் இந்துக்கள் கிழக்கு நோக்கித் தங்கள் தெய்வத்தை வணங்குகிறார்கள். மகமதியர்கள் இந்துக்களை விக்கிரக ஆராதனைக்காரர் என்று இகழ்கிறார்கள். இந்துக்கள் பசுவைத் தொழுகிறார்கள்; மகமதியர்கள் அதனைக் கொல்கிறார்கள். இந்துக்கள் கொல்லா விரதத்தை நம்புகிறார்கள்; மகமதியர்கள் அதனை நம்புவதில்லை. இவ்வாறு நாம் ஒவ்வொரு வகையிலும் வேற்றுமை காண்கிறோம். இந்தியா எவ்வாறு ஒரே ஜாதியாயிருத்தல் கூடும்?

அதிகாரம்—௰

இந்தியாவின் நிலைமை (தொடர்ச்சி)

ஹிந்துக்களும் மகமதியர்களும்

பத்:—நமது கடைசிக்கேள்வி கடினமான கேள்வி. ஆயினும் தீர்க்கமாக ஆலோசனை செய்தால், அதற்குச் சமாதானம் மிகவும் எளிதென்று விளங்கும். இருப்புப்பாதைகளும், வக்கீல்களும், வைத்தியர்களும் இருப்பதனால் இந்தக்கேள்வி ஏற்படுகிறது. பிந்திய இரண்டு விஷயங்களையும் பற்றி நாம் இப்பொழுது ஆராய்வோம். இருப்புப்பாதையைப்பற்றி முன்னமே பேசி விட்டோம். மனிதன் தனது கைகளாலும் கால்களாலும் எவ்வளவு தூரம் செல்லக்கூடுமோ அவ்வளவு தூரந்தான்செல்லுமாறு அவன் இயற்கையில் ஆக்கப்பட்டிருக்கிறான் என்பதைதான சொல்லவிரும்புகிறேன். இருப்புப்பாதைகள்வாயிலாகவோ அல்லது வேறு எந்த வாயிலாகவோ நாம் ஓர் இடத்திலிருந்து மற்றொரிடத்திற்கு ஓடிக்கொண்டிராவிடின் வரக்கூடிய குழப்பத்தில் பெரும்பகுதி ஒழிந்து விடும். நமது கஷ்டங்களை நாமே உண்டாக்கிக் கொண்டோம். கடவுள் மனிதனது உடலமைப்பில் அவனது போக்கு வரவு விருப்பத்திற்கு ஓர் எல்லை ஏற்படுத்திவிட்டார். மனிதன் உடனே அந்த 'ஹத்'தை மீறிச் செல்வதற்குரிய வழியைக் கண்டு பிடிக்கத் தொடங்கிறான். மனிதனது தலைவனை அறியுமாறு கடவுள் அவனுக்கு அறிவைக்கொடுத்தார். கடவுளை மறக்குமாறு, அவன் அதனைத் தீய வழிகளில் செலுத்தினான். என்னைச் சூழ்ந்துள்ள ஜனங்களுக்கு மட்டும் நான் பயனுள்ளவனாயிருக்குமாறு, கடவுள் என்னை அமைத்திருக்கிறார்; ஆனால் எனது செருக்கினால், உலகத்திலுள்ள ஒவ்வொர் உயிருக்கும் நான் எனது சரீரத்தால் உழைக்க வேண்டுமென்று

கண்டு பிடித்து விட்டதாக நடித்துச் சொல்கிறேன். இவ்வாறு முடியாத காரியத்தைத் தொடங்குவதில், பலவித இயந்திரங்கள், சாலைகள் இவற்றுடன் மனிதன் மோதி, முற்றிலும் குழப்பம் அடைகிறான். இந்த நியாயத்தின்படி இருப்புப்பாதைகள் பெரிதும் ஆபத்தானவை யென்பது உமக்கு விளங்கலாம். இதனால் மனிதன் தனது கடவுளினின்றும் வெகுதூரம் விலகிப் போய்விட்டான்.

வா:—எனது கேள்விக்கு உமது பதிலைக் கேட்க நான் மிகவும் ஆவலா யிருக்கிறேன். மகமதிய மதம் உமது நாட்டிற்கு வந்ததனால், உமது ஜாதிக் கட்டைக் குலைக்க வில்லையா?

பதி:—பல சமயங்களைச் சேர்ந்த ஜனங்கள் இருப்பதால், இந்தியா ஒரே ஜாதியா யில்லாமற் போய்விடாது. அந்நியர்கள் வருவதனால், ஜாதி அழிந்துவிடாது; அவர்கள் அதில் கலந்து விடுகிறார்கள். அத்தகைய நிலைமை ஏற்படும்பொழுது தான் ஒரு நாடு ஒரு ஜாதியாகும். கலந்துகொள்ள அந்த நாட்டிற்குச் சக்தி இருத்தல்வேண்டும். இந்தியா எப்பொழுதும் அத்தகைய நாடாய் இருந்து வருகிறது. உண்மையில், எத்தனை மனிதர்கள் இருக்கிறார்களோ அத்தனை மதங்களும் இருக்கின்றன. ஆனால் தேசிய உணர்ச்சியை அறிந்திருப்பவர்கள் பிறர் மதத்தில் தலையிட மாட்டார்கள். அவர்கள் தலையிட்டால், அவர்கள் ஒரு ஜாதியென்று கருதப்படுதற் குரியவர்க ளாகார்கள். இந்தியாவில் ஹிந்துக்கள் மட்டுமே இருக்கவேண்டுமென்று ஹிந்துக்கள் கருதினால் அவர்கள் கனவு காண்பவர்க ளாவார்கள். இந்தியாவைத் தங்கள் தாய் நாடாக்கிக்கொண்ட ஹிந்துக்களும் மகமதியர்களும், பார்ஸிகளும், கிறிஸ்தவர்களும் சகோதரர்க ளாவார்கள். அவர்கள் தங்கள் சொந்த நலத்தின் பொருட்டேனும் ஒத்து வாழ வேண்டும். உலகத்தின் எந்தப் பகுதியிலும் ஒரு ஜாதி ஒரு மதமாயிருக்கவில்லை; இந்தியாவிலும் அவ்வாறு இருந்ததில்லை.

வா:—ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் உடன் பிறந்தன்ன பகைமையைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

பத்:—சமத பொது விரோதியால் அந்த வார்த்தை கண்டு பிடிக்கப்பட்டது. ஹிந்துக்களும் மகமதியர்களும் ஒருவரோடு ஒருவர் போராடிக்கொண்டிருந்தபொழுது அவர்கள் அவ்வாறு தான் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் போராட்டம் முடிந்து எவ்வளவோ காலமாய்விட்டது. அவ்வாறுனால், இனி விரோதம் எங்கே இருக்கும்? ஆங்கிலேயர்கள் வந்த பின்னரே, நாம் போராட்டத்தை ஒழித்தோம் என்று நீர் தயவு செய்து நினைத்துக்கொள்ளாதீர். முஸ்லிம் அரசாட்சியில் ஹிந்துக்கள் சிறந்தோங்கினர்கள்; ஹிந்துக்கள் அரசாட்சியில் முஸ்லிம்கள் சிறந்தோங்கினார்கள். இருசார்பாரும் தங்களுக்குள் போராடுவது கேடான காரியமென்றும், ஆயுத வன்மையால் ஒருவர் சமயத்தை மற்றவர் மாற்ற முடியாதென்றும் அறிந்துகொண்டனர். எனவே, இருசார்பாரும் சமாதானமாய் வாழ்ந்திருப்பதாக முடிவு செய்தனர். ஆங்கிலேயர்கள் வந்த பின்னர் சண்டைகள் மீண்டும் தொடங்கலாயின.

நீர் கூறிய பழமொழிகள் அவர்கள் இருவரும் போராடிக் கொண்டிருந்தபொழுது ஏற்பட்டவை; இப்பொழுது அவற்றைக் கூறுதல் தீமை விளைவிப்பதாகும். அநேக ஹிந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் ஒரே மூதாதைகளென்பதையும், ஒரே ரத்தம் அவர்கள் நரம்புகளில் ஓடுகிறதென்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும். மதத்தை மாற்றிக்கொண்டதால், மக்கள் பகைவர்களாய் விடுவார்களா? மகமதியர்களின் கடவுள் இந்துக்களின் கடவுளினின்று வேறானவரா? சமயங்கள் ஒரே இடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் பல வேறு வழிகளாகும். ஒரே இடத்திற்குப்போய்ச் சேர்வதாயின், நாம் பலவழிகளிற் செல்வதால் என்ன தீங்கு? சச்சரவுக்கு எங்கே இடம் இருக்கிறது?

மேலும் சைவர்களுக்கும் வைஷ்ணவர்களுக்கும் கொடிய பழமொழிகள் இருக்கின்றன. அவ்வாறிருந்தும் இவ்விருவரும் ஒரே ஜாதியைச் சேர்ந்தவரல்லவென்று சொல்வார் இல்லை.

வேதமதம் ஜைனமதத்தினின்று வேறான தென்று சொல்லு
கிறார்கள்; ஆனால் அவ்விருசமயத்தாரும் வெவ்வேறு ஜாதியா
ரல்லர். உண்மை யாதெனில், நாம் அடிமைகளாய் விட்
டோம்; அதனால் நாம் சச்சரவு செய்து, நமது சச்சரவுகளை
மூன்றாவது நபரால் முடிவு செய்து கொள்ள விரும்புகிறோம்.
மகமதியர்களைப் போலவே ஹிந்துக்களிலும் விக்ரகங்களை உடைப்
பவர்கள் உண்டு. மெய்யறிவு நமக்கு வரும்பொழுது, பிறசம
யத்தவருடன் நாம் போராடுவது அவசியமில்லை யென்பதை
அறிவோம்.

வா:—பசுப் பாதுகாப்பைப் பற்றித் தங்கள் அபிப்பிரா
யத்தை அறிய விரும்புகிறேன்.

பத்:—எனக்கும் பசுவிடம் மதிப்புண்டு; அதாவது அதனி
டம் அன்பு செலுத்துகின்றேன். பசு இந்தியாவைப் பாதுகாக்
கிறது; ஏனெனில் இந்தியா விவசாய நாடா யிருத்தலின் அது
பசுவையும் எருதையும் ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. பசு
எண்ணிறந்த வழிகளில் மிகவும் பயனுள்ள பிராணி. நமது மக
மதிய ஸகோதரர்கள் இதனை ஒத்துக் கொள்வார்கள்.

ஆனால் நான் பசுவை எவ்வாறு மதிக்கிறேனோ அவ்வாறே
எனது நாட்டாரையும் மதிக்கிறேன். ஒரு மனிதன், அவன் மக
மதியனா யிருப்பினும், ஹிந்துவாயிருப்பினும், ஒரு பசுவைப்
போலவே அவ்வளவு பயனுள்ளவன். அவ்வாறானால், ஒரு பசு
வைக் காப்பாற்றும் பொருட்டு, ஒரு மகமதியனுடன் போராடு
வதா, அவனைக் கொல்வதா? அவ்வாறு செய்வதில் பசுவுக்கும்
மகமதியனுக்கும் சத்துருவாகிறேன். எனவே, பசுவைக் காப்
பதற்கு எனக்குத் தெரிந்த ஒரே வழி என்னவென்றால் எனது
மகமதிய ஸகோதரனிடம் சென்று நாட்டின் பொருட்டுப் பசு
வைக் கொல்லலாகாதென்று வேண்டிக்கொள்வதே. அவன்
எனது வார்த்தையைக் கேளாவிடின் அது எனது திறமைக்கு
மிஞ்சிய விஷயமென்பதற்காகவே பசுவை அதன் கதிக்கு விட்டு
விடுவேன். பசுவின்மீது நான் பெரிய கருணையுடையவனா

விரும்பின், அதற்காக எனது உயிரை அர்ப்பணம் செய்வேன். ஆனால் எனது சகோதரனுடைய உயிரை மாய்க்க மாட்டேன். இது தான் நமது சமயத்தின் தர்மம்.

மனிதர்கள் பிடிவாதம் உள்ளவர்களாய் விடின் அது சகஜமாய் முடியும். நான் ஒரு புறம் இழுத்தால் எனது மகமதிய சகோதரன் மற்றொரு புறம் இழுப்பான். நான் என்னைப்பெரியவனாக மதித்துக் கருவம் கொண்டால் அவனும் அவ்வாறே நடந்து கொள்வான். நான் அவனிடம் வணக்கமாக நடந்து கொண்டால் அவன் இன்னும் வணக்கமாக நடப்பான்; அவன் அவ்வாறு செய்யாவிடினும், அவனுக்கு வணக்கம் செய்ததால் நான் தவறிழைத்தாக யாரும் கருதமாட்டார்கள். ஹிந்துக்கள் பிடிவாதம் செய்யத் தொடங்கியவுடன் பசுக் கொலை பெருகியது. பசுப் பாதுகாப்புச் சங்கங்களைப் பசுக் கொலைச் சங்கங்களென்று கருதவேண்டுமென்பது எனது அபிப்பிராயம். அத்தகைய சங்கங்கள் நமக்கு வேண்டியதாயிருப்பது நமக்கு அவமானமாகும். பசுக்களைப் பாதுகாக்கும் வழியை நாம் மறந்து விட்ட பொழுது, அத்தகைய சங்கங்கள் அவசியமாயின போலும்.

எனது உடன் பிறந்த சகோதரன் ஒருவன் ஒரு பசுவைக் கொல்லப்போகும் தருணத்தில் நான் என்ன செய்வது? நான் அவனைக் கொல்வதா? அல்லது அவன் காலில் விழுந்து அவனை வேண்டிக் கொள்வதா? பிந்திய வழியை நான் மேற்கொள்ள வேண்டுமென்பதை நீர் ஒத்துக் கொள்வீரானால், எனது முஸ்லிம் சகோதரனிடமும் அவ்வாறே நான் நடந்து கொள்ள வேண்டும்.

ஹிந்துக்கள் பசுவைக் கொடுமையாக நடத்தும்பொழுது அதை அழிந்து போகாமல் அதனைக் காப்பாற்றுவது யார்? பசுக்களின் கன்றுகளை தங்கள் தடிகளினால் ஹிந்துக்கள் கருணையின்றி அடிக்கும்பொழுது அவர்களுடன் யார் வாதிக்கிறார்கள்?

ஆனால் இது நாம் ஒரு ஜாதியாராய் வாழ்வதைத் தடுத்து விடவில்லை.

இறுதியாக, ஹிந்துக்கள் கொல்லா விரதத்தில் நம்பிக்கை கொண்டிருப்பதும், மகமதியர்கள் அதில் நம்பிக்கை கொள்ளாதிருப்பதும் உண்மையானால், ஹிந்துக்களின் கடமை தான் என்ன? கொல்லா விரதத்தைக் கொண்டவன் தன் உடன் பிறந்த மனிதனைக் கொல்லலாமென்று சொல்லப்படவில்லை. அவனுக்கு ஒரே வழி தான் உண்டு. ஓர் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு, அவன் மற்றோர் உயிரைக் கொல்ல லாகாது. அவன் ஒருவரைக் கொல்லவேண்டாமென்று வாதிக்க மட்டும் செய்யலாம். அது தான் அவன் கடமை.

ஆனால் ஒவ்வோர் ஹிந்துவும் அஹிம்சையில் நம்பிக்கை கொண்டிருக்கிறானா? விஷயத்தை ஆழ்ந்து நோக்கினால், ஒருவன் கூட அத்தகைய சமயத்தைக் கையாளவில்லை. ஏன் எனில், நாம் உயிர்க்கொலை செய்கிறோம். நாம் அந்தச் சமயத்தைப் பின்பற்றுவதாகச் சொல்லிக் கொள்கிறோம். ஏன் என்றால் எத்தகைய உயிரையும் கொல்லும் பழியினின்று விலகிக் கொள்ள விரும்புகிறோம். பொதுவாக நோக்கினால், ஹிந்துக்களில் பலர் புலால் உண்கின்றனர். எனவே, அவர்கள் கொல்லா விரதத்தைக் கைக்கொண்டவரல்லர். எனவே, ஹிந்துக்கள் அஹிம்சையில் நம்பிக்கை கொண்டும், மகமதியர்கள் அதில் நம்பிக்கை கொள்ளாமலும் இருப்பதால், இருவரும் ஒத்து வாழ்ந்திருக்க முடியாதென்று கூறுவது அநியாயமாகும்.

இந்தச் சிந்தனைகளெல்லாம் சுய லாபமும் பொய்ம்மையும் உள்ள சமயக் குருக்களால் நமது மனத்தில் ஏற்றப்பட்டவை. ஆங்கிலேயர்கள் எஞ்சிய வேலையை முடித்து விட்டார்கள். சரித்திரம் எழுதுவதில் அவர்களுக்கு ஒரு வழக்கமுண்டு. பூலோகத்திலுள்ள சகல ஜனங்களின் பழக்க வழக்கங்களையும் ஆராய்ச்சி செய்வதாக அவர்கள் நடிக்கிறார்கள். கடவுள் நமக்கு ஓர்

அளவுள்ள திறமையை அளித்திருக்கிறார்; ஆனால் அவர்கள் கடவுளின் கடமையை மேற்கொண்டு, புதிய ஆராய்ச்சிகளை யெல்லாம் செய்யத் தொடங்குகிறார்கள். அவர்கள் தங்கள் ஆராய்ச் சிகளை மிகவும் ஏற்றமாக எழுதி அவற்றை நாம் வேதவாக்காக நம்புமாறு செய்துவிடுகிறார்கள். நாம் நமது அறிவீனத்தால் அவர்கள் கால்களில் விழுகிறோம்.

விஷயங்களின் உண்மையை அறிய விரும்புவோர் கொரா னைப் படிக்கலாம்; அதில் ஹிந்துக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய நூற்றுக்கணக்கான வாக்கியங்களைக் காணலாம்; அதுபோலவே பகவத் கீதையிலும் ஒரு மகமதியனும் மறுக்கவொண்ணாத வாக்கியங் கள் உண்டு. எனக்குப் பொருள் விளங்காத, அல்லது எனக்கு விருப்பமில்லாத வாக்கியங்கள் சில கொரானில் இருந்தால் மகமதியனை நான் வெறுப்பதா? சண்டைக்கு இருவர் வேண் டும். நான் ஒரு மகமதியனுடன் சண்டையிட விரும்பாவிடின், அவன் என்னை வலியச் சண்டைக்கு இழுக்க முடியாது. அது போலவே மகமதியன் சண்டையிட விரும்பாவிடின் நான் அவ னைச் சண்டைக்கு இழுக்க முடியாது. ஆகாயத்தில் கையை அடித்தால் அது சுளுக்கிக்கொள்ளும். ஒவ்வொருவனும், தனது சமயத்தின் உண்மையை அறிந்து, அதன்படி ஒழுகி, போலிக் குருக்களின் போதனைகளைக் கேளாமலிருந்தால், சச்சரவுக்கு இடம் இராது.

வா:—ஆனால் ஆங்கிலேயர்கள் இருவகுப்பாரையும் ஒன்று சேர விடுவார்களா?

பத்:—இந்தக் கேள்வி உமது கோழைத்தனத்தினால் ஏற் படுகிறது. இது நமது அறிவின்மையைக் காட்டுகிறது. இரண்டு சகோதரர்கள் ஒன்று கூடி வாழவிரும்பினால், மூன்றாவது மனி தன் அவர்களைப் பிரிக்க முடியுமா? அவர்கள் தீய யோசனைகளைக் கேட்பார்களானால், அவர்களை நாம் அறிவிலிகளென்று கருது வோம். அவ்வாறே ஹிந்துக்களும் மகமதியர்களுமான நாமும், நம்மைப் பிரிக்குமாறு அவர்களுக்கு இடம் கொடுத்தால், ஆங்கி

லேயர்களைவிட நம்மீதே நாம் பழிசுமத்தவேண்டும். பச்சை மட்குடம் எதிலேனும் மோதினால் உடைந்துபோம், ஒரு கல்லில் தப்பினாலும், மற்றொரு கல்லில் உடைந்துபோம், ஆபத்தினின்று விலக்கிவைப்பதால் அது உடையாமல் இராது; எந்தக் கல்லாலும் உடையாதவாறு அதனைச் சூளையில் வைத்துச் சுடுவதே அதனைக் காப்பதற்கு வழியாகும். அதுபோல, சூளையில் வைத்து நன்றாய்ச் சுட்டபானையைப்போல நமது உள்ளங்களையும் செய்ய வேண்டும். அவ்வாறுசெய்தால் நாம் எவ்வித இடையூறிலும் உறுதியாய் நிற்போம். ஹிந்துக்கள் இதனை எளிதில் செய்யலாம். அவர்கள் தொகையில் மிகுந்தவர்கள்; மிகுந்த கல்விப் பயிற்சி பெற்றவர்களென்று தங்களைக் கருதிக்கொள்கிறார்கள். எனவே, மகமதியர்களிடம் கொண்டுள்ள நட்பைக் கெடாமல் காத்துக் கொள்ள அவர்கள் தகுதியுள்ளவர்கள்.

இருவகுப்பாருக்கும் ஒருவருக்கொருவர் நம்பிக்கைக்குறை வேற்பட்டிருக்கிறது. எனவே மகமதியர்கள், மார்லி பிரபுவிடமிருந்து சில உரிமைகளைக் கேட்டார்கள். இதனை ஏன் ஹிந்துக்கள் எதிர்க்கவேண்டும்? ஹிந்துக்கள் எதிர்க்காமலிருந்திருந்தால் ஆங்கிலேயர்கள் அதனைக் கவனித்திருப்பார்கள். நாளடைவில் மகம்மதியர்கள் ஹிந்துக்களிடம் நம்பிக்கை கொள்ளத் தொடங்குவார்கள்; அதனால் சகோதரபாவம் வளர்ந்திருக்கும். நமது சச்சரவுகளை ஆங்கிலேயர்களிடம் கொண்டு போவது பற்றி வெட்கம் நாம் அடைய வேண்டும். மகமதியர்களுக்கு விட்டுக்கொடுப்பதால் ஹிந்துக்களுக்கு ஒரு நஷ்டமும் இல்லையென்பதை ஒவ்வொருவரும் தாமாக அறிந்து கொள்ளலாம். மற்றொருவனுக்குத் தன்னிடம் நம்பிக்கையை உண்டு பண்ணிய மனிதன் இவ்வுலகத்தில் எதனையும் இழந்திருப்பதில்லை.

ஹிந்துக்களுக்கும் மகம்மதியர்களுக்கும் ஒரு நாளும் போராட்டம் நேரிடுமென்று நான் சொல்ல வரவில்லை. ஒன்றாய் வாழும் இரண்டு சகோதரர்களுக்குள் அடிக்கடி சச்சரவு ஏற்படு

கிறது. நாம் சில சமயங்களில் சண்டையிட்டு, மண்டை உடைத்துக் கொள்வோம். அத்தகைய காரியம் அவசிய மில்லைத் தான்; ஆனால் எல்லாரும் ஒரே மனதுடையவர்களா யில்லை. மனிதர்கள் கோபத்திற்கு ஆளாயிருக்கும் பொழுது, அவர்கள் அனேக அறிவற்ற செயல்களைச் செய்கிறார்கள். இவற்றை நாம் பொறுத்துக் கொள்ள வேண்டும். ஆனால் நமக்குள் சச்சரவு ஏற்பட்டு விடும்பொழுது, நாம் ஒரு வக்கீலை ஏற்படுத்தி, ஆங்கிலேயர்களிடமோ, அல்லது எந்த நீதி ஸ்தலங்களுக்கோ நாம் போக வேண்டிய அவசியம் இல்லை. இருவர் சண்டையிடுகின்றனர்; இருவர் மண்டைகளும் உடைகின்றன; அல்லது ஒருவர் மண்டை மட்டும் உடைகின்றது. மூன்றாவது மனிதன் எவ்வாறு அவர்களுக்கு நீதி யளித்தல் கூடும்? போராடுபவர்களுக்குக் கேடு ஏற்படுகிறது.

அதிகாரம்—கக

இந்தியாவின் நிலைமை (தொடர்ச்சி)

வக்கீல்கள்

வா:—இருவர் சண்டையிட்டால், அவர்கள் நியாயஸ்தலத்திற்குச் செல்லலாகாதென்று தாங்கள் சொல்லுகிறீர்கள்; இது அதிசயமாயிருக்கிறது.

பத்:—நீர் அதனை அதிசயமென்று கூறினாலும் சரி, இல்லையென்றாலும் சரி; அதுதான் உண்மை. நமது கேள்வி நம்மை வக்கீல்களிடமும் வைத்தியர்களிடமும் கொண்டுபோய் விடுகிறது. வக்கீல்கள் இந்தியாவை அடிமைப்படுத்தி யிருக்கிறார்களென்பதும், ஹிந்து மகமதிய வேற்றுமைகளை வளர்த்திருக்கிறார்களென்பதும், ஆங்கிலேயர்கள் அதிகாரத்தை நிலைபெறச் செய்திருக்கிறார்களென்பதும் எனது உறுதியான கொள்கையாகும்.

வா:—இந்தப் பழிகளைச் சொல்வது எளிது; ஆனால் இவற்றை விளக்குவது கஷ்டமாகும். வக்கீல்கள் இல்லாவிடின், யார் நமக்குச் சுதந்தர மார்க்கத்தைக் காட்டியிருப்பார்கள்? யார் ஏழைகளை ஆதரித்திருப்பார்கள்? யார் நீதி கிடைக்குமாறு செய்திருப்பார்கள்? உதாரணமாக, காலஞ்சென்ற ஸ்ரீமான் மனமோகன் கோஷ் எண்ணிறந்த ஏழைகள் வழக்கில் இலவசமாக வாதித்தார்? தாங்கள் எவ்வளவோ புகழ்ந்து கூறிய காங்கிரஸின் உயிரும் ஊக்கமும் வக்கீல்கள் முயற்சியையே பொறுத்து நிற்கின்றன. அவ்வளவு மதிப்புள்ள வகுப்பார் மீது பழி கூறல் நீதியை அநீதியென்று கூறுவதாகும். வக்கீல்களை இழித்துக் கூறுவதால், தாங்கள் பத்திரிகைச் சுதந்தரத்தைத் துர் விநியோகம் செய்கிறீர்கள்.

பத்:—ஒரு காலத்தில் நானும் உம்மைப்போலவே நினைத்துக்கொண்டிருந்தேன். அவர்கள் ஒரு காலத்திலும் ஒரு நன்மையும் செய்திருப்பதில்லையென்று நான் உமக்கு விளக்கிக் காட்ட விரும்பவில்லை. ஸ்ரீமான் கோகலை நான் போற்றுகிறேன். அவர்கள் ஏழைகளுக்குத் துணை புரிந்தது உண்மையே. காங்கிரஸ் வக்கீல்களுக்கு ஒருவாறு கடமைப்பட்டிருப்பது சம்பத்தக்கது. வக்கீல்களும் மனிதர்களே; ஒவ்வொரு மனிதனிடத்தும் ஒரு நன்மையுண்டு. வக்கீல்கள் எப்பொழுதேனும் நன்மை செய்திருக்கிறார்களென்று சொல்வோமென்றால், வக்கீல்களாகவன்றி, மனிதர்களாகவே அந்த நன்மையைச் செய்திருக்கிறார்கள் என்று தெரியவரும். அந்தத் தொழில் அதர்மத்தைக் கற்பிக்கிறதென்று உமக்குக் காட்டுவதே எனது நோக்கமெல்லாம். அதன் தீமைகளினின்று தப்புதல் அரிது

ஹிந்துக்களும் மகமதியர்களும் சண்டையிட்டுக் கொள்கிறார்கள். சாதாரணமான ஒரு மனிதன், அதுபற்றி அனைத்தையும் மறந்து விடும்படி அவர்களுக்குச் சொல்வான். இருவர்மீதும் குற்றமிருக்கக் கூடுமென்று சொல்லி, இனிச் சண்டையிடலாகாதென்று அவர்களுக்குப் புத்திமதி கூறி அனுப்புவான். ஆனால் அவர்கள் வக்கீல்களிடம் போகிறார்கள். கட்சிக்காரர்களுடன் சேர்ந்துகொண்டு அவர்களுக்குச் சாதகமாகப் பெரும்பாலும், அவர்களுக்குத் தெரியாத வழிகளையும் வாதங்களையும் கண்டு பிடிப்பது வக்கீல்களின் வேலை. அவர்கள் அவ்வாறு செய்யாவிடின், தங்கள் தொழிலுக்கு இழிவுண்டு பண்ணிவிட்டதாகக் கருதப்படுவார்கள். எனவே வக்கீல்கள் வழக்கமாக, சண்டைகளை அடக்குவதற்கு மாறாக, அவற்றை வளர்க்கிறார்கள். மேலும், மனிதர்கள் பிறரைக் கஷ்டங்களினின்று, துணைபுரிந்து, விலக்குவதற்காக அந்தத் தொழிலை மேற்கொள்வதில்லை; ஆனால் தாங்கள் பணக்காரர்களாவதற்காகவே அந்தத் தொழிலை மேற்கொள்கிறார்கள். அது செல்வந்தர்களாவதற்குரிய வழிகளில் ஒன்றாகும். வழக்குகளை

வளர்ப்பதில் தான் அவர்களுக்கு நன்மையுண்டு. மனிதர்களுக்குள் வழக்கு ஏற்படும் பொழுது, அவர்கள் மகிழ்ச்சியடைவதை நான் கண்டிருக்கிறேன். சிறிய வக்கீல்கள் உண்மையில் அவற்றை உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் குமாஸ்தாக்கள் அட்டைகளைப்போல ஏழைகளின் ரத்தத்தை உறிஞ்சுகிறார்கள். வக்கீல்கள் வேலையற்ற மனிதர்கள். சோம்பேறி மனிதர்கள், சுகபோகங்களில் களிக்கும் பொருட்டு, அத்தகைய தொழிலை மேற்கொள்கிறார்கள். இது உண்மையான கூற்றாகும். வேறு என்ன கூறினும் அது நடிப்பாகும். தங்கள் தொழில் பெருமையுள்ள தொழிலென்று வக்கீல்கள் தான் சொல்லிக்கொள்கிறார்கள். தங்கள் புகழை உண்டுபண்ணுவது போலவே, அவர்கள் சட்ட திட்டங்களையும் உண்டுபண்ணுகிறார்கள். தங்கள் 'பீசை'யும் தாங்களே முடிவு செய்து கொள்கிறார்கள். ஏழை ஜனங்கள் அவர்களைத் தேவலோக வாசிகளென்று கருதுமாறு, அவர்கள் அவ்வளவு ஆடம்பரங்கள் செய்கிறார்கள்.

சாதாரண வேலைக்காரர்களை விட அவர்களுக்கு ஏன் அதிகமான கூலி வேண்டும்? அவர்களுக்குத் தேவைகள் மிகுதியாயிருப்பானேன்? கூலிக்காரர்களைவிட அவர்கள் நாட்டுக்கு எந்த வழியில் மிகுந்த பயனுள்ளவர்கள்? நன்மை செய்பவர்களுக்கு அதிகக் கூலி கொடுக்க வேண்டுமோ? பொருளின் பொருட்டு அவர்கள் நாட்டிற்கு ஏதேனும் செய்திருந்தால், அதனை நன்மையென்று எவ்வாறு கருதலாம்?

ஹிந்து மகமதிய சச்சரவுகளைப்பற்றி ஏதேனும் அறிந்தவர்கள் வக்கீல்கள் தலையிடுவதாலேயே அவை பெரும்பாலும் நேர்கின்றன என்பதை அறிவார்கள். சில குடும்பங்கள் அவர்களால் நாசமடைந்து விட்டன; சகோதரர்களை அவர்கள் சத்துருக்களாக்கிவிட்டார்கள். வக்கீல்களின் அதிகாரத்தில் வந்த சில ஜமீன்தாரிகளுக்குக் கடன்பளு மிகவும் சுமந்துவிட்டது. அநேக ஜமீன்தாரிகள் தங்களுக்கு இருந்ததையெல்லாம் இழந்து விட்டார்கள். இத்தகைய உதாரணங்கள் எத்தனையோ கூறலாம்.

ஆனால் அவர்கள் நாட்டிற்கு இழைத்திருக்கிற மிகப்பெரிய கேடு ஆங்கிலேயர்களின் பிடியை உறுதிப்படுத்தி யிருப்பதே யாகும். நியாய ஸ்தலங்கள் இல்லாமல் ஆங்கிலேயர்கள் தங்கள் அரசாங்கத்தை நடத்த முடியுமென்று நீர் நினைக்கிறீரா? நியாய ஸ்தலங்கள் ஜனங்களின் நன்மைக்காக ஏற்பட்டிருக்கின்றன வென்று கருதுவது தவறு. தங்கள் அதிகாரத்தை நிலைநிறுத்த விரும்புவோர் நியாய ஸ்தலங்களின் வாயிலாக அவ்வாறு செய்கிறார்கள். ஜனங்கள் தங்கள் வழக்குகளைத் தாங்களே முடிவு செய்து கொள்வார்களானால், மூன்றாவது மனிதர் அவர்கள்மீது எவ்வித அதிகாரமும் செலுத்த முடியாது. உண்மையாகவே, மனிதர்கள் தங்கள் வழக்குகளைப் போர் புரிந்தோ, தங்கள் உறவினரைக்கொண்டோ முடிவுசெய்து கொண்ட காலத்தில், அவர்கள், ஆண்மை குன்றாதவர்களா யிருந்தார்கள். அவர்கள் நியாய ஸ்தலங்களுக்குச் செல்லத் தொடங்கிய பொழுது, மிகவும் ஆண்மை குறைந்தவர்களாயும் கோழைகளாயும் ஆய் விட்டார்கள். ஜனங்கள் தங்கள் வழக்குகளை யுத்தஞ் செய்து முடிவு செய்து கொள்வது, உண்மையில் அநாகரிகத்திற்கு அறிகுறிதான். உமக்கும் எனக்கும் இடையில் உள்ள வழக்கைத் தீர்த்து விடும்படி நான் மூன்றாவது மனிதனைக் கேட்டுக் கொண்டால், அதில் அநாகரிகத்தில் குறை யுண்டோ? உண்மையாகவே, மூன்றாவது மனிதரின் முடிவு எப்பொழுதும் சரியா யிருப்பதில்லை. யார் பக்கம் நியாய மென்பதைக் கட்சிக்காரர்கள் தான் அறிவார்கள். நாம் நமது பேதமையாலும் அறிவின்மையாலும், ஓர் அந்நியன் நமது பணத்தைப் பெற்றுக்கொண்டு, நமக்கு நீதி யளிக்கிறானென்று நம்புகிறோம்.

ஆயினும், நினைவில் வைத்துக்கொள்ளவேண்டிய முக்கிய விஷயம் யாதெனில், வக்கீல்கள் இல்லாமல் நியாயஸ்தலங்களை ஏற்படுத்தி யிருக்கவோ, நடத்தியிருக்கவோ முடியாது. நியாயஸ்தலங்கள் இல்லாவிட்டால், ஆங்கிலேயர்கள் அரசாள முடியாது. ஆங்கில நீதிபதிகள், ஆங்கில வக்கீல்கள், ஆங்கிலப்போலீசார் மட்

லுமே யிருந்தால் அவர்கள் ஆங்கிலேயர்களை மட்டுமே அரசாள முடியும். இந்திய நீதிபதிகளும் இந்திய வக்கீல்களும் இல்லாமல் ஆங்கிலேயர்கள் ஒன்றும் செய்ய முடியாது. ஆதியில் வக்கீல்கள் எவ்வாறு உற்பத்தி செய்யப்பட்டார்களென்பதையும், அவர்களுக்கு எவ்வாறு சாதகம் செய்யப்பட்டதென்பதையும் நீர் நன்றாய்த் தெரிந்துகொள்ளவேண்டும். அவ்வாறானால் அத்தொழிலின்மீது எனக்குள்ளது போன்ற வெறுப்பே உமக்கும் ஏற்படும். வக்கீல்கள் தங்கள் தொழிலை விட்டுவிட்டு, அதனை விபசாரம்போல இழிவாகக் கருதுவார்களானால், ஆங்கில அரசாட்சி ஒருநாளில் குலைந்துபோம். மீன்கள் நீரை விரும்புவதுபோல, நாம் சண்டைகளையும் நியாயஸ்தலங்களையும் விரும்புகிறோமென்ற பழி நம்மீது ஏற்படுவதற்குக் காரணமாயிருப்பவர்கள் அவர்களே. நான் வக்கீல்களைப்பற்றிச் சொன்னவையெல்லாம் நீதிபதிகளுக்கும் ஒருங்கே பொருந்தும். அவர்கள் இருவரும் சகோதரர்கள்; ஒருவர் மற்றொருவருக்கு ஆதரவாயிருக்கிறார்.

அதிகாரம்—கஉ

வைத்தியர்கள்

வா:—இப்பொழுது எனக்கு வக்கீல்கள் விஷயம் தெரிய
வருகிறது. அவர்கள் செய்திருக்கக்கூடிய நன்மை தற்செய
லாகச் செய்யப்பட்டது. அந்தத் தொழில் நிச்சயமாக வெறுக்
கத்தக்க தென்று எனக்குத் தோன்றுகிறது. ஆயினும், தாங்கள்
வைத்தியர்களையும் கூட இழுக்கிறீர்களே; அது எப்படி?

பத்:—நான் உமக்குச் சொல்லும் கொள்கைகள் என்னால்
அநுஷ்டிக்கப்படுபவை. அவை புதியவை யல்ல. மேல்நாட்டு
ஆசிரியர்கள் வக்கீல்களையும் வைத்தியர்களையும் பற்றி இன்னும்
கடினமாகப் பேசியிருக்கிறார்கள். ஒருவர் தற்கால நவீனமுறை
முழுமையையும் ஓர் உபாஸ் மரத்திற்கு ஒப்பிட்டிருக்கிறார்.
வக்கீல் தொழில், வைத்தியம் முதலிய பிறர்மீது ஜீவிக்கும்
தொழில்கள் அதன் கிளைகளாக உருவகம் செய்யப்பட்டிருக்
கின்றன; அடி மரத்தின்மீது உண்மைச் சமயமாகிற கோடரி
உயர்த்தப்பட்டிருக்கிறது. அதர்மம் அம்மரத்தின் வேர். எனவே
இந்தக் கொள்கைகள் என் மனத்திலிருந்து நேரே வரவில்லை;
அவை அநேகர் அநுபவங்களின் தொகுதியாகும். ஒரு
காலத்தில் நான் வைத்தியத் தொழிலில் பெரிதும் விருப்பம்
உடையவனா யிருந்தேன். நாட்டின் நலத்தைக் கருதி
வைத்தியனாக வேண்டுமென்று நான் கருதினேன். அந்தக்
கருத்து இப்பொழுது எனக்கு இல்லை. நமக்குள் வைத்தியர்
கள் ஏன் மிகவும் கௌரவமான பதவியை வகித்திருப்பதில்லை
யென்பது இப்பொழுது எனக்கு விளங்குகிறது.

ஆங்கிலேயர்கள் நம்மை உறுதியாய்ப் பற்றிக் கொள்வ
தற்கு வைத்தியத் தொழிலை நன்றாய்ப் பயன் படுத்தி யிருக்கிறார்

கள். ஆங்கில வைத்தியர்கள் பல ஆசியாக் கண்டத்து அரசர்களிடம் ராஜீய நன்மைக்காக தங்கள் தொழிலை உபயோகித்திருப்பதாகத் தெரிகிறது.

வைத்தியர்கள் நம்மை அநேகமாய் நிலைகுலைத்து விட்டார்கள். போலிவைத்தியர்கள் உயர்ந்த பட்டம் பெற்ற வைத்தியர்களை விடச் சிறந்தவர்களென்று நான் நினைக்கிறேன். நாம் சிறிது யோசனை செய்வோம். உடம்பைக் கவனிப்பது வைத்தியர் வேலை; அல்லது கிரமமாய்க் கூறினால், அது கூட இல்லை. உடம்பில் ஏற்படுகிற நோய்களை அதினின்று ஒழிப்பதே அவர்கள் வேலை. இந்த நோய்கள் எவ்வாறு ஏற்படுகின்றன? நமது கவனக்குறைவால், அல்லது மிதமிஞ்சிய போகத்தால். நான் அளவுக்கு மிஞ்சிச் சாப்பிடுகிறேன். அதனால் எனக்கு அஜீரணம் ஏற்படுகிறது. ஒரு வைத்தியரிடம் போகிறேன். அவர் எனக்கு மருந்து கொடுக்கிறார். நான் குணமடைகிறேன். மீண்டும் நான் அளவுக்கு மிஞ்சிச்சாப்பிடுகிறேன்; மீண்டும் நான் அவர் மாத்திரையைச் சாப்பிடுகிறேன். முதலில் நான் இந்த மாத்திரைகளை உட்கொள்ளாவிடின், எனக்குத் தகுதியான தண்டனையை நான் அநுபவித்திருப்பேன். அதனால் மீண்டும் நான் அளவுக்கு மிஞ்சிச் சாப்பிட்டிருக்கமாட்டேன். வைத்தியர் தலையிட்டு, நான் மிதமிஞ்சி யநுபவிப்பதில் எனக்குத் துணை புரிந்தார். அதனால் எனது உடம்பு சுகமடைந்தது உண்மையே. ஆனால் எனது மனம் பலவீனமெய்திவிட்டது. எனவே, மருந்தைத் தொடர்ந்து உட்கொண்டு வந்தால் மனதை அடக்கியாள்வது முடியாமற் போய்விடும்.

நான் தீநெறியில் உழல்கிறேன்; அதனால் நோயை அடைகிறேன். ஒரு வைத்தியர் என்னை குணப்படுத்தி விடுகிறார். இதன்பயன் யாதெனில், நான் மீண்டும் தீமையைச்செய்கிறேன். வைத்தியர் தலையிடாவிடின், இயற்கையானது தனது வேலையைச் செய்திருக்கும்; என் மனத்தின்மீது நான் தலைமை பெற்று, தீமையினின்று நீங்கிச் சுகமடைந்திருப்பேன்.

வைத்திய சாலைகள் பாவத்தைப் பரப்புவதற்குரிய நிலையங்களாகும். மனிதர்கள் தங்கள் உடல்களைக் கவனிப்பதில்லை. அதனால் துன்மார்க்கம் பெருகுகிறது. ஐரோப்பிய வைத்தியர்கள் அனைவரிலும் கேவலமா யிருக்கிறார்கள். மனித சரீரத்தைக் கவனிப்பதாகக் கருதி, அவர்கள் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான பிராணிகளைக் கொலைபுரிகிறார்கள். அவர்கள் வைத்தியத்திற்காக உயிர்களைக் கொன்று ஆராய்ச்சி செய்கிறார்கள், எந்தச் சமயமும் இதற்கு அநுமதி கொடுக்கவில்லை. நமது சரீரங்களின் பொருட்டு அத்தனை உயிர்களைக் கொலைபுரிவது அவசியமில்லை யென்று சகல சமயங்களும் சொல்லுகின்றன.

இந்த வைத்தியர்கள் நமது சமய உணர்ச்சியைக் கெடுக்கிறார்கள். அவர்கள் செய்யும் மருந்துகள் பலவற்றில் மிருகக் கொழுப்பு அல்லது லாகிரியுள்ள சாராயங்கள் சேர்ந்திருக்கின்றன. இவை யிரண்டையும் ஹிந்துக்களும் மகம்மதியர்களும் விலக்கியிருக்கிறார்கள். நாம் நாகரிக மடைந்திருப்பதாக நடித்துச் சமயச் சார்பான விலக்குகளை மூடபக்தி யென்று கூறி, நாம் விரும்புவதிலெல்லாம் வேண்டுமென்றே உழலலாம். ஆயினும் வைத்தியர்கள் நம்மை இவ்வாறு உழலுமாறு தூண்டுகிறார்களென்பது உண்மையாயிருக்கிறது. அதன்பயனாக நாம் தன்னடக்கத்தை இழந்து, ஆண்மையற்றவர்களாய்விட்டோம். இத்தகைய நிலைமையில் நாம் நாட்டுக்கு ஊழியம் புரியத் தகுதியற்றவர்களாயிருக்கிறோம். ஐரோப்பிய வைத்தியத்தைப் படிப்பது நமது அடிமைத் தனத்தைப் பலப்படுத்துவதாகும்.

நாம் வைத்தியத் தொழிலை ஏன் மேற்கொள்கிறோமென்பதைச் சிறிது ஆராய்வோம். நிச்சயமாகவே உலகத்துக்கு உபகாரம் செய்வதற்காக அதனை மேற்கொள்ளவில்லை, மதிப்புஞ் செல்வமும் பெறும்பொருட்டு நாம் வைத்தியர்களாகிறோம். இந்தத் தொழிலில் உண்மையான லோகோபகாரம் இல்லையென்றும், அது மனிதர்களுக்குக் கேடானதென்றும் நான் விளக்க முயன்றிருக்கிறேன். வைத்தியர்கள் தாங்கள் படித்திருப்பதைப் பிரமாத

மாய்க்காட்டி, அளவுகடந்த கூலி வாங்குகிறார்கள். உண்மையில் சில பைசாக்கள் பெறுமான மருந்துகளுக்கு அவர்கள் ரூபாய்க் கணக்கில் விலை வாங்குகிறார்கள். ஜனங்கள் தங்கள் அறியாமையாலும் நோய்களை ஒழிக்கலாமென்ற நம்பிக்கையாலும் மோசம் போகிறார்கள். இவ்வாறானால், உலோகோபகாரிகள்போல நடிக்கும் இந்த வைத்தியர்களைவிட நமக்குத் தெரிந்த நாட்டு வைத்தியர்கள் சிறந்தவர்க ளல்லவா ?

அதிகாரம்—௧௩

உண்மையான நாகரிகம் எது?

வா:—இருப்புப் பாதைகளையும், வக்கீல்களையும், வைத்தியர்களையும் தாங்கள் குறை கூறுகிறீர்கள். யந்திரங்க ளனைத்தையும் தள்ளி விடுவீர்களென்று நான் அறிகிறேன். அவ்வாறானால் நாகரிகம் என்பது யாது?

பத்:—இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வது கடின மல்ல. இந்தியா உற்பத்தி செய்திருக்கிற நாகரிகம் உலகத்தில் எதற்கும் குறைந்த தல்ல என்பது எனது கருத்து. எதுவும் நமது முன்னோர்கள் விதைத்த விதைக்கு நிகராகாது. ரோமாபுரி அழிந்து போய் விட்டது. கிரீஸ் அதே கதியை அடைந்தது. பரோவாக்களின் வன்மை உடைந்து போய்விட்டது. ஜப்பான் மேனாடாய் விட்டது. சீனத்தைப்பற்றி ஒன்றும் சொல்ல முடியாது. ஆனால் இந்தியா, இன்னும் எவ்வாறோ அஸ்திவாரத்தில் உறுதியாயிருக்கிறது. ஐரோப்பாவிலுள்ள ஜனங்கள், தங்கள் பண்டைப் பெருமையை இழந்து விட்ட கிரீஸ், ரோம் நாட்டவர்களின் நூல்களினின்று தங்கள் பாடங்களைக் கற்றுக் கொள்கிறார்கள். அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள முயல்வதில் கிரேக்கர்கள், ரோமர்களின் தவறுகளைத் தாங்கள் விலக்கி விடலா மென்று ஐரோப்பியர்கள் நினைத்துக் கொள்கிறார்கள். அவர்கள் பரிதாப நிலைமை இவ்வாறிருக்கிறது. இவையனைத்திற்கும் இடையில், பாரத தேவி அசையாமல் நிற்கின்றாள், இதுதான் அவள் பெருமை. எந்த மாறுதல்களையும் அவளை ஏற்றுக்கொள்ளச் செய்ய முடியாதென்றும், இந்திய ஜனங்கள் அநாகரிக முள்ளவர்களென்றும், அஞ்ஞானிக ளென்றும், மந்த ஞானம் உள்ளவர்களென்றும் இந்தியாவின் மீது ஒரு குறை கூறுகிறார்கள். அது உண்மையில்

நமது குணத்தின்மீது கூறப்படும் குற்றமே. அநுபவத்தில் நாம் ஆராய்ந்து உண்மையென்று கண்டதை நாம் மாற்றத் துணிவதில்லை. அநேகர் இந்தியாவிற்கு வேறு யோசனை கூறு கின்றனர். ஆனால் அவள் உறுதியாய் நிற்கிறாள் இது அவளது சிறப்பு. இது நமது நம்பிக்கைக்குப் பெரிய ஆதாரமாகும்.

நாகரிக மென்பது மனிதனுக்குக் கடமைவழியைக் காட்டு கின்ற ஒழுக்க முறையாகும். கடமையை இயற்றல் என்பதும் தர்மத்தை அநுஷ்டித்தல் என்பதும் ஒரே பொருளைக் கொண் டவை. தர்மத்தை அநுஷ்டித்தால் நமது மனத்தையும் மற்ற விகாரங்களையும் அடக்கி அவற்றின்மீது ஆட்சி பெறலாம். இவ்வாறு செய்தால் நாம் நம்மை அறிகிறோம். நாகரி கம் என்பதற்குக் கூர்ஜர பாஷையிலுள்ள மொழிக்கு "நல் லொழுக்கம்" என்று பொருள்.

இந்த இலக்கணம் சரியானதாயின், அநேக ஆசிரியர்கள் காட்டியுள்ளவாறு, இந்தியா எவரிடமிருந்தேனும் அறிந்து கொள்ளவேண்டியது ஒன்றும் இல்லை. இது இருக்கவேண் டிய முறையில் இருக்கிறது. மனம் ஒரு அமைதியற்ற பறவைபோல் விரும்புவதை நாம் அறிகிறோம். எவ்வளவுக் கெவ் வளவு அதற்குக் கிடைக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அதன் ஆசை விருத்திப்படுகிறது; பின்னும் திருப்தியற்ற நிலையில் இருக்கிறது. நாம் நமது மனோவிகாரங்களுக்கு எவ்வளவு மிகுதியாய் இடங்கொடுக்கிறோமோ அவ்வளவு மிகுதி யாய் அவை கட்டுக்கடங்காதனவாய் விடுகின்றன. ஆதலால் நமது முன்னோர்கள் நமது இந்திரியங்களுக்கு ஓர் அளவு ஏற்படுத்தினார்கள். சுகம் என்பது பெரும்பாலும் ஒரு மனோ நிலைமை என்று அவர்கள் அறிந்தார்கள். ஒரு மனிதன் செல் வந்தனாயிருப்பதாலேயே சந்தோஷமுள்ளவனாயிருப்பதும், ஏழையாயிருப்பதால் துக்கமுள்ளவனாயிருப்பதும் இல்லை. செல்வர்கள் பெரும்பாலும் துக்கமுள்ளவர்களாயிருப்பதைக் காண்கிறோம்; ஏழைகள் சந்தோஷமுள்ளவர்களாயிருப்

பதைக் காண்கிறோம். கோடிக்கணக்கானவர்கள் எப்பொழுதும் ஏழைகளாகவே யிருப்பார்கள். இவற்றை யெல்லாம் நோக்கி நமது முன்னோர்கள் நமக்குச் சுகங்களும் இன்பங்களும் கூடாவென்று விலக்கினார்கள். ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன் வழங்கிய கலப்பைகளையே நாம் இன்னும் உபயோகித்து வருகிறோம். முற்காலத்தில் நாம் குடியிருந்ததைப் போன்ற அதே மாதிரியான குடிசைகளில் தான் இன்னும் வாழ்ந்து வருகிறோம். நமது நாட்டுக் கல்வியும் முன்போலவே தான் இருந்துவருகிறது. உயிரை வதைக்கும் போட்டி முறை நம்மிடம் இருந்ததில்லை. ஒவ்வொருவரும் தங்கள் சொந்தத் தொழிலையோ, வியாபாரத்தையோ செய்து கொண்டு, ஓர் ஒழுங்கான கூலியைப் பெற்று வந்தனர். நமக்கு யந்திரங்களைக் கண்டுபிடிக்கத் தெரியா தென்பதல்ல; ஆனால் இத்தகைய காரியங்களில் நாம் மனத்தைச் செலுத்தினால், நாம் அடிமைகளாகி, நமது தரும சிந்தனையை இழந்துவிடுவோமென்று நமது முன்னோர்கள் அறிந்திருந்தார்கள். எனவே, அவர்கள் தீர்க்காலோசனை செய்து நாம் நமது கைகளாலும் கால்களாலும் செய்யக் கூடிய காரியங்களையே செய்ய வேண்டுமென்று முடிவு செய்தார்கள். மேலும், அவர்கள் பெரிய பட்டணங்கள் மயக்கானவை யென்றும், பயனற்ற தடைகளென்றும், ஜனங்கள் அவற்றில் சுகமாய் வாழமாட்டார்களென்றும், திருட்டுக்கூட்டத்தாரும் கொள்ளைக்காரர்களும் அவற்றில் பல்குவார்களென்றும், விபசாரமும் மற்றத் தீமைகளும் பெருகுமென்றும், ஏழைகளைச் செல்வர்கள் வருத்துவார்களென்றும் அவர்கள் அறிந்தார்கள். எனவே அவர்கள் சிறிய கிராமங்களிலே திருப்தியடைந்து விட்டார்கள். அரசர்களும் அவர்கள் வாளாண்மையும், தருமமாகிய வாளுக்குத் தாழ்ந்தவை யென்று அறிந்து, அவர்கள் மண்ணுலகத்து மன்னர்கள் ரிஷிகளுக்கும் முனிவர்களுக்கும் தாழ்ந்தவர்களென்று முடிவு செய்தார்கள். இத்தகைய அரசியலைக் கொண்டுள்ள ஒரு நாடு பிறரிடமிருந்து படித்துக் கொள்வதை விடப் பிறருக்குக் கற்றுக் கொடுப்பதற்கு மிகவும்

தகுதியானது. இந்த நாட்டில் நீதிஸ்தலங்கள் இருந்தன. நியாயவாதிகளும் வக்கீல்களும் இருந்தார்கள். ஆனால் அவர்களெல்லாரும் ஓர் அளவுக்கு உட்பட்டிருந்தார்கள். இந்தத்தொழில்களெல்லாம் விசேஷமாய் உயர்ந்தவையல்லவென்பது ஒவ்வொருவருக்கும் தெரியும். மேலும் இந்த வக்கீல்களும் வைத்தியர்களும் ஜனங்களைக் கொள்ளையிடவில்லை. அவர்கள் ஜனங்களைச் சார்ந்தவர்களென்று கருதப்பட்டார்கள்; அவர்களை ஜனங்களுக்கு எஜமானர்களென்று கருதவில்லை. நீதிபரிபாலனம் கூடியவரை நன்றாய் நடந்துவந்தது. நீதிஸ்தலங்களுக்குச் செல்லாதிருப்பதே பொதுவிதியாயிருந்தது. ஜனங்களை அவற்றில் மயக்கித் தள்ளுவதற்குக் குமாஸ்தாக்கள் அக்காலத்தில் இல்லை. இந்தத் தீமையும் கூட ராஜதானிகளிலும் அவற்றைச் சுற்றியுமே இருந்தது. பொது ஜனங்கள் சுயாதீனமாய் வாழ்ந்து, தங்கள் விவசாயத் தொழிலைச் செய்து வந்தார்கள். உண்மையான சுய ஆட்சியை அவர்கள் அநுபவித்து வந்தார்கள்.

இப்பொழுதும் கூட, இந்தப் பாழான நவீன நாகரிகம் செல்லாத இடங்களில் இந்தியா முன்போலவே இருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள ஜனங்கள் உமது புதிய நோக்கங்களைக் கேட்டால்—மிகவும் சரியாகவே—சிரிப்பார்கள். ஆங்கிலேயர்கள் அவர்களை ஆளவில்லை; நீரும் அவர்களை ஒரு நாளும் ஆள முடியாது. நாம் யாருக்காகப் பேசுகிறோமோ அவர்களை நமக்குத் தெரியாது. அவர்களும் நம்மை அறியார்கள். நீரும், தாய்நாட்டை நேசிக்கிற உம் போன்றவர்களும், இருப்புப் பாதைகளால் இன்னும் அசுத்தமடையா திருக்கின்ற நாட்டுப்புறங்களுக்குச் சென்று அங்கே ஆறுமாதகாலம் வாழ்ந்திருக்க வேண்டும். அப்பொழுது நீர் தேசபக்தராய், சுயராஜ்யத்தைப் பற்றிப் பேசலாம்.

எதனை நான் உண்மையான நாகரிகமென்று கருதுகிறேனென்பதை இப்பொழுது நீர் அறிந்துகொண்டீர். நான் மேலே

விவரித்த நிலைமைகளை மாற்ற விரும்புவோர் தேசத்துரோகிகள், பாவிகள் ஆவார்.

வா:—இந்தியா தாங்கள் விவரித்துள்ளபடியே இருந்தால் சரிதான். ஆனால் வேறு மாதிரியாகவும் இருக்கிறதே. அங்கே நூற்றுக்கணக்கான குழந்தை விதவைகள் இருக்கிறார்கள். இரண்டு வயதுக் குழந்தைகள் கலியாணம் செய்யப் பெறுகிறார்கள். பன்னிரண்டு வயதுச் சிறுமிகள் தாய்களாயும் மனைவிகளாயும் வாழ்கிறார்கள். ஸ்திரீகள் அநேக புருஷர்களை மணந்துகொள்கிறார்கள். நியோக வழக்கம் நடந்துவருகிறது; மதம் என்ற பெயரால் பெண்கள் வேசைகளாயிருக்கிறார்கள். மதம் என்ற பெயரால் வெள்ளாடுகளும் செம்மறியாடுகளும் கொலைசெய்யப்படுகின்றன. இவற்றையும் தாங்கள் விவரித்த நாகரிகத்தின் சின்னங்களென்று கருதுகிறீர்களா?

பத்:—நீர் கருதியது தவறு. நீர் காட்டிய குறைகள் குறைகளே. பழைய நாகரிகமென்று அவற்றை எவரும் தவறாகக் கருதுவதில்லை. அவை, நாகரீகத்தையும் மீறி, இருக்கின்றன. அவற்றை நீக்குமாறு முயற்சிகள் எப்பொழுதும் செய்யப்பட்டிருக்கின்றன; இனியும் செய்யப்படும். நம்மிடைத் தோன்றியுள்ள புதிய உணர்ச்சியை நாம் இந்தத் தீமைகளை நம்மினின்று ஒழிக்குமாறு நாம் பயன்படுத்தலாம். ஆனால் நவீன நாகரிகத்தின் சின்னங்களென்று நான் உமக்கு விவரித்தவற்றை அதன் சீடர்கள் அங்கீகரித்திருக்கிறார்கள். உலகத்தின் எந்தப் பகுதியிலும், எந்த நாகரிகத்திலும், மனிதர்கள் அனைவரும் பூரணத்துவம் அடைந்திருப்பதில்லை. இந்திய நாகரிகத்தின் இயற்கை தர்மத்தை உயர்த்துவது; மேல்நாட்டு நாகரிகத்தின் இயற்கை அதர்மத்தை வளர்ப்பதாகும். பிந்தியதில் கடவுள் இல்லை. முந்தியது (இந்திய நாகரிகம்) கடவுள் மீது நம்பிக்கையை மூலமாகக் கொண்டது. இவ்வாறு அறிந்து, இவ்வாறு நம்பி, ஒரு குழந்தையானது தனது தாயின் மார்பைப் பற்றிக்கொள்வது போல, பழைய இந்தியநாகரிகத்தைப் பற்றிக்கொள்வது இந்தியாமீது அன்புசெய்யும் ஒவ்வொருவருக்கும் கடமையாகும்.

அதிகாரம்—௧௪

இந்தியா விடுதலை பெறுவது எப்படி?

வா:—நாகரிகத்தைப்பற்றித் தங்கள் கொள்கைகளை நான் பாராட்டுகிறேன். நான் அவற்றைப்பற்றிச் சிந்திக்கவேண்டும். நான் அனைத்தையும் உடனே அங்கீகரித்துவிட முடியாது. அவ்வாறானால் இத்தகைய நோக்கங்களை வைத்துக்கொண்டு, இந்தியா விடுதலை பெறுவதற்குத் தாங்கள் என்னயோசனை கூறுகிறீர்கள்?

பத்:—எனது கொள்கைகளை உடனே ஒத்துக்கொள்ள வேண்டுமென்று நான் எதிர்பார்க்கவில்லை. உண்மை யொத்த வாசகர்களிடம் அவற்றைச் சொல்வது எனது கடமை. பாக்கி வேலை காலப் போக்கில் நடைபெறும். இந்தியாவின் விடுதலைக்குரிய நிலைமைகளை நாம் முன்னரே ஆராய்ச்சி செய்திருக்கிறோம். ஆனால் நாம் நேர்மாறாக அவ்வாறு செய்திருக்கிறோம்; இப்பொழுது நேராகவே ஆராய்ச்சி செய்வோம். நோயின் மூலத்தை நீக்கினால் நோயே நீங்குமென்பது உலகம் அறிந்த நீதியாகும். அதுபோலவே, இந்தியாவின் அடிமைத் தனத்திற்குரிய காரணத்தை நீக்கினால், இந்தியா விடுதலை பெற்றுவிடும்.

வா:—இந்திய நாகரிகம், தாங்கள் சொல்லுமாறு, அனைத்திலும் சிறந்ததென்றால், இந்தியாவின் அடிமைத்தனத்திற்கு யாது காரணம் சொல்லுகிறீர்கள்?

பத்:—இந்த நாகரிகம் சந்தேகமின்றி அனைத்திலும் சிறந்தது. ஆனால் எல்லா நாகரிகங்களுக்கும் சோதனை உண்டென்பதைக் கவனிக்கவேண்டும். நிலையான நாகரிகம் அதனைக் கடந்து உயிர் வாழ்கிறது. இந்தியாவின் மைந்தர்கள் குறை

யுள்ளவர்களா யிருந்தமையால் அதன் நாகரிகம் அபாயத்தில் இருக்கிறது. ஆனால் அதிர்ச்சியைத் தாங்குவதில் அதற்குள்ள திறமையைக்கொண்டு அதன் பலத்தை அறியவேண்டும். மேலும் இந்தியா முழுமையும் பாதிக்கப்படவில்லை. மேல் நாட்டு நாகரிகத்தால் அடிபட்டவர்கள் மட்டுமே அடிமைகளா யிருக்கிறார்கள். நமது அற்பமான முழக்கோலினால் நாம் உலகத்தை அளவு பார்க்கிறோம். நாம் அடிமைகளா யிருக்கும் பொழுது உலகம் முழுமையும் அடிமையா யிருக்கிறதென்று நினைத்துக்கொள்கிறோம். நாம் இழிவான நிலையில் இருப்பதால் இந்தியா முழுமையும் அத்தகைய நிலையில் இருப்பதாக நாம் கருதுகிறோம். உண்மையில் அது அவ்வாறில்லை; ஆனால் நமது அடிமைத்தனத்தை இந்தியா முழுமைக்கும் கூறினாலும் பொருந்தும். மேற்கண்ட உண்மையை நாம் கருத்தில் வைத்துக்கொண்டால், நாம் விடுதலை பெற்றுவிட்டால், இந்தியா விடுதலைபெற்றுவிடுமென்பதை அறிந்துகொள்ளலாம். இந்தக் கருத்தில் சுயராஜ்யத்திற்கு இலக்கணம் நமக்குக் கிடைக்கிறது. நம்மை நாம் ஆள அறியும் பொழுது, அது சுயராஜ்யமாகும். எனவே, அது நமது உள்ளங்கையில் இருக்கிறது.' இந்தச் சுயராஜ்யத்தைக் கனவென்று கருதவேண்டாம். அதனால், சும்மா இருக்கிறதென்ற கருத்தில்லை. உமக்கும் எனக்கும் நான் விளக்கிக் காட்ட விரும்பும் சுயராஜ்யத்தை நாம் ஒரு முறை உணர்ந்துகொண்ட பின், நாம் நமது வாழ்நாள் இறுதிவரை அவ்வாறே செய்யுமாறு மற்றவரைத் தூண்டுவோம். ஆனால் அத்தகைய சுயராஜ்யத்தை ஒவ்வொருவரும் தமக்குள் தமது சொந்த அனுபவத்தில் அறியவேண்டும். நீரில் மூழ்கிப் போகும் ஒருவன் மற்றொருவனை என்றும் காப்பாற்ற முடியாது. நாமே அடிமைகளாயிருக்க, மற்றவரை விடுவிக்க நினைப்பது கடிப்பேயாகும். ஆங்கிலேயரைத் துரத்துவதை நமது இலக்காகக் கொள்ளவேண்டியது அவசியமில்லையென்பதைத் தாங்கள் இப்பொழுது அறிந்திருப்பீர்கள். ஆங்கிலேயர்கள் இந்தியர்களாய் விட்டால், நாம் அவர்களுக்கு இடம் கொடுக்கலாம். அவர்கள்

தங்கள் நாகரிகத்துடனேயே, இந்தியாவில் இருக்க விரும்பினால், அவர்களுக்கு இடம் கிடையாது. இந்த நிலைமையை ஏற்படுத்துவது நம்மைப்பொறுத்த வேலையாகும்.

வா:—ஆங்கிலேயர்கள் எக்காலத்திலேனும், இந்தியர்களாவது முடியாத காரியம்.

பத்:—அவ்வாறு சொல்வது ஆங்கிலேயரிடம் மனித சுபாவம் இல்லையென்று சொல்வது போலாகும். அவர்கள் அவ்வாறு ஆவார்களா, ஆகமாட்டார்களா என்பது உண்மையில் நமது காரியமல்ல. நாம் நமது வீட்டை ஒழுங்காய் வைத்துக்கொண்டால் அதில் வாழத் தகுதியுள்ளவர்களே இருப்பார்கள்; மற்றவர்கள் தாங்களாகவே, நம்மைவிட்டுப் போய்விடுவார்கள். இத்தகைய சம்பவங்கள் நம் அனேகர் அநுபவத்திலும் ஏற்படுகின்றன.

வா:—ஆனால், அது சரித்திரத்தில் ஏற்படவில்லை.

பத்:—சரித்திரத்தில் ஏற்படாதது, இனி ஏற்படவே செய்யாதென்று கருதுவது மனிதனது மாட்சிமையில் நம்பிக்கையைக் குறைப்பதாகும். எவ்வாறிருப்பினும், நமது அறிவுக்குச் சரியென்று தோன்றுவதைச் செய்வது நமது கடமையாகும். எல்லா தேசங்களும் ஒரே நிலைமையுடன் இல்லை. இந்தியாவின் நிலைமை இணையற்றது. அதன் வன்மை அளப்பரியது. எனவே, நாம் மற்ற நாடுகளின் சரித்திரத்தைக் கவனிக்க வேண்டிய அவசியமில்லை. மற்ற நாகரிகங்களெல்லாம், அழிந்துபோக, இந்திய நாகரிகம் அநேக அதிர்ச்சிகளைத் தாங்கி உயிருடன் விளங்குவதை நான் முன்னமே குறிப்பிட்டிருக்கிறேன்.

வா:—நான் இதை ஒத்துக்கொள்ள முடியாது. ஆங்கிலேயர்களை நாம் ஆயுதபலத்தால் துரத்த வேண்டுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அவர்கள் நாட்டில் உள்ளவரை நாம் ஓய்வுடன் இருக்க முடியாது. அடிமைகள் கனவிலும் இன்பம் காணார் என்று நமது புலவர் ஒருவர் பாடியிருக்கிறார். ஆங்கிலேயர்கள் இருப்பதால் நாம் நாளுக்குநாள் பலவீனமாய்க்கொண்டு

வருகிறோம். நமது பெருமை போய்விட்டது. நமது ஜனங்கள்
பயந்த மனிதர்கள் போல விழிக்கிறார்கள். ஆங்கிலேயர்கள் இந்த
நாட்டில் ஒரு நோய்போல இருக்கிறார்கள்; அதனை எந்த வகை
யிலும் நாம் ஒழிக்கவேண்டும்.

பத்:—உமது ஆவேசத்தில், நாம் சிந்தித்து வந்தவற்றை
யெல்லாம் நீர் மறந்துவிட்டீர். நாம் ஆங்கிலேயர்களை வரவழைத்
தோம்; நாம் அவர்களை வைத்துக்கொண்டிருக்கிறோம். நாம் அவர்
கள் நாகரிகத்தை மேற்கொள்வதால்தான் அவர்கள் இந்தியாவில்
இருக்கவே முடிகிறதென்பதை நீர் ஏன் மறந்துவிடுகிறீர். அவர்
கள்மீது உமக்குள்ள பகைமையை அவர்கள் நாகரிகத்தின்மீது
செலுத்தவேண்டும். ஆனால் நாம் போர் செய்து ஆங்கிலேயர்
களைத் துரத்தவேண்டுமென்று வைத்துக்கொள்வோம். அதனை
எவ்வாறு செய்வது?

வா:—இத்தலி செய்ததுபோலவே, செய்யவேண்டும். மாஜி
னிக்கும் கரிபால்டிக்கும் முடிந்தகாரியம் நமக்கும் முடியத்தக்க
தே. அவர்கள் மிகவும் பெரிய மனிதர்களென்பதை நீங்கள்
மறுக்கமுடியாது.

அதிகாரம்—௧௫

இத்தலியும் இந்தியாவும்

பத்:—நீர் இத்தலியை உதாரணமாகக் கூறியது நன்றே. மாஜினி பெரிய மகான்; கரிபால்டி ஒரு மகா வீரன். இருவரும் போற்றத் தக்கவர்கள். அவர்கள் வாழ்க்கையிலிருந்து நாம் மிகுதி யாகக் கற்றுக் கொள்ளலாம். ஆனால் இத்தலியின் நிலைமை இந்தியாவின் நிலைமையினின்று மாறுபட்டது. முதலில் மாஜினிக்கும் கரிபால்டிக்கு முள்ள வித்தியாசத்தைக் கவனிக்க வேண்டும். இத்தலி சம்பந்தமாக மாஜினியின் நோக்கம் (முன்னும்) நிறைவேற வில்லை; இன்னும் நிறைவேற வில்லை. மாஜினி தாம் எழுதிய "மனிதர் கடமை" யென்ற நூலில் ஒவ்வொருவனும் தன்னை ஆண்டு கொள்ளக் கற்றுக் கொள்ள வேண்டுமென்று கூறி யிருக்கிறார். இவ்வாறு இத்தலியில் ஏற்பட வில்லை. மாஜினியின் இக்கொள்கையை கரிபால்டி கொண்டிருக்க வில்லை. கரிபால்டி ஆயுதம் கொடுத்தார்; உடனே ஒவ்வொரு இத்தலியனும் ஆயுதபாணியானான். இத்தலியும் ஆஸ்ட்ரியாவும் ஒரே நாகரிகத்தைக் கொண்டிருந்தன. இந்த விஷயத்தில் அவர்கள் பங்காளிகள். அது ஏட்டிக்குப் போட்டிசெய்வதா யிருந்தது. கரிபால்டி இத்தலி ஆஸ்ட்ரியாவின் கொடுங்கோலினின்று விடுதலை யடைய வேண்டுமென்று மட்டும் விரும்பினார். மந்திரி கவூரின் தந்திரங்கள் இத்தலிய சரித்திரத்தில் அந்தப் பகுதியில் அபகீர்த்தி உண்டுபண்ணி யிருக்கின்றன. அதன் பயன் என்ன? இத்தலியர் இத்தலியை ஆட்சிபுரியும் காரணத்தால் இத்தலிய ஜாதியார் சுகமாயிருக்கிறார்களென்று நீர் கருதினால் அது தவறு. இத்தலி விடுதலை பெறவில்லை யென்று மாஜினி முடிவாக விளக்கியிருக்கிறார். அந்தச் சொல்லுக்கு விக்டர் எமானுவேல் ஒரு பொருள் செய்தார்; மாஜினி வேறு

பொருள் செய்தார். எமானுவேல், கவூர், காரிபால்டி இவர்கள் நோக்கப்படி, இத்தலியென்பது இத்தலி அரசனும் அவன் சந்ததார்களுமென்று பொருள்பட்டது. மாஸினியின் கொள்கைப்படி, அது, இத்தலிய ஜனங்கள் முழுமையும், அதாவது அதன் விவசாயிகள் என்று பொருள்பட்டது; எமானுவேல் அதன் ஊழியரே. மாஸினியின் இத்தலி இன்னும் அடிமை நிலையில் இருக்கிறது. தேசியப்போர் நடந்ததென்று சொல்லப்படும் பொழுது இரண்டு போட்டியான அரசர்களுக்குள் சதுரங்க விளையாட்டாகவே யிருந்தது; இத்தலியஜனங்கள் பணயமாயிருந்தார்கள். அந்த நாட்டில் உள்ள தொழிலாளிகள் இன்னும் துன்பமடைந்துகொண்டிருக்கிறார்கள். அதனால் அவர்கள் கொலைபுரிகிறார்கள். கலகம் செய்கிறார்கள்; அவர்கள் கலகம்செய்ய எப்பொழுதும் சித்தமா யிருக்கிறார்கள். ஆஸ்திரியச் சேனைகள் சென்றபின்னர் இத்தலி என்ன சரியான பயனைப் பெற்றது? பயன் பெயர்மட்டில் கிடைத்ததே யாகும். எந்தச் சீர்திருத்தங்களைக் கருதிப் போர் ஏற்பட்டதென்று கூறப்பட்டதோ அவை இன்னும் கிடைக்கவில்லை. பொதுவாக ஜனங்களின் நிலைமை இன்னும் பழையபடியே இருக்கிறது. இந்தியாவில் இத்தகைய நிலைமையை ஏற்படுத்த நீர் விரும்பமாட்டீர் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான ஜனங்கள் சுகமாயிருக்கவேண்டுமென்று தான் நீர் விரும்புகிறீர். அரசாங்க அதிகாரம் உமது கையில் வரவேண்டுமென்பது உமது விருப்பம் இல்லையே. அவ்வாறானால் நாம் ஒரு விஷயத்தை மட்டுமே கவனிக்கவேண்டும். இந்தக் கோடிக்கணக்கான ஜனங்களுக்கு எவ்வாறு சுய ஆட்சி கிடைக்கும்? பல இந்திய மன்னர்களின் ஆட்சியிலுள்ள ஜனங்கள் வருந்துகிறார்கள் என்பதை நீர் ஒப்புக்கொள்வீர். அம்மன்னர்கள் அவர்களைக் கருணையின்றி வருத்துகிறார்கள். அவர்கள் கொடுமை ஆங்கிலேயர் கொடுமையைவிடக் கொடிது; அத்தகைய கொடுமையை நீர் இந்தியாவில் விரும்புவீராயின் நாம் இருவரும் ஒரு முடிவுக்கு வரமுடியாது. ஆங்கிலேயர்கள் போனவுடன், இந்

திய மன்னர்களின் கொடுங்கோன்மையின்கீழ் ஜனங்கள் வருந்துமாறு விட வேண்டுமென்று எனது தேசாபிமானம் எனக்குப் போதிக்கவில்லை. என்னிடம் வன்மை இருந்தால், ஆங்கிலேயர்களின் கொடுங்கோன்மையைப் போலவே, இந்திய மன்னர்களின் கொடுங்கோன்மையையும் நான் எதிர்ப்பேன். தேசாபிமான மென்றால் ஜனங்கள் முழுமையின் க்ஷேம மென்று நான் கருதுகிறேன். அது எனக்கு ஆங்கிலேயரிடம் கிடைப்பின் நான் அவர்களுக்கு வணக்கம் செய்வேன். எந்த ஆங்கிலேயராவது, கொடுங்கோன்மையை எதிர்த்து, நாட்டிற்கு ஊழியம் செய்து, இந்தியாவிற்கு விடுதலை கிடைக்குமாறு தமது வாழ்நாளை அர்ப்பணம் செய்தால் நான் அந்த ஆங்கிலேயரை ஓர் இந்தியராகக் கருதி வரவேற்பேன்.

மேலும், இந்தியாவுக்கு இத்தலியைப்போல, ஆயுதங்கள் இருந்தால்தான் போர் செய்தல் கூடும். இந்த விஷயத்தை நீர் சிந்திக்கவேயில்லை. ஆங்கிலேயர்கள் ஏராளமாக ஆயுதம் உடையவர்களா யிருக்கிறார்கள். அதற்காக நான் அஞ்சவில்லை. ஆனால் அவர்களுடன் ஆயுதபாணிகளாய்ப் போர்புரிய நாம் தகுதியாக வேண்டுமாயின், ஆயிரக்கணக்கான இந்தியர்கள் ஆயுத பாணிகளாக வேண்டுமென்பது தெளிவான விஷயம். அது கூடுமானால் அதற்கு எத்தனை வருஷம் செல்லும். மேலும் இந்தியர்களைப் பெரிய அளவில் ஆயுதபாணிகளாக்குவது அவர்களை ஐரோப்பிய ராக்குவதாகும். அவ்வாறானால் அதன் நிலைமை ஐரோப்பாவின் நிலைமையைப்போல அவ்வளவு கேவலமாய் விடும். இதன் பொருள், சுருக்கத்தில், இந்தியா ஐரோப்பிய நாகரிகத்தை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்பதாம். நாம் விரும்புவது அதுவே யென்றால், அந்நாகரிகத்தில் எவ்வளவோ இருந்து பயிற்சியுள்ளவர்களை நம்மிடம்வைத்துக்கொள்வதே சிறந்தகாரியமாகும். அவ்வாறாயின் நாம் உரிமைகளுக்காகப்போராடி, கூடுமானவற்றைப் பெற்று, இவ்வாறு நமது காலத்தைக் கழிப்போம். ஆனால் உண்மையென்ன வென்றால் இந்தியர்கள் ஆயுதத்தைக் கைக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் கைக்கொள்ளாம லிருப்பதும் நன்றே.

வா:—விஷயங்களை நீங்களே பிழையாக மதித்துக் கொள்ளுகிறீர்கள். அனைவரும் ஆயுதபாணிகளாதல் அவசியமில்லை. முதலில் நாம் சில ஆங்கிலேயர்களைக் கொலைபுரிந்து திகில் உண்டு பண்ணுவோம். பின்னர் ஆயுதபாணிகளாயுள்ள சிலர் பகிரங்கமாய்ப் போர்செய்யலாம். சுமாராக இரண்டு அல்லது மூன்று லட்சம் மனிதர்களை நாம் இழக்க நேரிடும். ஆனால் நமது பூமி நமக்கு மீண்டும் கிடைக்கும். நாம் 'கொரிலா' ச்சண்டை செய்து ஆங்கிலேயரைத் தோற்கடிப்போம்.

பத்:—அதாவது, புண்ணிய பூமியாகிய பாரத தேசத்தை நீர் அசுத்தமாக்க விரும்புகிறீர். கொலையினால், இந்தியாவை விடுதலை செய்ய நினைக்க, நீர் நடுக்கம் கொள்ளவில்லையா? நாம் செய்யவேண்டுவது யாதெனில், நம்மையே கொன்றுகொள்வதே. பிறரைக் கொலை புரியக் கருதுவது கோழைத்தனமாகும். கொலையினால் நீர் யாரை விடுவிக்கப் போகிறீர்? இந்தியாவிலுள்ள கோடிக் கணக்கான ஜனங்கள் அதனை விரும்பவில்லை. பாழான நவீன நாகரிகத்தில் வெறிகொண்டுள்ளவர்கள் இவ் விஷயங்களைச் சிந்திக்கிறார்கள். கொலையினால் அதிகாரம் பெறுவோர் நிச்சயமாக ஜனங்களைச் சுகப்படுத்த முடியாது. *திங்கரன் செயலாலும், இந்தியாவில் அதுபோன்ற செயல்களாலும், இந்தியா நன்மை பெற்றிருப்பதாக நம்புவோர் பெருந் தவறு செய்கிறார்கள். திங்கரன் ஒரு தேசாபிமானியே. ஆனால் அவன் பக்தி குருட்டுத் தனமானது. அவன் தனது உடலைத் தவறான வழியில் அர்ப்பணம் செய்தான். அதன் இறுதியான முடிவு கேடாய்த்தான் முடியும்.

வா:—ஆனால் ஆங்கிலேயர்கள் இந்தக் கொலைகளால் திகிலடைந்தார்க ளென்பதையும், மார்லியின் சீர்திருத்தம் பயத்தினால் தான் அளிக்கப்பட்டன வென்பதையும் தாங்கள் ஒப்புக் கொள்வீர்கள்.

---

* ஸர் கர்ஸன் வில்லியை லண்டனில் சுட்டுக்கொன்ற மதன்லால் திங்கரன்.

பத் :—ஆங்கிலேயர்கள் அச்சமும் தீரமும் ஒருங்கே யுள்ள ஜாதியாராவர். அவர்கள், வெடிமருந்து உபயோகித்தால் எளிதில் பயந்துவிடுகிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. மார்லி பிரபு சீர்திருத்தங்களை ஒருகால் அச்சம் காரணமாக அளித்திருக்கலாம். ஆனால் அச்சத்தில் கொடுத்ததை அந்த அச்சம் உள்ளவரை தான் வைத்திருக்க முடியும்.

அதிகாரம் ௧௬

மிருக பலம் - (ஸ்தூல சக்தி)

வா:— அச்சத்தால் கிடைத்தது அச்சம் உள்ளவரையே இருக்குமென்பது ஒரு புதிய கொள்கை. ஆனால் நிச்சயமாய்க் கொடுத்ததை வாங்க முடியாது.

பத்:— அவ்வாறல்ல. ௧௮௫௭ம் வருஷத்து அரச விளம்பரம் ஒரு கலகத்தின் முடிவில் அமைதியை உண்டு பண்ணுவதற்காகச் செய்யப்பட்டது. அமைதி ஏற்பட்டு ஜனங்களும் சாதுக்களானவுடன் அதன் முழுப்பயன் குறைக்கப்பட்டது. தண்டனைக்குப் பயந்து, நான் திருடுவதை நிறுத்தியிருந்தால், அந்த அச்சம் என்னைவிட்டு நீங்கிய வுடனே நான் அந்த வேலையைத் தொடங்குவேன். இது உலக அநுபவம். பலவந்தத்தால் மனிதர்களைக் காரியங்களைச் செய்விக்கலாமென்று நாம் மதித்துக்கொண்டிருக்கிறோம். அதனால் நாம் பலத்தை உபயோகிக்கிறோம்.

வா:— தாங்கள் உங்களுக்கே விரோதமாய்ப் பேசுகிறீர்கள். ஆங்கிலேயர்கள் தங்கள் சொந்தநாட்டில் பெற்றதை மிருகபலத்தைக்கொண்டு தான் அடைந்தார்களென்பதை நீங்கள் அறிவீர்கள். அவர்களுக்குக் கிடைத்தது பயனற்றதென்று நீங்கள் கூறுகிறீர்களென்பதை நான் அறிவேன். ஆனால் அந்த விஷயம் எனது நியாயத்தைப் பாதிக்கவில்லை. அவர்கள் பயனற்ற பொருள்களை விரும்பினார்கள். அவற்றை அடைந்தார்கள். அவர்கள் விருப்பம் நிறைவேறியதென்பது என்னுடைய கட்சி. அவர்கள் என்ன உபாயங்களை மேற்கொண்டிருந்தால் என்ன? நன்மையான நமது நோக்கத்தை எந்த உபாயத்தாலும், கொடிய செயல்களைச் செய்தேனும் நாம் ஏன் அடைதலாகாது? வீட்டிலுள்ள திரு

டனைத் துரத்துவதற்கு வழியை நான் யோசனையா செய்து கொண்டிருப்பேன்? எவ்வழியாலேனும் அவனை வெளியே துரத்துவது எனது கடமை. மனுச் செய்து கொள்வதால் நாம் ஒரு நன்மையையும் பெறவில்லை யென்பதையும் இனியும் ஒன்றையும் பெறப்போவதில்லை யென்பதையும் நீங்கள் ஒத்துக் கொள்வதாகத் தெரிகிறது. அவ்வாறானால் நாம் ஏன் மிருக பலத்தை உபயோகித்து, அதனைப் பெறலாகாது? நாம் அடைந்ததை வைத்துக் கொண்டிருக்க, அதே பலத்தை அவசியமான அளவு உபயோகித்து, நாம் அச்சத்தைக் காட்டிக்கொண்டிருப்போம். ஒரு குழந்தை தன் காலை நெருப்பில் வையாமல் அதனைத் தடுக்கும் பொருட்டு அச்சமுறுத்திக்கொண்டு வருவதை நீங்கள் குறை கூறமாட்டீர்களே. எவ்வாற்றேனும், நாம் விரும்பியதை நாம் அடையவேண்டும்.

பத்:—உமது நியாயம் மெச்சத் தக்கது. அது அநேகரை மயக்கியிருக்கிறது. இதற்குமுன் நானும் இவ்வித நியாயங்களைக் கூறியிருக்கிறேன். ஆனால் இப்பொழுது முன்னைவிட அதிகமாய்த் தெரியுமென்று நினைக்கிறேன்; உமது சந்தேகத்தை நிவர்த்திக்க முயல்கிறேன். ஆங்கிலேயர்கள் தங்கள் விருப்பங்களை மிருகபலத்தால் அடைந்தமையினால், மிருகபலத்தை உபயோகித்து நமது நோக்கத்தை அடையலா மென்ற நியாயத்தை முதலில் கவனிப்போம். அவர்கள் மிருகபலத்தை உபயோகித்தார்களென்பதும், நாமும் அவ்வாறு செய்தல் கூடுமென்பதும் முற்றிலும் உண்மைதான்; ஆனால் அவ்வித உபாயத்தை உபயோகிப்பதால், அவர்கள் அடைந்த பலனையே நாமும் அடைதல் கூடும். அதனை நாம் விரும்பவில்லையென்பதை நீர் ஒத்துக்கொள்வீர். காரணத்திற்கும் காரியத்திற்கும் சம்பந்த மில்லையென்று நீர் கருதுவது பெருந் தவறாகும். அந்தத் தவறினால், வைதிகர்களென்று கருதப்பட்ட மனிதர்கள் கூட பெருங்குற்றங்களைச் செய்திருக்கிறார்கள். உமது நியாயம் பயனற்ற செடியை நட்டுவிட்டு, ரோஜா மலர் கிடைக்குமென்று சொல்வது போல

இருக்கிறது. நான் கடலைக் கடக்க விரும்பினால் ஒரு கப்பலின் மூலமாய்த்தான் அவ்வாறு செய்ய முடியும். அதற்காக நான் ஒரு வண்டியை உபயோகித்தால் வண்டியும் நானும் விரைவில் பாதாளத்திற்குச் சென்றுவிடுவோம். "ஆண்டான் எப்படியோ அப்படியே அடிமையும்" என்ற முதுமொழி கவனிக்கத்தக்கது. அதன் பொருளை விகற்பப்படுத்தி மனிதர்கள் கெட்டுப்போய் விட்டார்கள். உபாயத்தை வித்துக்கு நிகராகக் கூறலாம். முடிவை ஒரு மரத்துக்கு நிகராகக் கூறலாம். வித்துக்கும் மரத்துக்கும் உள்ள சம்பந்தமே உபாயத்திற்கும் முடிவுக்கும் இடையில் தவறாத சம்பந்தமாயிருக்கிறது. சாத்தானை நான் தொழுவதால் கடவுளைத் தொழுவதால் ஏற்படும் பயனை நான் அடைய முடியாது. எனவே 'நான் கடவுளை வணங்கவேண்டும். சாத்தான் வாயிலாக நான் அவ்வாறு செய்தால் பரவாயில்லை' யென்று எவனேனும் சொல்வானானால் அது அறியாமை யென்று கருதப்படும். நாம் விதைத்ததையே அறுக்கிறோம். ௧௮௩௨-ம் வருஷத்தில் ஆங்கிலேயர்கள், கொடுமையினால் மிகுதியான "ஓட்" சுதந்தரம் பெற்றார்கள். அவர்கள் மிருகபலத்தை உபயோகித்ததையால் தங்கள் கடமையை நன்றாய் அறிந்துகொண்டார்களா? அவர்கள் 'ஓட்' சுதந்தரத்தை விரும்பினார்கள். அதனை அவர்கள் மிருகபலத்தை உபயோகித்துப் பெற்றார்கள். ஆனால் கடமையைச் செய்வதன் பயனாக உண்மையான உரிமைகளை அடைதல் கூடும். இந்த உரிமைகளை அவர்கள் அடையவில்லை. எனவே, ஒவ்வொருவரும் 'ஓட்' வேண்டுமென்று கேட்பதும், தமது உரிமைகளைக் கேட்பதுமான வேடிக்கையை நாம் இங்கிலாந்தில் காண்கிறோம்; ஒருவரும் தமது கடமையைப் பற்றிச் சிந்திப்பதில்லை. ஒவ்வொருவரும் உரிமைகளை வேண்டும்பொழுது, யார் அவற்றை யாருக்குக் கொடுப்பது? அவர்கள் தங்கள் கடமையை ஒருநாளும் செய்வதில்லை யென்று நான் கூற விரும்பவில்லை; ஆனால் அவ்வுரிமைகளுக்குச் சமமான கடமையை அவர்கள் செய்வதில்லை யென்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அந்தக் குறிப்பிட்ட கடமையை அவர்கள் செய்யாமையால், அதா

வது, தகுதியை அடையாமையால், அவர்கள் உரிமைகள் அவர்களுக்கு ஒரு சுமைபோல் ஆகிவிட்டன. அதாவது அவர்கள் அடைந்தது, அவர்கள் மேற்கொண்ட உபாயங்களுக்குச் சரியான பலன். அவர்கள் முடிவுக்கேற்ற உபாயத்தை மேற்கொண்டார்கள் உமது கடிகாரத்தை நான் கைக்கொள்ள விரும்பினால் நான் அதற்காகச் சண்டையிட வேண்டும், நான் உமது கடிகாரத்தை வாங்க விரும்பினால், நான் அதற்காக உமக்குப் பணம் கொடுக்க வேண்டும். நான் கொடையாக விரும்பினால், அதற்காக நான் வேண்டிக் கொள்ள வேண்டும். நான் மேற்கொள்ளும் உபாயத்திற் கேற்றவாறு, கடிகாரம் திருட்டுச் சொத்து, சொந்தச் சொத்து, அல்லது தானமாகும். இவ்வாறு, நாம் மூன்று பிரத்யேகமான உபாயங்களினின்று மூன்று பிரத்யேகமான வழிகளைக் கண்டோம். வழி ஒரு பொருளாகாதென்று நீர் இன்னும் சொல்லுவீரா ?

இனி, திருடனைத் துரத்துவது பற்றிய உதாரணத்தை எடுத்துக்கொள்வோம். திருடனை எவ்வழியாலும் துரத்திவிடலாமென்று நீர்சொல்வதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. திருடவந்திருப்பது எனது தகப்பனாயிருந்தால் ஒரு வழியை உபயோகிப்பேன், என்னுடன் பழகியவனாயிருந்தால் மற்றொருவழியை நாடுவேன், முற்றிலும் அந்நியனாயிருந்தால் நான் மூன்றாவது வழியை மேற்கொள்வேன். வெள்ளைக்காரனாயிருந்தால் இந்தியத் திருடனுக்கு உபயோகிக்கிற வழியினின்று வேறான வழியை மேற்கொள்வீரென்று நீர் ஒருகால் சொல்வீர்போலும். திருடன் பலவீனனாயிருந்தால் உடல்வன்மையில் சமமாயுள்ள ஒருவனுக்கு மேற்கொள்வதினின்றும் வேறான வழியை உபயோகிக்க வேண்டும். திருடன் உச்சியிலிருந்து உள்ளங்கால்வரை ஆயுதபாணியாயிருப்பின் நான் சும்மா இருந்துவிடுவேன். இவ்வாறாக, தகப்பன் முதல் ஆயுதபாணியான திருடன்வரை, நமக்குப்பலவழிகள் இருக்கின்றன. மீண்டும், திருடன் எனது தகப்பனாயிருப்பினும், பலமுள்ள ஆயுதபாணியாயிருப்பினும், நான் தூங்குவதுபோலநடித்தல்

கொண்டிருப்பேன். இதற்குக் காரணம், எனது தகப்பனாரும் ஆயுதபாணியாயிருப்பார். இருவர் பலத்திற்கும் நான் அடங்கிப் போக நேரிடும்; அதனால் எனது பொருள்களைக் களவாட விட்டு விடுவேன். எனது தகப்பனாரின் பலம் என்னை இரக்கத்துடன் அழச் செய்யும்; ஆயுதபாணியான மனிதனின் பலம் என்னிடம் கோபத்தைக் கிளப்பும்; நாங்கள் இருவரும் பகைவர்களாய் விடுவோம், நிலைமை இவ்வா றிருக்கிறது. இந்த உதாரணங்களால், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அநுசரிக்கவேண்டிய வழிகளைப் பற்றி நமக்குள் ஒற்றுமை ஏற்படாமலிருக்கலாம். இந்த விஷயங்களிலெல்லாம் என்ன செய்யவேண்டுமென்பது பற்றி, எனக்குத் தெளிவா யிருப்பதுபோலத் தெரிகிறது; ஆனால் உபாயம் உம்மைப் பயமுறுத்தலாம். அதனால் நான் உமக்கு அதனை வெளியிட யோசனை செய்கிறேன். தற்போதைக்கு, நீர் அதனை ஊகித்துக் கொள்ளும்படி விட்டு விடுகிறேன்; உம்மால் முடியாவிடின், ஒவ்வொரு விஷயத்திலும், ஒவ்வொரு வழியை நீர் மேற்கொள்ள வேண்டுமென்பது தெளிவு. திருடனை வெளியே துரத்த எவ்விதமான வழியும் பயன்படாதென்பதையும் நீர் அறிந்திருப்பீர். ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற வழியை நீர் மேற்கொள்ளவேண்டும். எனவே திருடனை நீர் விரும்பும் எந்த வழியாலும் துரத்துவது உமது கடமையல்லவென்பது தெளிவாகிறது.

இன்னும் சிறிது மேலே செல்வோம். அந்த ஆயுதபாணியான மனிதன் உமது சொத்தைத் திருடிவிட்டான்; அந்தச் சிந்தனையை மனத்தில் வைத்திருக்கிறீர்; நீர் கோபம் நிறைந்தவரா யிருக்கிறீர். அந்தப் போக்கிரியை, உமக்காக அல்ல, உமது அண்டை வீட்டுக்காரரின் நலத்தைக் கருதித் தண்டிக்க வேண்டுமென்று நீர் சொல்லுகிறீர். ஆயுதபாணிகளான பலரை நீர் சேர்த்திருக்கிறீர். நீர் அவன் வீட்டைத் தாக்கிப் பிடித்துக் கொள்ள விரும்புகிறீர். அவனுக்கு அந்த விஷயம் தெரிகிறது. அவன் ஓடிவிடுகிறான். அவனுக்கும் கோபம் மூண்டுவிடுகிறது.

அவன் தன் கூடச்சேர்ந்த திருடர்களைச் சேர்த்துக் கொண்டு, பட்டப்பகலில் கொள்ளையிடப் போவதாகத் துணிவான செய்தி அனுப்புகிறான். நீர் பலமாயிருக்கிறீர், அவனுக்கு நீர் அஞ்ச வில்லை. அவனை வாலேற்க நீர் சித்தமாயிருக்கிறீர். இதன் நடு வில் திருடன் உமது அண்டை வீட்டுக்காரர்களை வருத்துகிறான். அவர்கள் உம்மிடம் வந்து முறையிடுகிறார்கள்; நீர் அவை யனைத் தையும் அவர்களுக்காகவே செய்வதாகவும், உமது சொந்தப் பொருள்கள் களவுபோனதையும் பொருட்படுத்த வில்லை யென் றும் கூறுகிறீர். திருடன் முன்னெல்லாம் தொல்லை விளைக்க வில்லையென்றும், நீர் அவனுக்கு விரோதமாகவேலை தொடங்கிய பின்னரே, அவன் தனது கொள்ளையைத் தொடங்கினனென்றும் உமது அண்டை வீட்டுக்காரர்கள் சொல்லுகிறார்கள் நீர் இருதலைக் கொள்ளி எறும்புபோல் ஆகிறீர். நீர் ஏழைகளுக்காகப் பெரிதும் இரங்குகிறீர். அவர்கள் சொல்வது உண்மை, நீர் என்ன செய் வது? இப்பொழுது நீர் திருடனை விட்டுவிட்டால், உமக்கு அவ மானம் ஏற்படும். அதனால் நீர் ஏழைகளை நோக்கி "பாதக மில்லை; வாருங்கள். எனது ஆஸ்தி உங்களுடையது. நான் உங்களுக்கு ஆயுதங்கள் கொடுக்கிறேன்; அவற்றை உபயோகிக் கும் வழியை நான் உங்களுக்குக் கற்பிக்கிறேன். நீங்கள் திரு டனை உதைக்கவேண்டும். அவனை நீங்கள் விட்டுவிடலாகாது." என்று சொல்லுகிறீர். இவ்வாறாக, சண்டை வளர்கிறது. திரு டர்கள் தொலையில் பெருகுகிறார்கள். உமது அயல் வீட்டுக் காரர்கள் வேண்டுமென்றே தொல்லைக்கு ஆளாய்க்கொண்டார் கள். இவ்வாறாகத் திருடனைப் பழிவாங்க விரும்பியதன் பய னாக, நீர் உமது அமைதியைக் கெடுத்துக்கொண்டீர். கொள்ளை யைப்பற்றியும் அடிதடியைப்பற்றியும் நீர் சதா பயந்து கொண்டிருக்கிறீர். துணிவுக்குப் பதிலாக பயம் உம்மைப் பற்றிக் கொண்டது. விஷயத்தை நீர் பொறுமையாக ஆராய்ந்து பார்த்தால் நான் மிகையாக ஒன்றும் சொல்லவில்லை யென்பதை அறிவீர்; இது ஒரு வழி. இனி மற்ற வழியை ஆராய்வோம். ஆயுத பாணியான இந்தத் திருடனை நீர் ஒரு

மூடச் சகோதர னென்று வைத்துக் கொள்ளும். தகுதியான தருணத்தில் நீர் அவனுடன் நியாயம் பேசக் கருதுகிறீர். மூட னாக அவன் உம்மை யொத்த மனித னென்று கூறுகிறீர். திருடுமாறு அவனைத் தூண்டியது எது என்று உமக்குத் தெரியாது. எனவே, உம்மால் கூடுமான பொழுது அவனுடைய கள்ளச் சிந்தையை ஒழித்து விட வேண்டுமென்று முடிவு செய்கிறீர். நீர் இவ்வாறு உமக்குள் சிந்தித்துக் கொண்டிருக்கும் பொழுது அவன் திரும்பவும் திருட வருகிறான். நீர் அவனிடம் கோப மடைவதற்கு மாறாக அவனிடம் இரக்கம் காட்டுகிறீர். இந்தத் திருட்டு வழக்கம் அவனை யொட்டிய ஒரு நோயா யிருக்க வேண்டுமென்று நீர் நினைக்கிறீர். எனவே இனி மேல் நீர் உமது கதவுகளையும் ஜன்னல்களையும் திறந்து வைத்து விடுகிறீர். உமது படுக்கும் இடத்தை நீர் மாற்றிக் கொள்கிறீர். நீர் உமது பொருள்களை அவனுக்கு மிகவும் எளிதாகக் கிடைக்கக்கூடிய விதத்தில் வைக்கிறீர். திருடன் மீண்டும் வருகிறான்; இவையெல்லாம் அவனுக்குப் புதிதாதலால் குழப்பமடைகிறான்; ஆயினும் உமது பொருள்களை எடுத்துக்கொண்டுபோய் விடுகிறான். ஆனால் அவன் மனம் குழப்பமடைந்திருக்கிறது. கிராமத்தாரிடம் அவன் உம்மைப்பற்றி விசாரணை செய்கிறான். உமது விசித்திர, அன்பார்ந்த சிந்தையைப் பற்றி அவன் கேள்விப்படுகிறான். அவன் வருந்துகிறான். உம்மிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறான். உமது பொருள்களைத் திருப்பக் கொடுத்து விடுகிறான். திருட்டு வழக்கத்தையே விட்டுவிடுகிறான். அவன் உமது வேலையாளாய் விடுகிறான். நீர் அவனுக்கு ஒரு கௌரவமுள்ள வேலை பார்த்துக் கொடுக்கிறீர். இது இரண்டாவது வழி. இவ்வாறு வெவ்வேறான வழிகள் முற்றிலும் வெவ்வேறான முடிவுகளை உண்டுபண்ணுகின்றன வென்பதை நீர் அறிகிறீர். இதனால், திருடர்கள் மேற்கூறியவாறு நடப்பார்களென்றும் எல்லோருக்கும் உம்மைப்போன்ற கருணையும் அன்பும் இருக்குமென்றும் நினைக்க நான் விரும்பவில்லை. ஆனால் நல்வழிகளால் மட்டுமே சத்பலன்கள் ஏற்படு

மென்றும், உண்மையாக, எல்லாச் சந்தர்ப்பங்களிலும் இல்லாவிடினும், பெரும்பான்மையான சந்தர்ப்பங்களிலாவது அன்பு, கருணை யிவற்றின் சக்தி ஆயுதபலத்தைவிடப் பலமடங்கு பெரிதென்று விளக்கமட்டும் விரும்புகிறேன். மிருக பலத்தை உபயோகிப்பதில் தீமை உண்டு. ஆனால் கருணையில், இல்லை.

இப்பொழுது மனுச்செய்து கொள்ளும் விஷயத்தை விசாரிப்போம். பின்பலமில்லாத மனு பயனற்றதென்பது அனைவரும் ஒப்ப முடிந்த விஷயம். ஆயினும், மனுக்கள் ஜனங்களுக்கு ஞானத்தை உண்டுபண்ணுவதால், அவை பயனுள்ளவையென்று காலஞ்சென்ற நீதிபதி ரானடே சொல்வது வழக்கம். அவை ஜனங்களுக்கு அவர்கள் நிலைமையை ஒருவாறு தெரிவித்து, அதிகாரிகளை எச்சரிக்கின்றன. இந்தக் கருத்தின்படி, அவை முற்றிலும் பயனற்றவையல்ல. சமமானவரின் மனு மரியாதைக்கு அடையாளமாகும்; ஓர் அடிமையின் மனு அவன் அடிமைத் தனத்தின் குறியாகும். பின் பலமுள்ள மனு சமமானவரின் மனுவாகும்; அவன் தனது வேண்டுகோளை மனுவாகத் தெரிவித்தால், அது அவனுடைய பெருமையை விளக்குகிறது. இருவகையான சக்திகள் மனுக்களுக்குப் பின்பலமாயிருக்கலாம். 'இதனை நீங்கள் கொடுக்கா விட்டால் நாங்கள் உங்களை வருத்துவோம்' என்பது ஒரு வகையான சக்தி. இது ஆயுதங்களின் சக்தி. இதன் தீய பயன்களை நாம் முன்னரே ஆராய்ந்திருக்கிறோம். இரண்டாவது சக்தியை இவ்வாறு கூறலாம். "எங்கள் வேண்டுகோளுக்கு நீங்கள் இணங்காவிடின், இனி நாங்கள் உங்களுக்கு மனுச் செய்தவர்களா யிருக்கமாட்டோம். நாங்கள் ஆளப்படுவர்களா யிருக்கும்வரையில்தான் நீங்கள் எங்களை ஆளலாம். எங்களுக்கு இனி உங்களிடம் ஒரு வேலையும் இல்லை." இதில் குறிக்கப்பட்டுள்ள சக்தியை அன்புச் சக்தி, ஆன்மசக்தி அல்லது ஒருவாறு சாத்வீக எதிர்ப்பென்று கூறலாம். இந்தச்சக்தி அழிவற்றது. இதனை பூரணமாய் உபயோகிப்பவன் தனது நிலைமையை அறிந்தவனாவான். 'ஒரு மருந்து முப்பத்தாறு

சேனையைக் கேட்கும்" என்று நமது முதுமொழி ஒன்று வழங்கி வருகிறது. ஆன்ம பலத்திற்கு முன்னர் ஆயுத பலம் வன்மை யற்றது.

இனி, குழந்தை தனது காலைத் தீயில் வைக்கிறதென்ற உமது கடைசி உதாரணத்தைக் கவனிப்போம். இதிலும் உமக்கு வெற்றி கிடையாது. நீர் உண்மையாகக் குழந்தைக்கு என்ன செய்கிறீர்? உம்மால் விலக்க முடியாதபடி அவ்வளவு உடல் வலிபெற்று, அது தீக்கு விரைந்து செல்கிறதென்று வைத்துக் கொள்வோம். அவ்வாறாயினும் நீர் அதனை விலக்க முடியாது. இரண்டு வழிகள் தான் உமக்கு இருக்கின்றன. தீயில் அழிந்து போகாமல் அதனைத் தடுக்கும் பொருட்டு, நீர் அதனைக் கொல்ல வேண்டும், அல்லது உமது கண்ணெதிரிலேயே அது அழிந்து போவதை நீர் பார்க்க விரும்பாமையால், நீர் உமது உயிரைக் கொடுத்து விடவேண்டும். நீர் அதனைக் கொல்லமாட்டீர். அதன் மீது உமது மனத்தில் பெருங் கருணையில்லாவிடின், நீர் அதற்கு முன்னர் சென்று, தீயில் விழாமல் உயிர் பிழைத்திருப்பீர் எனவே, வழியில்லாமையால், நீர் அதனைத் தீயில் செல்லவிட்டு விடுகிறீர். இவ்வாறு, எவ்விதத்திலும், நீர் ஸ்தூல (மிருக) பலத்தை உபயோகிப்பதில்லை. உம்மால் கூடுமானால் நீர் குழந்தையைத் தீயில் விழாமல் பலாத்காரமாய்த் தடுத்தால், அது, தாழ்ந்த வகையாயிருப்பினும், அது ஸ்தூல பலமேயென்று நீர் கருதமாட்டீர் என்று நம்புகிறேன். அது வேறு வகையான பலம்; அதனை நாம் ஆராயவேண்டும்.

இவ்வாறு குழந்தையைத் தடுப்பதில், அதன் நன்மையையே கவனிக்கிறீர்; அதன் நன்மைக்காகவே நீர் அதிகாரம் செலுத்துகிறீர். உமது உதாரணம் ஆங்கிலேயர்களுக்குப் பொருந்தாது. ஆங்கிலேயர்களுக்கு விரோதமாய் மிருக பலத்தை உபயோகிப்பதில் நீர் முற்றிலும் உமது நலத்தையே, அதாவது நாட்டின் நலத்தையே நீர் கருதுகின்றீர். கருணை அல்லது அன்பைப் பற்றிய பேச்சே இங்கே இல்லை. ஆங்கிலேயர்களின் செயல்கள்

தீயனவாயிருந்தலால், தீமை ஒத்திருக்கின்றன வென்றும், அவர்கள் தங்கள்செயல்களை அறியாமையினால் செய்கிறார்களென்றும், அதனால், அவர்கள் குழந்தையின் நிலைமையில் இருக்கிறார்களென்றும், அத்தகைய குழந்தையை நீர் காப்பாற்ற விரும்புகிறீரென்றும் நீர் சொல்லுவீரானால், அத்தகைய தீச்செயலை எவர் செய்தபோதிலும், அதற்கு முன் விரைந்து, குழந்தையின் விஷயத்தில் செய்தது போல, நீர் உம்மையே தியாகம்செய்துகொள்ள வேண்டும். அத்தகைய அளப்பரிய கருணை உம்மிடம் இருக்குமானால், நீர் அதனை சலப்பெறத் நடத்த வேண்டுமென்று விரும்புகின்றேன்.

அதிகாரம்—கஎ

சாத்விக எதிர்ப்பு

வா:—நீர் சொல்லும் ஆன்மசக்தி அல்லது சத்தியசக்தியின் வெற்றியைப்பற்றிச் சரித்திர சம்பந்தமான ஆதாரம் ஏதாவது உண்டா? எந்த ஜாதியாரும் ஆன்மசக்தியால் மேன்மையடைந்ததற்கு உதாரணம் ஒன்றும் இல்லையென்று தெரிகிறது. தீமை செய்பவர்கள் ஸ்தூல தண்டனையின்றி தீமை செய்வதை நிறுத்தமாட்டார்களென்று எனக்கு இன்றும் தோன்றுகிறது.

பத்:—"சரீரத்திற்கு (அகம்) ஆணவம் மூலம்போலச் சமயத்திற்குக் கருணையல்லது அன்பு மூலம். ஆதலால் நாம் உயிருள்ளவரை கருணையை விட்டுவிடலாகாது" என்று கவி துளசிதாசர் கூறுகிறார். இது சாஸ்திரோக்தமான உண்மையென்று எனக்குத் தோன்றுகிறது. இரண்டும் இரண்டும் நாலென்பதை நான் எவ்வளவு நம்புகிறேனோ அவ்வளவு இதனையும் நான் நம்புகிறேன். அன்பின் சக்தியும், ஆன்ம அல்லது சத்தியத்தின் சக்தியும் ஒன்றே. அதன் வேலை ஒவ்வொரு அடியிலும் விளங்குகிறது. அந்தச்சக்தி நிலைத்திராவிடின் இந்தவுலகம் அழிந்துபோம். ஆனால் நீர் சரித்திர ஆதாரம் கேட்கிறீர். எனவே சரித்திரம் இன்னதென்று அறிதல் அவசியமாகிறது. அதற்கு நேரான குஜராத்திச் சொல்லுக்கு "அவ்வாறு நேர்ந்தது" என்பது பொருள். சரித்திரத்தின் பொருள் அதுவாயின், ஏராளமான ஆதாரம் கூறலாம். ஆனால் அதற்கு அரசர்கள், சக்ரவர்த்திகளின் செயல்களென்று பொருளாயின், அத்தகைய சரித்திரத்தில், ஆன்மசக்தி அல்லது சாத்விக எதிர்ப்புக்கு ஆதாரம் கிடையாது. தகரச் சுரங்கத்தில் வெள்ளிப்பொடி கிடையாது. நாம் அறிந்துள்ளவாறு, சரித்திரம் உலகத்தில் நடந்த யுத்தங்களின்

குறிப்பாகும். அதனால், சரித்திரம் அதாவது யுத்தங்கள் இல்லாத ஜாதி சுபமான ஜாதியென்று ஆங்கிலேயர்களுக்குள் ஒரு பழமொழி வழங்கி வருகிறது. அரசர்கள் எவ்வாறு விளையாடினார்கள், அவர்கள் எவ்வாறு ஒருவருக்கு ஒருவர் பகைவர்களானார்கள், அவர்கள் ஒருவரை ஒருவர் எவ்வாறு கொன்றார்கள் என்ற விஷயங்கள் ஒழுங்காகச் சரித்திரத்தில் கூறப்பட்டிருக்கின்றன. இவைமட்டுமே உலகத்தில் ஏற்பட்டிருந்தால், அது நீண்ட காலத்திற்கு முன்னரே முடிவு பெற்றிருக்கும். உலகத்தின் சரித்திரம் யுத்தங்களுடன் தொடங்கியிருந்தால், இன்று ஒரு மனிதன் கூட உயிரோடிருக்கமாட்டான். போருக்கு இழுக்கப்பட்ட ஜனங்கள் அழிந்து போனார்கள். உதாரணமாக, ஆஸ்ட்ரேலியா வாசிகளில் ஒருவரையேனும் உள்ளே நுழைந்தவர்கள் உயிரோடு விடவில்லை. இந்த அந்நியர்கள் தங்கள் தற்காப்பினிமித்தம் ஆன்மசக்தியை மேற்கொள்ளவில்லையென்பதைக் கவனித்துக்கொள்ளும் ; ஆஸ்ட்ரேலியர்களும், அவர்கள் அழித்த ஜனங்களின் கதியையே அடைவார்களென்பதை அறிய பெருந்த அறிவு வேண்டியதில்லை. "கத்தியில் பழகுவோர் கத்தியால் மடிவர்." நீந்துதலையே தொழிலாக உடையோர் நீரிலேயே இறுதியடைவர் என்பது நமது பழமொழி.

உலகத்தில் இன்னும் இத்தனை பேர்கள் உயிர் வாழ்ந்திருப்பது அதற்கு ஆயுத பலம் மூலமல்ல என்பதையும், ஆனால் சத்தியம் அல்லது அன்பின் சக்தியால் உலகம் நிலைத்திருக்கிறதென்பதையும் விளக்குகிறது. எனவே உலகத்தில் எத்தனையோ போராட்டங்கள் சேர்ந்தும் அது இன்னும் உயிர் வாழ்ந்து கொண்டு போவதே இந்தச் சக்தியின் வெற்றிக்கு மிகவும் பெரிய, மறக்க முடியாத சான்றாகும்.

பதினாயிரக் கணக்கான ஜனங்கள் இந்தச் சக்தியின் பிரயோகமுள்ள வேலையிலுந்தான் உயிர் வாழ்ந்திருக்கிறார்கள். கோடிக்கணக்கான குடும்பங்களில் அவர்கள் தினசரி வாழ்க்கையில் ஏற்படும் சிறிய சச்சரவுகள் இந்தச் சக்தியின் முன்னே

மறைந்து விடுகின்றன. நூற்றுக்கணக்கான நாடுகள் இதனுலேயே அமைதியொடு வாழ்ந்திருக்கின்றன. சரித்திரம் இந்த விஷயத்தை கவனிப்பதில்லை; கவனிக்கவும் முடியாது. சரித்திரம் என்பது உண்மையில் அன்பு அல்லது ஆன்ம சக்தியின் ஒழுங்கான வேலையில் ஏற்படும் தடைகளின் குறிப்பேயாகும். இரண்டு சகோதரர்கள் போராடுகிறார்கள். அவர்களில் ஒருவன் மனமிரங்கி அவனிடம் அடங்கி நின்ற அன்பை மீண்டும் வெளிவிடுகிறான். அவர்கள் இருவரும் மீண்டும் சமாதானமாக வாழத் தொடங்குகிறார்கள். இதனை யாரும் கவனிப்பதில்லை. ஆனால் இரண்டுசகோதரர்களும் வக்கீல்கள் தலையிடுவதாலோ அல்லது வேறு எந்தக் காரணத்தாலோ ஆயுதங்களை யெடுத்துச் சண்டையிட்டால் அல்லது வழக்குக்குச் (அதுவும் மிருகபலத்தை உபயோகிப்பதின் மற்றொரு முறையாகும்) சென்றால் அவர்கள் செயல்களை உடனே பத்திரிகைகளில் வெளியிடுவார்கள். அண்டை அயலார்கள் அவர்களைப்பற்றியே பேசுவார்கள். அவை ஒருகால் சரித்திரத்தில் சேர்க்காலும் சேர்த்துவிடும். குடும்பங்களிலும், வகுப்புகளிலும் எது உண்மையோ, அது நாடுகளிலும் உண்மையாயிருக்கிறது. குடும்பங்களுக்கு ஒரு விதியும், நாடுகளுக்கு மற்றொரு விதியும் இருப்பதாகக் கருத இடமில்லை. எனவே, சரித்திரம் என்பது இயற்கையின் போக்கில் ஏற்படும் தடையின் குறிப்பேயாகும். ஆன்ம சக்தி, இயற்கையாயிருத்தலின், அது சரித்திரத்தில் இடம் பெறுவதில்லை.

வா:—நீங்கள் சொல்லுமாறு, இவ்வித சாத்வீக எதிர்ப்பைப் பற்றிய உதாரணங்களைச் சரித்திரத்தில் காணமுடியாதென்பது தெளிவாய் விளங்குகிறது. இந்தச் சாத்வீக எதிர்ப்பை இன்னும் முற்றிலும் அறிந்துகொள்வது அவசியம். எனவே அதனைத் தாங்கள் விரிவாகக் கூறினால் நலமாயிருக்கும்.

பத்:—சாத்வீக எதிர்ப்பென்பது ஒருவன் தானே வருத்திக்கொள்வதால் உரிமைகளை அடையும் வழியாகும். அது ஆயுதத்தால் எதிர்ப்பதற்கு நேர் மாறானது. என்

மனச் சாட்சிக்கு மாறாயுள்ள ஒரு காரியத்தைச் செய்ய நான் மறுக்கும்பொழுது, நான் ஆன்மசக்தியை உபயோகிக்கிறேன். உதாரணமாக, அரசாங்கத்தார் ஒரு சட்டத்தை ஏற்படுத்துகின்றனர். அது என்னையும் கட்டுப்படுத்தக் கூடியது. அதனை நான் விரும்பவில்லை. கொடுஞ் செயல்களை உபயோகித்து, நான் அந்தச் சட்டத்தை ரத்து செய்யுமாறு அரசாங்கத்தாரை வற்புறுத்துவேனாயின், நான் (சரீர) ஸ்தூல பலத்தை உபயோகித்தவனாவேன். நான் சட்டத்திற்குக் கீழ்ப்படியாமல், அதனை மீறியதற்குரிய தண்டனையை ஏற்றுக் கொள்வேனாயின், நான் ஆன்ம சக்தியை உபயோகப்படுத்துகிறேன். இதற்குத் 'தன்னை' அர்ப்பணம் செய்ய வேண்டும்.

ஒருவன் தன்னை அர்ப்பணம் செய்தல் பிறரைக் கொல்வதை விடச் சாலவும் சிறந்ததென்று அனைவரும் ஒத்துக் கொள்வர். மேலும், இத்தகைய சக்தியை அநியாயமான ஒரு காரியத்தில் உபயோகித்தால் அதனை உபயோகிப்பவன் மட்டுமே வருந்துகிறான். தனது தவறுகளுக்காக அவன் பிறரை வருத்துமாறு செய்வதில்லை. பின்னர் தவறென்று அறிந்த அநேக காரியங்களை மனிதர்கள் இதற்கு முன்னர் செய்திருக்கிறார்கள். எவனும், தான் அவ்வாறு நினைக்கிற காரணத்தால் தான் முற்றிலும் நியாய மென்றாவது, ஒரு குறித்த காரியம் தவறென்றாவது கூற முடியாது. ஆனால் அது அவனது நிர்மானமான முடிவாயிருக்கும் வரை, அது அவனுக்குத் தவறேயாகும். எனவே, அவன் தான் தவறென்று அறிந்ததைச் செய்யாது, அதன் பயன் எதுவாயினும் அதனை அநுபவித்தல் தகுதியாகும். ஆன்ம சக்தியின் உபயோகத்திற்கு இது வழியாகும்.

வா:—அவ்வாறானால், நீங்கள், சட்டங்களை அவமதிப்பீர்கள்; இது சரியான ராஜத்துரோகமாகும். நாம் எப்பொழுதும் சட்டத்திற்கு கட்டுப்பட்ட ஜாதியாரென்று கருதப்பட்டு வந்திருக்கிறோம். நீங்கள் அமிதவாதிகளுக்கும் முன்னே செல்கிறீர்கள். ஏற்பட்ட சட்டங்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டு

மென்றும், ஆனால் சட்டங்கள் கெட்டவையாயிருப்பின், சட்டம் செய்தவர்களை, பலத்தை உபயோகித்தேனும் நாம் வெளியே துரத்த வேண்டுமென்றும் அவர்கள் சொல்லுகிறார்கள்.

பத்:—நான் அவர்களுக்கு முன்னே செல்கிறேனோ, இல்லையோ, அது இருவருக்கும் ஒருபொருட்டன்று. எது சரியென்பதை அறிந்து, அவ்வாறு நடக்கவே நாம் விரும்புகிறோம். நாம் சட்டத்திற்குக் கட்டுப்பட்ட ஜாதியார் என்பதன் உண்மையான பொருள் நாம் சாத்விக எதிர்ப்பைக்கொண்டவர்கள் என்பதேயாம். சில சட்டங்களை நாம் விரும்பாவிடின் சட்டம் செய்தவர்களின் மண்டைகளை நாம் உடைப்பதில்லை. ஆனால் நாம் துன்பத்தை மேற்கொண்டு அச் சட்டங்களுக்குக் கீழ்ப்படியாமல் இருக்கிறோம். நல்லனவாயினும் தீயனவாயினும் சட்டங்களுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டுமென்று சொல்வது ஒரு புதுமையான கொள்கையாகும். இத்தகைய காரியம் முற்காலத்தில் கிடையாது. ஜனங்கள் தாங்கள் விரும்பாத சட்டங்களைப் பொருட்படுத்தாமல் தாங்கள் மீறியதற்குரிய தண்டனைகளை அநுபவித்தார்கள். நமது மனச் சாட்சிக்கு விரோதமான சட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் அது நமது ஆண்மைக்கு விரோதமாகும். இத்தகைய உபதேசம் சமயத்திற்கு விரோதமானது. அது அடிமைத்தனமாகும். எவ்வித ஆடையுமில்லாமல் திரியும்படி அரசாங்கத்தார் சொன்னால் நாம் அவ்வாறு செய்ய வேண்டுமோ? நான் சாத்விக எதிர்ப்பை மேற்கொண்டவனாக விரும்பின், அவர்கள் சட்டத்திற்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்று சொல்லிவிடுவேன். ஆனால் நாம், எத்தகைய இழிவான சட்டத்தையும் கவனியாதவாறு நாம் அவ்வளவு தூரம் நம்மையே மறந்து பணிவுள்ளவர்களாய் விட்டோம்.

தனது ஆண்மையை உணர்ந்து கடவுளுக்குமட்டும் அஞ்சுகிற ஒருவன் வேறு எவருக்கும் அஞ்சான். மனிதன் இயற்றிய சட்டங்கள் அவனைக் கட்டாயமாய்க் கட்டுப்படுத்த மாட்டா. அர

சங்கத்தாரும் அத்தகைய காரியத்தை நம்மிட மிருந்து எதிர் பார்க்கவில்லை. "நீங்கள் இன்னின்ன காரியத்தைச் செய்ய வேண்டும்" என்று அவர்கள் சொல்லவில்லை. "ஆனால் இந்தக் காரியத்தை நீங்கள் செய்யாவிட்டால் நாங்கள் உங்களைத் தண்டிப்போம்" என்று சொல்லுகிறார்கள். சட்டங்கள் சொல்வதை யெல்லாம் செய்வது நமது கடமையென்றும், சமயமென்றும் நினைக்குமாறு நாம் அவ்வளவு தூரம் தாழ்வடைந்து விட்டோம். அநீதியான சட்டங்களுக்குக் கீழ்ப் படிவது ஆண்மையல்லவென்று மனிதன் உணர்ந்தானானால், எந்த மனிதனுடைய கொடுமையும் அவனை அடிமையாகச் செய்யாது. இதுதான் தன்னாட்சி அல்லது சுய ஆட்சிக்கு மூலமாகும். பெரும்பான்மையோரின் செயல் சிறுபான்மையோரைக் கட்டுப்படுத்துமென்று நம்புவது மூட புத்தியாகும். அது கடவுளுக்கு விரோதமாகும். பெரும்பான்மை யோரின் செயல்கள் தவறாக இருந்ததையும் சிறுபான்மையோரின் செயல்கள் சரியாய் இருந்ததையும் விளக்க அநேக உதாரணங்கள் கூறலாம். பெரும்பான்மையோர்களுக்கு விரோதமாகச் சிறுபான்மையோர் செய்த முயற்சிகளே எல்லாச் சீர்திருத்தங்களுக்கும் காரணம். கள்ளர்கள் கூட்டத்தில் கொள்ளையைப் பற்றிய ஞானம் அவசியமானால், ஒரு பக்திமான் அந்த நியதிக்குக் கட்டுப்பட வேண்டுமா? மனிதர்கள் அநீதியான சட்டங்களுக்குக் கீழ்ப் படியவேண்டுமென்ற மூடபக்தி இருக்கிறவரை அவர்கள் அடிமைத் தனமும் நிலைத்திருக்கும். சத்தியாக்கிரகி மட்டுமே அத்தகைய அறியாமையை ஒழிக்க முடியும்.

ஸ்தூல பலத்தையும் வெடிமருந்தையும் உபயோகித்தல் சத்தியாக்கிரகத்திற்கு விரோதமானது. ஏனென்றால் நாம் விரும்புகிற—ஆனால் அவன் விரும்பாத ஒரு காரியத்தை பலவந்தத்தால் செய்யும்படி, நமது பகைவனை நிர்ப்பந்திக்கிறோம். அவ்வாறு பலத்தை உபயோகித்தல் நியாயமென்றால் அவனும் நம்மிடம் அவ்வாறு செய்ய உரிமையுண்டு. எனவே நாம் ஒருநாளும்

ஒரு முடிவுக்கு வரமுடியாது. யந்திரத்தைச் சுற்றி வந்துகொண் டிருக்கும் குருட்டுக் குதிரையைப்போல் நாமும் நாம் முன்னே சென்றுகொண் டிருக்கிறோ மென்று நாம் நினைத்துக்கொள்ளலாம். மனச் சாட்சிக்கு விரோதமாயிருக்கிற சட்டங்களுக்குக் கீழ்ப்படியத் தாங்கள் கட்டுப்பட்டவர்கள் அல்லவென்று நம்புகிறவர்களுக்குச் சத்தியாக்கிரகமான ஒரேவழி தான் உண்டு. மற்ற எந்த வழியும் துயரத்தை உண்டு பண்ணும்.

வா:—நீங்கள் சொல்லுவதிலிருந்து சத்தியாக்கிரகம் எளியோர்களுக்குச் சிறந்த கருவியென்றும், ஆனால் அவர்கள் வலியவர்கள் ஆய்விட்டால், அவர்கள் ஆயுதங்களை மேற் கொள்ளலாமென்றும் நான் ஊகிக்கிறேன்.

பத்:—இது முற்றிலும் அறிவீனம். சத்தியாக்கிரகம் அதாவது ஆன்ம சக்தி ஒப்பற்றது. அது ஆயுதபலத்தை விடச் சிறந்தது. அவ்வாறிருக்க அதனை எளியோர்களுடைய ஆயுதமென்று எவ்வாறு கருதலாம்? ஸ்தூல பல முள்ளவர்களிடம் சத்தியாக்கிரகத்துக்கு வேண்டிய தைரியம் இராது. ஒரு பயங்காளி தான் விரும்பாத ஒரு சட்டத்திற்குக் கீழ்ப்படியாம லிருக்க முடியுமென்று நீர் நினைக்கிறீரா? அமிதவாதிகள் ஸ்தூலபலத்தை ஆதரிப்பவர்களென்று கருதப்படுகின்றார்கள். அவ்வாறானால், அவர்கள் ஏன் சட்டங்களுக்குக் கீழ்ப்படிதலைப்பற்றிப் பேசுகிறார்கள்? நான் அவர்கள் மீது குறைகூறவில்லை. அவர்கள் வேறொன்றும் கூற முடியாது. ஆங்கிலேயர்களைத் துரத்துவதில் அவர்கள் வெற்றி யடைந்து அவர்களே அரசாட்சி செய்கையில் அவர்களுடைய சட்டங்களுக்கு நீரும் நானும் கீழ்ப்படிய வேண்டுமென்று விரும்புவார்கள். அது அவர்கள் முறைக்கு ஏற்ற காரியமே. ஆனால் ஒரு சத்தியாகிரகி, அவனை பீரங்கி வாயில் வைத்து, சின்னாபின்னப் படுத்தியபோதிலும் தனது மனச் சாட்சிக்கு விரோதமாயுள்ள சட்டத்திற்குக் கீழ்ப்படியமாட்டேனென்று சொல்லுவான்.

நீர் என்ன நினைக்கிறீர்? எதற்குத் துணிவு வேண்டும்? பீரங்கியின் பின்னே நின்று மற்றவர்களைச் சுட்டு வீழ்த்துவதற்கா? அல்லது புன்னகையுள்ள முகத்துடன் ஒரு பீரங்கியின் முன்னே சென்று, தான் தூளாய்ப்போவதற்குச் சித்தமாயிருப்பதற்கா? எவன் சுத்தவீரன்? மரணத்தை எப்பொழுதும் தனது உயிர்த் தோழனாகக்கொண்டிருப்பவனா? அல்லது மற்றவர்கள் மரணத்தைத் தனது கைக்குள் வைத்திருப்பவனா? ஆண்மையும் துணிவும் அற்ற மனிதன் ஒருகாலும் சத்தியாக்கிரகியா யிருக்கமுடியாது.

ஆயினும் இதனை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். உடலில் வலியற்றவனும் இந்தப்போரை மேற்கொள்ளக்கூடும். ஒரு மனிதனும் அதனை கைக்கொள்ளலாம். கோடிக்கணக்கானவர்களும் கைக்கொள்ளலாம். ஆடவர்களும் மகளிரும், இதனை மேற்கொள்ளலாம். இதற்குச் சேனைக்குரிய பயிற்சி வேண்டுவதில்லை. வேறு பயிற்சிகளும் வேண்டுவதில்லை. மனத்தை அடக்கி யாளுதல் ஒன்று மட்டுமே வேண்டுவது. அதனை யடைந்து விட்டால் மனிதன் காட்டரசனைப்போல் விடுதலை பெற்றவன் ஆகிறான். அவனுடைய பார்வையே பகைவனை அழித்துவிடும். சத்தியாக்கிரகமென்பது இருபுறமும் கூறுள்ள ஒரு வாளாகும். அதை எவ்விதமாகவும் உபயோகிக்கலாம். அது தன்னை உபயோகிப்பவருக்கும், யார்மீது உபயோகிக்கப்பட்டதோ அவர்களுக்கும் அது நன்மை செய்யும். ஒரு துளி ரத்தம் சிந்தாமல் அது பெரும்பயன்களை அளிக்கும். அது ஒருக்காலும் துருப்பிடிப்பதில்லை. அதனை எவரும் திருட முடியாது. சத்தியாக்கிரகிகளுக்குப் போட்டி யேற்படினும் அது முடிவடையாது. சத்தியாக்கிரக வாளுக்கு உறைவேண்டுவதில்லை. இத்தகைய ஆயுதத்தை எளியோர்களுக்கு மட்டும் உரிய ஆயுதமென்று நீர் கருதியது உண்மையில் புதுமையாகவே யிருக்கிறது.

வா:—சத்தியாக்கிரகம் இந்தியாவுக்குமட்டும் உரிய விசேஷமென்று நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். பீரங்கிகள் இந்தியாவில் எக்காலும் வழங்கியதே யில்லையா?

பத்:—இந்தியா வென்றால் அதிலுள்ள சில மன்னர்களென்று நீர் கருதுகிறீர் போலும். அதன் மன்னர்களின் வாழ்வுக்கும் நமது வாழ்வுக்கும் ஆதாரமாயுள்ள, அதன் கோடிக் கணக்கான ஜனங்களை நான் இந்தியாவென்று கருதுகிறேன்.

மன்னர்கள் அரசர்களுக்குரிய தங்கள் ஆயுதங்களை எப்பொழுதும் உபயோகிப்பார்கள். ஸ்தூல பலத்தை உபயோகிப்பது அவர்கள் இயற்கை. அவர்கள் அதிகாரம் செலுத்த விரும்புகிறார்கள். ஆனால் அதிகாரத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியவர்களுக்குப் பீரங்கிகள் வேண்டியதில்லை; இவர்கள்தான் உலக முழுமையிலும் பெரும்பான்மையோரா யிருக்கிறார்கள். அவர்கள் சரீர சக்தியையாவது ஆன்ம சக்தியையாவது கற்றுக்கொள்ளவேண்டும். அவர்கள் முந்தியதை (சரீர சக்தியை)க் கற்றுக் கொண்டால் ஆள்வோரும் ஆளப்படுவோரும் பைத்தியம் கொண்டவர்கள் போல ஆகிவிடுகிறார்கள். ஆனால் அவர்கள் ஆன்ம சக்தியைக் கற்றுக் கொண்டால், ஆள்வோரின் கட்டளைகள் அவர்கள் வாள் முனைக்கப்பால் செல்வதில்லை. ஏனெனில், உண்மையான மனிதர்கள் அநியாயமான கட்டளைகளைப் பொருட்படுத்துவதில்லை; குடியானவர்கள் வாள் வலியால் என்றும் அடங்கியதில்லை; அடக்கவும் முடியாது. அவர்களுக்கு வாள் பயிற்சி தெரியாது. பிறர் அதனை உபயோகிப்பதனால் அவர்கள் அச்ச மடைவது மில்லை. மரணத்தைத் தனது தலையணையாகக் கொண்ட ஜாதி பெருமை வாய்ந்தது. மரணத்திற்கு அஞ்சாதவர்களுக்கு எவ்வித அச்சமு மில்லை. அவர்கள் சகல பயங்களினின்றும் விடுதலை பெறுகின்றனர். மிருக பலத்தின் மயக்கத்தில் இருப்பவர்களுக்கு இது மிகையாகக் கூறிய தாகாது. உண்மை யாதெனில், இந்தியாவில் பொது ஜனங்கள் வாழ்க்கையின் சகல அம்சங்களிலும் சத்தியாக்கிரகத்தை மேற் கொண்டு வந்தார்கள். அரசாங்கத்தார் நமக்கு விருப்ப மற்ற காரியத்தைச் செய்யும் பொழுது நாம் அவர்களுடன் ஒத்துழைப்பதை நிறுத்தி விடுகிறோம். இது சத்தியாக்கிரகம்.

ஓர் உதாரணம் எனது நினைவுக்கு வருகிறது. ஒரு சிறிய ராஜ்யத்தில் ராஜா ஏதோ ஓர் கட்டளை பிறப்பித்தார். அதனால் கிராமத்தார் கோபமடைந்தனர். அவர்கள் உடனே கிராமத்தை விட்டுக் குடியேறத்தொடங்கினார்கள். ராஜாவுக்கு நடுக்கம் உண்டாய்விட்டது. தமது குடிகளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு தமது கட்டளையை ரத்துசெய்துவிட்டார். இத்தகைய உதாரணங்கள் இந்தியாவில் எத்தனையோ கிடைக்கும். சத்தியாக்கிரகம் ஜனங்களின் மூலபலமாயுள்ள இடத்தில் மட்டுமே உண்மையான சுயராஜ்யம் கூடுமானதாகும். வேறு எந்தஆட்சியும் அந்நிய ஆட்சியாகும்

வா:—அவ்வாறானால், நமக்குச் சரீரப் பயிற்சியே அவசியமில்லையென்று நீங்கள் சொல்லுகிறீர்களா ?

பத்:—அத்தகைய விஷயம் ஒன்றும் நான் நிச்சயமாகச் சொல்லமாட்டேன். சரீரப் பயிற்சியின்றி, சத்தியாக்கிரகியாதல் அரிது. கொழுப்பினால் பலவீனமடைந்துள்ள ஓர் உடம்பில் உறையும் மனமும் பலவீனமானதே; மனோபலம் இல்லாவிடில் ஆன்ம பலமும் இராது. சில விஷயங்களையும் பெரும்போக வாழ்க்கையையும் ஒழித்துவிட்டு நாம் நமது உடலை வலிமைபெறச் செய்துகொள்ள வேண்டும். வலிமையற்ற உடலைக்கொண்டுள்ள ஒருவனை ஒரு பீரங்கி வாயின்முன் நான் நிற்கச்சொன்னால் அது நகைப்புக்கு இடமாகும்.

வா:—தாங்கள் சொல்வதை நோக்க சத்தியாக்கிரகியாதல் சிறிய காரியமல்லவென்று தோன்றுகிறது. அவ்வாறாகில் ஒருவன் எவ்வாறு சத்தியாக்கிரகியாதல் கூடுமென்பதை விளக்க வேண்டுகிறேன்.

ப:—சத்தியாக்கிரகியாதல் எளிது. ஆனால் அரிதும் ஆகும். பதினாறு வயதுள்ள ஒரு சிறுவன் சத்தியாக்கிரகியானதை நான் அறிவேன். நோயாளிகள் அவ்வாறு ஆனதையும் நான் அறிவேன். உடல்வலியும் சுகமுமுள்ள ஜனங்கள் சத்தியாக்கிரகத்தை

மேற்கொள்ள முடியாமற் போனதையும் நான் அறிவேன். நாட்டின் ஊழியத்திற்காக சத்தியாக்கிரகியாக விரும்புவோர் முற்றிலும் பிரமசரியத்தை மேற்கொள்ளச் சித்தமாயிருக்க வேண்டும்; வறுமையை மேற்கொள்ளவேண்டும். சத்தியத்தைப் பின்பற்ற வேண்டும். அஞ்சாமையை வளர்க்க வேண்டும். இது எனது அநுபவம்

பிரமசரியம் மிகப் பெரியவிரதங்களில் ஒன்று. அஃதின்றி மனம் அதற்கு இன்றியமையாத உறுதியைப் பெறமுடியாது. சத்தமற்ற ஒருவன் வீரியமற்றவனாகவும் ஆண்மையற்றவனாகவும் கோழையாகவும் ஆகிவிடுகிறான். மிருக இச்சைகளில் ஈடுபட்ட மனதைக்கொண்ட ஒருவன் பெரிய முயற்சிகள் செய்ய முடியாது. இதனை எண்ணிறந்த உதாரணங்களால் விளக்கலாம். அவ்வாறானால், கலியாணமான ஒருவன் என்ன செய்வதென்று இயற்கையாகக் கேள்வி ஏற்படுகிறது. ஆயினும் அது வேண்டியதில்லை. புருஷனும் மனைவியும் இச்சையைத் தீர்த்துக் கொள்ளும்பொழுது அது மிருகபோகமேயன்றி வேறில்லை. குலத்தை நிலைக்கச் செய்வதற்காகவன்றி, இத்தகைய போகம் கண்டிப்பாய் விலக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு சத்தியாக்கிரகி அந்தக் குறைந்த போகத்தையும் ஒழித்துவிட வேண்டும். ஏனெனில் அவனுக்குச் சந்தான விருப்பம் இருத்தலாகாது. எனவே கலியாணமான மனிதன் முற்றிலும் பரிசுத்தமாயிருக்கலாம். இந்த விஷயம் விரித்துரைக்கத்தக்கதல்ல. அநேக கேள்விகள் ஏற்படுகின்றன. ஒருவன் தனது மனைவியை தன்னுடன் எவ்வாறு அழைத்துச் செல்வது? அவன் உரிமைகள் என்ன? இவை போன்ற வேறு பல கேள்விகள் ஏற்படுகின்றன. ஆயினும் ஒரு பெருங்காரியத்தில் தலையிட விரும்புவோர் இந்த விஷயங்களை முடிவு செய்துகொள்ள வேண்டும்.

பிரமசரியம் எவ்வாறு அவசியமோ அவ்வாறே வறுமை விரதமும் அவசியம். பொருளாசையும் சத்தியாக்கிரகமும் ஒன்றாய்ச் செல்ல முடியாது. பொருள் உள்ளவர்கள்

அதனை எறிந்து விட வேண்டுமென்று சொல்லவில்லை; ஆனால் அவர்கள் அதைப்பற்றிக் கவலையற்றவர்களா யிருக்க வேண்டும். சத்தியாகிரகத்தை விட்டுவிடுவதை விட அவர்கள் தங்கள் பொருள் முழுமையையும் இழக்கச் சித்தமா யிருக்க வேண்டும்.

எமது பேச்சில் சத்தியாகிரகத்தைச் சத்திய சக்தி யென்று கூறினோம். எனவே, என்ன நேரினும் உண்மையைக் கடைப் பிடித்து ஒழுக வேண்டும். இதனை யொட்டி, ஓர் உயிரைக் காப்பாற்றுமாறு ஒருவன் பொய் சொல்லக் கூடாதா? என் பது போன்ற கேள்விகள் ஏற்படுகின்றன. ஆனால் பொய் சொல்லலா மென்று நியாயம் கூறுபவர்களுக்கே இந்தக் கேள்விகள் ஏற்படும். எப்பொழுதும் உண்மையைக் கடைப்பிடித்து ஒழுக விரும்புவோருக்கு இத்தகைய "தர்ம சங்கடங்கள்" ஏற் படுவதில்லை. அவை ஏற்படினும், அவர்களுக்கு ஒரு தவறான நிலைமையினின்றும் விமோசனம் ஏற்படுகிறது.

அஞ்சாமை யின்றி, சத்தியாகிரகத்தில், ஓர் அடி கூடச் செல்ல முடியாது. தங்கள் உடைமைகள், போலி மதிப்பு, உற வினர், அரசாங்கத்தார், மெய் வருத்தம், மரணம் இவற்றில் எது பற்றியும் அச்சத்தினின்று விடுதலை பெற்றவர்கள் மட்டுமே சத்தியாகிரக வழியைப் பின்பற்றக் கூடும்.

இந்தப் பயிற்சிகள் கஷ்டமென்று கருதி, இவற்றை விட்டு விடலாகாது. காரணமின்றி வரக்கூடிய எத்தகைய கஷ்டத்தை யும் துன்பத்தையும் தாங்கக் கூடிய சக்தி இயற்கையாகவே ஒவ் வொருவனிடமும் அமைந்திருக்கிறது. நாட்டிற்கு உழைக்க விரும்பாதவர்களுக்கும் கூட இந்தக் குணங்கள் இருப்பது நலம். ஆயுதப் பிரயோகத்தில் பயிற்சியை விரும்புவோருக்கும் இந்தக் குணங்கள் ஒருவாறு வேண்டும்; இது பற்றி எவரும் ஐயம் கொள்ளவேண்டாம். ஒவ்வொருவரும் விரும்பியமட்டில் வீர னாய் விடுவதில்லை. வீரனாக விரும்புவோன் பரிசுத்தத்தைக் கைக்கொள்ளவேண்டும். வறுமையைத் தனது உடைமையாகக் கொண்டு திருப்தி யடைய வேண்டும். தைரியமின்றி ஒருவன்

வீரனாக முடியாது. அவன் உண்மையை ஒழுங்காய்க் கடைப்பிடிக்கவேண்டியது அவசியமில்லையென்று நினைக்கலாம்; ஆனால் உண்மையான அஞ்சாமை இருக்குமிடத்து உண்மையும் இயற்கையாக விளங்கும். ஒருவன் உண்மையை எப்பொழுது விடுகிறானோ, ஏதோ ஒரு வகை அச்சத்தினாலேயே அவ்வாறு செய்கிறான். எனவே, மேற்கண்ட நான்கு குணங்களுக்கும் யாரும் அஞ்சவேண்டியதில்லை. சத்தியாக்கிரகிக்கு என்றும் வேண்டாத வேறு பல பயனற்ற 'குணங்'கள் ஸ்தூல பல மனிதனுக்கு வேண்டுமென்பது இங்கே குறிப்பிடத்தக்கது. ஒரு வாள் வீரனுக்கு வேண்டிய மேல் முயற்சிகளுக்கெல்லாம் தைரியக் குறைவே காரணமாகும். அவன் சுத்த வீரனாயிருப்பின், அந்தக்ஷணத்திலேயே வாள் அவன் கரத்தினின்று நழுவிவிடும். அதன் துணை அவனுக்கு வேண்டியதில்லை. பகைமையினின்று விடுதலை பெற்ற ஒருவனுக்கு வாள் வேண்டியதில்லை. கையில் தடியுள்ள ஒருவன் திடீரென்று ஒரு சிங்கத்தின் முன்னே வர, உடனே அவன் தற்காப்பிற்காக, தனது ஆயுதத்தை இயற்கையாக ஓங்கினான். தன்னிடம் துணிவு ஒரு சிறிதும் இல்லாதிருக்க, அதுபற்றித் தான் வாயால்மட்டும் பிதற்றியதாக அவன் அறிந்தான். அந்தக்ஷணமே அவன் தடியை விட்டுவிட்டு, சகல அச்சத்தினின்றும் விடுதலை பெற்றவனானான்.

அதிகாரம்—க௮

கல்வி.

வா:—தமது பேச்சு முழுமையிலும், நீங்கள் கல்வியின் அவசியத்தைப்பற்றிப் பேசவில்லை; அது நம்மிடம் இல்லாதிருப்பதுபற்றி நாம் எப்பொழுதும் முறையிடுகின்றோம். கட்டாயக் கல்வி வேண்டுமென்று ஒரு முயற்சி நமது நாட்டில் ஏற்பட்டிருக்கிறது. கேக்வார் மகாராஜா அதனைத் தமது ராஜ்யத்தில் ஏற்படுத்தியிருக்கிறார். ஒவ்வொருவரும் அதனையே நோக்குகின்றனர். அதற்காக நாம் மகாராஜாவை வாழ்த்துகிறோம். இந்த முயற்சியெல்லாம் வீணா?

பத்:—நமது நாகரிகம் மிகவும் மேன்மையுள்ளதென்று நாம் கருதுவோமானாலும், நீர் கூறிய முயற்சிகளில் பெரும்பகுதி பயனற்றதென்று நான் வருத்தத்துடன் கூறவேண்டியவனாயிருக்கிறேன். இந்த வழியில் உழைத்துவருகிற மகாராஜாவுடைய, மற்றும் பெருந்தலைவர்களுடைய நோக்கம் முற்றிலும் புனிதமானது. எனவே, அவர்கள் போற்றுதற்குரியவர்களே. ஆனால் அவர்கள் முயற்சியினால் ஏற்படக்கூடிய பயனை நாம் கண்ணினின்று மறைத்துவிட முடியாது.

கல்வியின் பொருள் என்ன? அக்ஷர ஞானம் என்றால் அது ஒரு கருவியேயாகும். ஒரு கருவியை நல்வழியிலும் தீவழியிலும் உபயோகப்படுத்தலாம். ஒரு நோயாளியைக் குணப்படுத்தக்கூடிய கருவியையே அவன் உயிரை நீக்கவும் கூட உபயோகிக்கலாம். அக்ஷர ஞானமும் இவ்வாறுதான். அநேகர் அதனைத் தீவழியில் செலுத்துகிறார்கள்; மிகச் சிலரே அதனை நல்வழியில் செலுத்துகின்றனர்; இதனை நாம் நாடோறும் பார்க்கிறோம். இது உண்மையானால், அதனால், நன்மையைவிடத் தீமையே மிகுதியாய் விளைந்திருக்கிறதென்று விளங்குகின்றது.

கல்வியின் சாதாரணமான பொருள் அக்ஷரஞானமே. சிறுவர்களுக்கு வாசிக்கவும், எழுதவும், கணக்குப்போடவும், கற்பித்தலை ஆரம்பக்கல்வியென்று கூறுகிறார்கள். ஒரு விவசாயி யோக்கியமாகத் தனது ஆகாரத்திற்கு வேண்டியதைச் சம்பாதிக்கிறான். அவனுக்குச் சாதாரணமான உலகஞானம் உண்டு. அவனுக்குத் தனது பெற்றோர்கள், மனைவிமக்கள், ஊரார்களிடம் நடந்துகொள்ள வேண்டிய முறை நன்றாய்த் தெரியும். அவன் உலக நீதிகளையறிந்து அதன்படி ஒழுகுகிறான். ஆனால் அவனுக்குத் தனது பெயரைக்கூட எழுதத்தெரியாது. அவனுக்கு அக்ஷரஞானம் அளித்து அவனுக்கு என்ன செய்யப் போகிறீர்? அவனுடைய சுகத்தை ஒரு சிறிதாவது நீர் மிகுதிப்படுத்த முடியுமா? அவனது குடிசையிலும், நிலைமையிலும் அவனுக்கு அதிருப்தி ஏற்படும்படி செய்ய விரும்புகிறீரா? அவ்வாறு செய்ய நீர் விரும்பினாலும், அவனுக்கு அத்தகைய கல்வி அவசியமில்லை. மேல் நாட்டு நாகரிக வெள்ளத்தில் மூழ்கியவர்களாய், நன்மை தீமைகளை ஆராயாமல், நாம் இத்தகைய கல்வியை ஜனங்களுக்கு அளிக்க வேண்டுமென்ற முடிவுக்கு வந்துவிட்டோம்.

இனி, உயர்தரக் கல்வியை ஆராய்வோம். நான் பூமி சாஸ்திரம், வான சாஸ்திரம், பீஜ கணிதம், க்ஷேத்திர கணிதம், முதலியன படித்திருக்கிறேன். அதனால் என்ன? எந்த விதத்தில் நான் எனக்காவது என்னைச் சூழ்ந்தவர்களுக்காவது பயன்பட்டேன். இவற்றை நான் ஏன் கற்றேன்? பண்டிதர் ஹக்ஸ்லி என்ற ஐரோப்பிய அறிஞர் கல்விக்கு அடியில் வருமாறு இலக்கணம் கூறியிருக்கிறார்: "எவன் தனது உடல் தனது உள்ளங் கருதுமாறு செய்யுமாறும், ஒரு யந்திரத்தைப் போல, எல்லா வேலைகளையும், எளிதாகவும், இன்பமாகவும் செய்யுமாறும், இளமையில் பயிற்சி பெற்றிருக்கிறானோ — எவனது அறிவு தெளிவான, நிதானமான, நியாயமான, யந்திரமாய், அதனையொத்து வன்மையுள்ள அதன் சகல பகுதிகளுடன், ஒழுங்காய் வேலை செய்யும் நிலைமையில், இருக்கிறதோ; — எவன் மனம் இயற்கையின் மூலாதார உண்மைகளைப் பற்றிய ஞானத்தின்

களஞ்சியமா யிருக்கிறதோ;— எவனுடைய இந்திரியங்கள் மனச்சாட்சியின் வேலையாளான, உறுதியான சித்தத்தின்படி அடங்கி நிற்கும்படி பயிற்சி பெற்றிருக்கின்றனவோ;— எவன் சிறுமைகள் அனைத்தையும் வெறுக்கிறானோ, பிறரைத் தன்னைப் போல மதிக்கிறானோ, அவனே விரிவான கல்வி பெற்றவனென்று நான் கருதுகிறேன். இத்தகைய ஒருவனே—வேறு ஒருவருமில்லை.—விரிவான கல்வி பெற்றவனென்று நான் கருதுகிறேன். ஏனெனில் அவன் இயற்கையுடன் லயப்பட்டிருக்கிறான். அவன் இயற்கையை நன்கு பயன்படுத்துவான்; இயற்கையும் அவனை நன்கு பயன்படுத்தும்.”

இது உண்மையான கல்வியெனின், நான் மேற்கூறிய சாஸ்திரங்கள் எனது பொறிகளை அடக்குவதில் எனக்குப் பயன்படவில்லையென்பதை நான் உறுதியாய்ச் சொல்லுவேன். எனவே, நீர் ஆரம்பக் கல்வியைக்கூறினாலும், உயர்தரக் கல்வியைக்கூறினாலும், அது முக்கிய காரியத்திற்கு அவசியமில்லை. அது நம்மை மனிதர்களாக்குவதில்லை; அது நமது கடமையைச் செய்யவும் நமக்குத் திறமை யளிப்பதில்லை.

வா:—அவ்வாறாயினும், நான் தங்களிடம் மற்றொரு கேள்வி கேட்கவேண்டும். இந்த விஷயங்களை யெல்லாம் எனக்குச் சொல்ல உங்களுக்குத் திறமை எதனால் உண்டாயிற்று? நீங்கள் உயர்தரக் கல்விப் பயிற்சி பெற்றிராவிடின், நீங்கள்கூறிய விஷயங்களை யெல்லாம் எனக்கு எவ்வாறு விளக்கியிருப்பீர்கள்?

பத்:—நீர் நன்றாய்க் கேட்டீர். ஆனால் எனது பதில் சுலபமானது. உயர்தரக் கல்வியேனும் தாழ்ந்த கல்வியேனும் நான் கற்றிராவிடின், எனது வாழ்நாள் வீணாயிருக்குமென்று நான் ஒரு சிறிதும் கருதவில்லை. நான் பேசுகிற காரணத்தால், நான் (பொதுநலத்திற்கு) உழைக்கிறேனென்றும் நான் கருதவில்லை. ஆனால் நான் ஊழியம் செய்ய விரும்புகிறேன். அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதில், நான் கற்ற கல்வியைப் பயன் படுத்துகிறேன். அதனை நான் நல்வழி

77507

யில் பயன்படுத்திய போதிலும் அது லட்சக் கணக்கானவர்களுக் கல்ல; ஆனால் உம் போன்றவர்களுக்கே உபயோகிக்கக் கூடும். இது எனது கூற்றை வலியுறுத்துகிறது. நாம் இருவரும் பெரும்பாலும் போலியான கல்வியின் கேட்டிற்கு உட்பட்டு விட்டோம். நான் அதன் தீப்பயன்களினின்று விடுதலையடைந்து விட்டதாகக் கருதி, எனது அநுபவத்தின் பயனை உமக்குத் தெரிவிக்க முயல்கிறேன்; அவ்வாறு செய்வதில் நான் இந்தக் கல்வியின் சீர்கேட்டை விளக்கிக்காட்டுகிறேன்.

மேலும், அக்ஷரஞானம் (எழுத்துப் பயிற்சி) எவ்விதத்திலும் வேண்டாமென்று நான் சொல்லவில்லை. நான் விளக்கியதெல்லாம் நாம் அதனைப் பிரமாதமாகக் கொண்டாடக் கூடாதென்பதே. அது நமது காமதேனுவல்ல. நாம், நமது பொறிகளை அடக்கி, நமது தர்மத்தை உறுதியான நிலையில் வைத்து விட்டால், அது, அதன் இடத்தில் பயன்படும்; அதற்கு உரிய இடம் உண்டு. அப்பொழுது, நாம் அந்தக் கல்வியைப் பெற விரும்பினால், அதனை நல்ல வழியில் பயன் படுத்தலாம். அது ஒரு ஆபரணம் போல, நம் மிடம் விளங்குதல் கூடும். எனவே, இந்தக் கல்வியைக் கட்டாயமாக்குவது அவசிய மில்லை யென்று ஏற்படுகிறது. நமது பழைமையான, பள்ளிக்கூட முறைபோதும். ஒழுக்கப் பயிற்சிக்கு அதில் முதல் இடம் ஏற்பட்டிருக்கிறது; அது தான் ஆரம்பக் கல்வி. அந்தக் கடைகாலின் மீது ஏற்படும் கட்டடம் நீடித்து நிற்கும்.

வா:—அவ்வாறானால் ஆங்கிலக் கல்வி அவசிய மில்லை யென்று தாங்கள் நினைக்கிறீர்களா?

பத்:—ஆம் என்றும், இல்லை யென்றும் நான் மறுமொழி கூறுவேன். கோடிக்கணக்கான ஜனங்களுக்கு ஆங்கிலப் பயிற்சி யளிப்பது அவர்களை அடிமைகளாக்குவதாகும். கல்விக்கு மக்காலே போட்ட கடைகால் நம்மை அடிமைகளாக்கி விட்டது. அவருக்கு அத்தகைய நோக்கம் இருந்த தென்று நான் சொல்லவில்லை; ஆனால் அதுதான் பயன். சுயராஜ்யத்தைப்

பற்றி நாம் ஓர் அந்நிய பாஷையில் பேச வேண்டியதாயிருப்பது வருந்துதற்குரிய விஷயமல்லவா?

ஐரோப்பியர்கள் கழித்து விட்ட முறைகளை நாம் வழங்கி வருகிறோம் என்பதையும் குறிப்பிட வேண்டும். அவர்கள் அதிஞர்கள் மாறுதல் செய்து கொண்டே போகிறார்கள். அவர்கள் கழித்துவிட்ட முறைகளை நாம் அறியாமையால் பின் பற்றுகிறோம். அவர்கள் ஒவ்வொரு பகுதியிலும் அதன் நிலைமையைச் செம்மைப்படுத்த முயல்கிறார்கள். வேல்ஸ் என்பது இங்கிலாந்தின் ஒரு சிறிய பகுதி. வெல்ஸ்காரர்களுக்குள் வெல்ஷ் பாஷையை உயிர்ப்பிக்கப் பெருமுயற்சிகள் நடந்து வருகின்றன. வெல்ஸ்பிள்ளைகள் வெல்ஷ்பாஷை பேசவேண்டுமென்ற முயற்சியில் மந்திரி லாயிட் ஜார்ஜ் தலைமை வகித்து நடத்தி வருகிறார். நமது நிலைமை என்ன? நாம் ஒருவருக்கொருவர் தவறான ஆங்கிலத்தில் கடிதம் எழுதுகிறோம். நம்மில் எம். ஏ. பட்டம் பெற்றவர்கள் கூட இந்தத் தவறினின்று நீங்கியவர்களல்லர். நமது சிறந்த கருத்துக்களை ஆங்கிலத்தில் வெளியிடுகிறோம். நமது (காங்கிரஸ்) தேச மகா சபையின் நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் நடை பெறுகின்றன. நமது சிறந்த பத்திரிகைகள் ஆங்கிலத்தில் நடை பெறுகின்றன. இத்தகைய காரியங்கள் நீண்ட காலம் நடந்துவந்தால் நமது சந்ததியார் நம்மீது பழி கூறி, நம்மைச் சபிப்பார்கள். இது எனது உறுதியான அபிப்பிராயம்.

ஆங்கிலக் கல்வி பயின்றதால், நாம் நாட்டை அடிமைப் படுத்தி விட்டோம் என்பதைக் குறிப்பிடவேண்டும். சூது, வாது, கொடுமை முதலியன பெருகி யிருக்கின்றன. ஆங்கிலம் அறிந்த இந்தியர்கள் ஜனங்களை ஏமாற்றவும், பய முறுத்தவும் தயங்குவதில்லை. இப்பொழுது நாம் ஜனங்களுக்கு ஏதாவது செய்வோமானால், அவர்களுக்கு நாம் செய்யவேண்டிய கடமைகளில் ஒரு பகுதியையே செலுத்துகிறோம்.

நான் ஒரு நீதிஸ்தலத்திற்குச் செல்ல விரும்பினால், நான் ஆங்கில பாஷையில் பேசவேண்டியதா யிருப்பது பெரிதும்

வருந்துதற்குரிய விஷயமல்லவா? நான் பாரிஸ்டர், ஆனால், நான் எனது தாய்மொழியைப் பேசக்கூடாது; வேறொருவர் எனது சுய பாஷையிலிருந்து எனக்கு மொழிபெயர்த்துச் சொல்ல வேண்டும்! இது முற்றிலும் பொருந்தாததல்லவா? இது அடிமைத் தனத்திற்கு அடையாளமல்லவா? இதற்காக நான் ஆங்கிலேயர் மீது குறை கூறுவதா? என் மீது குறை கூறுவதா? ஆங்கிலம் கற்ற மனிதர்களான நாமே இந்தியாவை அடிமைப்படுத்தியிருக்கிறோம். நாட்டின் சாபம் ஆங்கிலேயரை யன்று; நம்மீது சாரும்.

உமது கடைசிக் கேள்விக்கு எனது மறுமொழி ஆம் என்றும், இல்லையென்றும் சொன்னேன். அது என் 'ஆம்' என்று உமக்கு விளக்கிவிட்டேன். அதுவென் 'இல்லை' யென்பதை இப்பொழுது நான் விளக்குகிறேன்.

ஆங்கிலப் பயிற்சியின்றி முற்றிலும் முடியாதபடி நாம் அவ்வளவு தூரம் நாகரிக நோயில் மூழ்கியிருக்கிறோம். முன்னரே அதனைப் பயின்றுள்ளவர்கள் அவசியமான இடங்களில் அதனை நல்வழியில் பயன்படுத்தலாம். ஆங்கிலேயர்களுடன் நமது விவகாரத்திலும், நமது சொந்த ஜனங்களுடன் நமது விவகாரத்திலும், அந்தப் பாஷை வாயிலாகத்தான் அவர்களுடன் நாம் விவகாரம் நடத்தக்கூடுமான பொழுதும், அவர்களே (ஆங்கிலேயர்கள்) தங்கள் நாகரிகத்தில் எவ்வளவு தூரம் வெறுப்படைந்திருக்கிறார்களென்பதை அறியும்பொருட்டும் சமயம்போல நாம் ஆங்கில பாஷையை உபயோகிக்கலாம்; அல்லது கற்றுக்கொள்ளலாம். ஆங்கிலம் பயின்றவர்கள் தங்கள் சந்ததிகளுக்குத் தங்கள் தாய்மொழியில் அறநெறிகளைக் கற்பிக்கவேண்டும். அவர்களுக்கு மற்றொரு இந்திய பாஷையும் கற்பிக்கவேண்டும். ஆனால் அவர்கள் வயதானபிறகு, முடிவில் நமக்கு அது அவசியமில்லையென்ற நோக்கத்துடன், அவர்கள் ஆங்கிலம் பயின்று கொள்ளலாம். அதனால் பொருளீட்டும் நோக்கத்தை ஒழித்து விடவேண்டும். அவ்வளவு குறைந்த அளவில் ஆங்கிலத்

தைப் பயில்வதிலும் அதன் வாயிலாக எதனைக் கற்றுக் கொள்ளலாம், எதனைக் கற்றுக்கொள்ளக்கூடாது என்பதை நாம் கவனிக்கவேண்டும். எந்தக் கலைகளை நாம் பயிலவேண்டுமென்பதை அறிந்துகொள்வது அவசியம். சிறிது சிந்தித்தால், ஆங்கிலப் பட்டங்களை நாம் பொருட்படுத்துவதை நிறுத்தியவுடனே அதிகாரிகள் திடுக்கிடுவார்களென்பது உமக்கு விளங்கும்.

வா :—அவ்வாறானால், எந்தக்கல்வியை நாம் அளிப்பது ?

பத் :—இதனை ஒருவாறு மேலே ஆராய்ந்திருக்கிறோம்; ஆனால் நாம் இன்னும் சிறிது ஆராய்வோம். நாம் நமது பாஷைகள் அனைத்தையும் சீர்ப்படுத்த வேண்டும். அவை வாயிலாக நாம் எவ்விஷயங்களைப் பயில்வதென்பது பற்றி இங்கே விவரிக்க வேண்டியதில்லை. பயனுள்ள ஆங்கில நூல்களை நாம் பற்பல இந்திய பாஷைகளில் மொழிபெயர்க்க வேண்டும். பல கலைகள் பயில்கிற ஜம்பத்தை நாம் ஒழித்துவிடவேண்டும். சமயப் பயிற்சி, அதாவது அறப்பயிற்சி முதலிடம் பெறவேண்டும். கல்விகற்ற ஒவ்வோர் இந்தியனும், தனது சொந்தப் பாஷையுடன், அவன் இந்துவாயிருப்பின் ஸம்ஸ்கிருதமும், மகமதியனாயிருப்பின் அரபியும், பார்ஸியாயிருப்பின் பாரசீக பாஷையும் பயில்வதுடன் எல்லோரும் ஹிந்தியையும் பயிலவேண்டும். சில இந்துக்களுக்கு அரபியும் பாரசீகமும் தெரியவேண்டும்; சில மகமதியர்களுக்கும் பார்ஸிகளுக்கும் ஸம்ஸ்கிருதம் தெரியவேண்டும். வடக்கத்தியாரிலும் மேற்கத்தியாரிலும் பலர் தமிழைப் பயிலவேண்டும். இந்தியா முழுமைக்கும் பொது பாஷையாக ஹிந்தி வழங்கவேண்டும்; அதனைப் பாரசீகம் அல்லது நாகர எழுத்துக்களில் எழுதலாம். இந்துக்களுக்கும் மகமதியர்களுக்கும் நெருங்கிய உறவு ஏற்படும் பொருட்டு இரண்டு எழுத்துக்களையும் அறிந்துகொள்ளல் அவசியம். இவ்வாறு செய்யக்கூடுமானால் ஆங்கிலபாஷையை அதன் இடத்தினின்று நாம் சீக்கிரமாகவே ஓட்டிவிடலாம். அடிமைகளா

யுள்ள நமக்கு, இவையெல்லாம் அவசியம். நமது அடிமைத் தனத்தால், நாடு அடிமைப்பட்டிருக்கிறது. நாம் விடுதலை பெற்றால் அதுவும் விடுதலை பெற்றுவிடும்.

வா:—சமயப் பயிற்சி மிகவும் கடினமாயிருக்கிறது.

பத்:—ஆயினும் அஃதின்றி நமக்கு முடியாது. இந்தியா ஒருநாளும் தெய்வமின்றி இருக்காது. அந்த நாட்டில் சுத்த நாஸ்திகம் வளரமுடியாது. வேலை உண்மையில் கடினமானதே. சமயப்பயிற்சியைப்பற்றி நினைக்கும் பொழுது எனது தலை சுற்றத் தொடங்குகிறது. நமது சமயாசாரியார்கள் வேஷதாரிகளாயும், சுயநயமுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். அவர்களை நாம் அணுகவேண்டும். மடாதிபதிகளும், ஆசாரியர்களும் பிராமணர்களும், மௌல்விகளும், தங்கள் கைகளில் சாவியை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்களிடம் நல்லறிவு இல்லாவிடின், ஆங்கிலக் கல்வியால் நாம் அடைந்துள்ள ஊக்கத்தைச் சமயப்பயிற்சியில் செலுத்தவேண்டும். இது மிகவும் கடினமன்று. கடலின் ஓரம் மட்டுமே அசுத்தப்பட்டிருக்கிறது. ஓரத்தில் உள்ளவர்களை மட்டுமே சுத்தப்படுத்த வேண்டும். இந்த இனத்தில் அடங்கிய நாம் நம்மையே சுத்தப்படுத்திக் கொள்ளலாம். ஏனெனில் நான் சொன்னவை கோடிக்கணக்கான பொது ஜனங்களுக்குப் பொருந்தாது. இந்தியாவை அதன் தலைமையான நிலைமைக்குக் கொண்டு வரும் பொருட்டு நாம் அந்த நிலைமைக்குத் திரும்பச்செல்ல வேண்டும். நமது நாகரிகத்தில், முன்னேற்றம், பின்னேற்றம், சீர்திருத்தங்கள், எதிர்த்தாக்குகள்—இவை யெல்லாம் இயற்கையிலேயே ஏற்படும்; ஆனால் ஒரு முயற்சி அவசியம். அது மேல் நாட்டு நாகரிகத்தை ஓட்டுதலே யாகும். மற்றவை யெல்லாம் தாமாய் நடக்கும்.

அதிகாரம்—௧௯

யந்திரம்

வா:—மேல் நாட்டு நாகரிகத்தை ஒழித்து விடவேண்டுமென்று நீங்கள் சொல்லுகிறீர்கள், அவ்வாறானால் நமக்கு யந்திரங்களே வேண்டாமென்றும் நீங்கள் சொல்வீர்கள் போலும்.

பத்:—நீர் இந்தக் கேள்வியைக் கேட்டதனால், எனக்கு ஏற்பட்டிருந்த புண்ணில் கோலிடுவதுபோ லிருக்கிறது. ஸ்ரீமான் தத்தர் எழுதிய இந்திய பொருளாதார சரித்திரத்தை நான் படித்தபொழுது கண்ணீர்விட்டேன். அதனை நான் மீண்டும் நினைக்கும்பொழுது உள்ளம் வருந்துகிறது. இந்தியாவை வறுமையாக்கியது யந்திரங்களே. மான்செஸ்டர் நமக்கு விளைத்துள்ள கேட்டை அளவிடுவது அரிது. இந்தியக் கைத்தொழில்கள் அனைத்தும் ஒழிந்து போனதற்கு மான்செஸ்டரே காரணம்.

ஆனால் நான் ஒரு தவறு செய்கிறேன்; மான்செஸ்டர் மீது எவ்வாறு பழி கூறலாம்? நாம் மான்செஸ்டர்த் துணியை உடுத்துகிறோம். அதனால் தான் மான்செஸ்டர் அதனை நெய்தது. வங்காளத்தாரின் வீரத்தைப் பற்றி நான் படித்தபொழுது எனக்கு மகிழ்ச்சி பொங்கியது. அந்த மாகாணத்தில் துணி யந்திரங்கள் இல்லை. அதனால் அவர்களுக்குப் பழைய கைநெசவுத் தொழிலை உயிர்ப்பிக்க முடிந்தது. பம்பாயின் யந்திரத் தொழிலை வங்காளம் ஆதரிப்பது உண்மையே. யந்திரத்தால் செய்த சகல பொருள்களையும் விலக்க வேண்டுமென்று வங்காளத்தார் அறிக்கையிட்டிருந்தால் அது மிகவும் நன்றா யிருந்திருக்கும்.

யந்திரங்கள் ஐரோப்பாவைப் பாழாக்கத் தொடங்கி யிருக்கிறது. இங்கிலாந்திற்கு இப்பொழுது கேடுகாலம் கிட்டி விட்

டது. யந்திரங்கள் தற்கால நாகரிகத்தின் முக்கிய சின்னமாகும். அது ஒரு பெரும்பாவத்தின் குறியாகும்.

பம்பாயிலுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்யும் வேலைக்காரர்கள் அடிமைகளாய்விட்டார்கள். தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் பெண்களின் நிலைமை பயங்கரமானது. தொழிற்சாலைகள் ஏற்படுவதற்கு முன்னர் இந்த மாதர்கள் பட்டினி கிடக்கவில்லை. யந்திர மயக்கம் நமது நாட்டில் வளருமாயின் அது சுகமற்ற நாடாய்விடும். இதனை மிகையாகக் கருதலாம்; ஆனால் இந்தியாவில் யந்திரங்களைப் பெருக்குவதை விட, மான்செஸ்டருக்குப் பணத்தை அனுப்பி, அங்கிருந்துவரும் மென்மையான துணியை வாங்கிக் கட்டிக்கொள்வது நலமென்று நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மான்செஸ்டர்த் துணியை வாங்கிக் கட்டுவதால் நாம் நமது பொருளை மட்டும் இழக்கிறோம். ஆனால் இந்தியாவிலேயே மான்செஸ்டரை ஏற்படுத்துவதால் நமது ரத்தத்தைக் கொடுத்து, நமது பொருளைக் காப்பாற்றுகிறோம்; ஏனெனில் நமது ஆன்மாவே அழிந்து போகும். தொழிற்சாலை வேலைக்காரர்களையே எனது கூற்றுக்குச் சான்றாகக்கூறுகிறேன். தொழிற்சாலைகளினால் பொருள் சேர்த்திருப்பவர்கள் ஏனைய செல்வர்களைவிடச் சிறந்தவர்களாயிருக்க முடியாது. அமெரிக்க (ராக்பெலர்) கோடீசுரனை விட இந்திய (ராக்பெலர்) கோடீசுரர் சிறந்தவராயிருப்பாரென்று கருதுவது அறியாமையாகும். வறுமைப்பட்டுள்ள இந்தியா விடுதலை பெறக்கூடும். ஆனால் தீநெறியினால் செல்வம் அடைந்த இந்தியா தனது சுதந்தரத்தை மீண்டும் பெறுதல் அரிது. பொருளுள்ளவர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு உறுதியளிக்கிறார்களென்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும்; அது உறுதியாயிருப்பது அவர்களுக்கு நலம். பொருள்ஒருவனைத் திக்கற்றவனாக்கி விடுகிறது. இதனை யொத்துத் தீயதான மற்றொன்று காம இச்சையாகும். இரண்டும் விஷமே. இவ்விரண்டையும் விட பாம்புக்கடி விஷம் குறைந்த விஷமாகும். ஏனெனில், பாம்பு விஷம் உடம்பைமட்டுமே கெடுக்கிறது. ஆனால்

இவை உடல், உள்ளம், உயிர் (ஆன்மா) மூன்றையும் கெடுத்து விடுகின்றன. எனவே, யந்திரத்தொழில் வளர்ச்சியடைவதுபற்றி நாம் மகிழ்ச்சியடையவேண்டியதில்லை.

வா:—அவ்வாறானால், யந்திரசாலைகளையெல்லாம் மூடிப் போடுவதா?

பத்:—அது கஷ்டம். நிலைத்திருக்கும் ஒரு காரியத்தை ஒழித்து விடுதல் எளிதான வேலையல்ல. எனவே, ஒரு காரியத்தைத் தொடங்காதிருத்தல் சிறந்த அறிவுடைமையென்று சொல்லுகிறார்கள். யந்திரசாலை அதிபர்களை நாம் குறைகூறலாகாது; அவர்களுக்காக நாம் இரங்கவே செய்யலாம். அவர்கள் தங்கள் யந்திரசாலைகளை விட்டுவிடவேண்டுமென்று எதிர்பார்ப்பது மிகையாகும். ஆனால் அவற்றைப் பெருக்காமலிருக்குமாறு நாம் அவர்களை வேண்டிக்கொள்ளலாம். அவர்கள் நல்லவர்களாயிருந்தால் தங்கள் தொழிலை நாளடைவில் குறுக்கிவிடுகிறார்கள். பழைமையான, பரிசுத்தமான கைத்தறிகளை அவர்கள் ஆயிரக்கணக்கான வீடுகளில் ஏற்படுத்தலாம். இவ்வாறு செய்யப்பட்ட துணிகளை அவர்கள் விலைக்கு வாங்கலாம். யந்திரசாலைக்காரர்கள் இதனைச் செய்தாலும் செய்யாவிடினும், ஜனங்கள் யந்திரத்தில் செய்த பொருள்களை உபயோகிப்பதை நிறுத்திவிடலாம்.

வா:—நீங்கள் இதுவரை யந்திரத்தில் செய்த துணிகளைப் பற்றிப் பேசினீர்கள். ஆனால் யந்திரத்தால்செய்த எண்ணிறந்த பொருள்கள் இருக்கின்றனவே. அவற்றை நாம் இறக்குமதி செய்யவேண்டும், அல்லது நமது நாட்டில் யந்திரங்களை ஏற்படுத்தவேண்டும்.

பத்:—மெய்தான்; நமது சுவாமிகள்கூட ஜெர்மனியில் செய்யப்படுகின்றன. அவ்வாறிருக்கத் தீக்குச்சிகளையும் குண்டூசிகளையும் கண்ணாடிச்சாமான்களையும்பற்றி பேசுவானேன்? எனது பதில் ஒன்றுதான், இந்தப் பொருள்கள் இந்தியாவிற்கு வரு முன் இந்தியா என்ன செய்தது? அவ்வாறே இன்றைக்கும்

செய்யவேண்டும். யந்திரங்களின்றி நாம் குண்டூசிகள் செய்ய முடியாதவரையில், நாம் அவைகளில்லாமல் காலம் கழிப்போம். பளிங்குச் சாமான்களின் மயக்கம் நமக்கு வேண்டியதேயில்லை. பழைய நாளைப்போல நாட்டில் விளைந்த பஞ்சினால் நாம் திரி திரித்து, விளக்குகளாக, கையால் செய்த மண் அகல்களை வழங்குவோம். இவ்வாறு செய்து நாம் நமது கண்களையும் பொருளையும் காப்பாற்றிச் சுதேசியத்தை ஆதரித்து, இவ்வாறு நாம் சுயஆட்சி பெறுவோம்.

எல்லோரும் ஒரே காலத்தில் இவைகளை யெல்லாம் செய்வார்களென்றாவது, சிலர் உடனே யந்திரச்சரக்குகளை யெல்லாம் விட்டுவிடுவார்களென்றாவது கருதலாகாது. ஆனால் எண்ணம் சரியானதானால், எதனை விட்டுவிடலாமென்பதை அவ்வப்போது அறிந்துகொண்டு, அதனை உபயோகிப்பதை நாளடைவில் நிறுத்தி விடுவோம். சிலர் செய்வதைப் பலர் பின்பற்றிச் செய்வார்கள்; அவ்வாறு அந்த முயற்சி வளர்ந்து கொண்டு போகும். தலைவர்கள் செய்வதை ஜனங்கள் சந்தோஷமாகச் செய்வார்கள். இந்த விஷயம் சிக்கலானதல்ல; கஷ்டமுமல்ல. மற்றவர்களை நம்மைப் பின் பற்றுமாறு செய்யும் வரை நீரும் நானும் பொறுத்திருக்க வேண்டியதில்லை. இதைச் செய்யாதவர்கள் நஷ்டமடைவார்கள். உண்மையை அறிந்தும் இதைச் செய்யாதவர்களைக் கோழைகளென்று கூறலாம்.

வா:—இவ்வாறானால், மின்சார (''டிராம்'') வண்டிகளையும் மின்சாரத்தையும் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்?

பத்:—இந்தக் கேள்வி இப்பொழுது மிகவும் பிந்திப்போய் விட்டது. இதில் ஒன்றுமில்லை. இருப்புப்பாதைகள் வேண்டியதில்லையென்றால் ''டிராம்'' வண்டிகள் இல்லாமலும் நாம் இருக்க வேண்டும். யந்திரங்கள் ஒன்று முதல் நூறு பாம்புகள் அடங்கியிருக்கக் கூடிய புற்றுக்கு நிகரானவை. யந்திரங்கள் உள்ள இடத்தில் பெரிய பட்டணங்கள் இருக்கின்றன. பெரிய நகரம்

கள் உள்ள இடத்தில் டிராம் வண்டிகளும் இருப்புப் பாதைகளும் இருக்கின்றன. அங்கே தான் மின்சார விளக்கைப் பார்க்கலாம். ஆங்கில (நாட்டுக்) கிராமங்களில் இத்தகைய விஷயங்கள் ஒன்றுமே கிடையாது. எங்கே செயற்கையான போக்கு வரவு சாதனங்கள் பெருகியிருக்கின்றனவோ அங்கே, மக்களின் சுகம் குன்றியிருக்கிறதென்று உண்மையான வைத்தியர்கள் சொல்லுகிறார்கள். ஐரோப்பாவில் ஒரு பட்டணத்தில், பணத்தட்டு ஏற்பட்டபொழுது, டிராம் வண்டி, இருப்புப் பாதை, வக்கீல்கள், வைத்தியர்கள இவர்களின் வருமானமெல்லாம் குறைந்துபோய் விட்டது; ஜனங்கள் குறைவாகச் சுகவீனமடைந்தார்கள். இது எனது நினைவுக்கு வருகிறது. யந்திர சம்பந்தமாய் ஒரு நல்ல விஷயம்கூட எனக்குத் தோன்றவில்லை. அதன் தீமைகளை விளக்கிப் 'பாரத'மாக எழுதலாம்.

வா :—நீங்கள் சொல்லுவதெல்லாம் யந்திரத்தால் அச்சிடப் படுவது நன்மையா ? தீமையா ?

பத் :—சில வேளைகளில் நஞ்சை நஞ்சால் முறிக்கலாமென்பதை விளக்கும் உதாரணங்களில் இது ஒன்று. எனவே, இது யந்திரத்தைப் பற்றிய நல்ல விஷயமல்ல. அது சாகும் பொழுது நம்மை நோக்கி "ஜாக்கிரதை; என்னை விலக்கி வையுங்கள். என்னால் உங்களுக்கு ஒரு பயனும் விளையாது. அச்சிடுவதால் உண்டாகும் பயன் யந்திர மயக்கத்தில் உள்ளவர்களுக்கே பயன்படும்" என்று சொல்கிறது. எனவே, முக்கியமான விஷயத்தை மறந்துவிடாதீர். யந்திரங்கள் கெட்டவையென்று உணர்ந்து கொள்ளவேண்டும். அவ்வாறானால், நாம் அதனை காலடைவில் ஒழித்துவிட முடியும். நாம் விரும்பியதைத் திடீரென்று அடையக் கூடிய எந்த வழியையும் இயற்கை நமக்கு ஏற்படுத்தவில்லை. யந்திரங்களை ஒரு நன்மையென்று கொண்டாடாமல், அதனைத் தீமையென்று கருதுவோமானால், அது இறுதியில் ஒழிந்துபோம்.

அதிகாரம்—௨௦

முடிவு

வா:—உங்கள் நோக்கங்களைப் பார்த்தால், நீங்கள் மூன்றாவது கட்சி ஒன்றை ஏற்படுத்துவீர்களென்று தோன்றுகிறது. நீங்கள் அமிதவாதியுமல்ல, மிதவாதியுமல்ல.

பத்:—அது தவறு. நான் மூன்றாவது கட்சியைப் பற்றி யோசிக்கவில்லை. நாம் அனைவரும் ஒரே மாதிரியாய்ச் சிந்திப்பதில்லை. மிதவாதிகள் அனைவரும் ஒரே தன்மையான கொள்கைகளை யுடையவர்களென்று நாம் சொல்ல முடியாது. ஊழியம் புரியமட்டும் விரும்புவோருக்குக் கட்சி ஏது? நான் மிதவாதிகளுக்கும் அமிதவாதிகளுக்கும் ஊழியம் புரிவேன். அவர்கள் கொள்கையிலிருந்து, எனக்கு மாறுபாடு ஏற்படுகிற சமயத்தில் எனது நிலைமையை அவர்களிடம் வணக்கமாகத் தெரிவித்து விட்டு, எனது ஊழியத்தைச் செய்து கொண்டிருப்பேன்.

வா:—அவ்வாறானால், இருகட்சியாருக்கும் நீங்கள் என்ன சொல்வீர்கள்?

பத்:—நான் அமிதவாதிகளுக்குச் சொல்லுவதாவது, "உங்களுக்கு இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வேண்டுமென்பது எனக்குத் தெரியும். அது நீங்கள் கேட்டமட்டில் கிடைத்து விடாது. ஒவ்வொருவரும் அதனைத் தாமே அடையவேண்டும். பிறர் எனக்கு வாங்கிக் கொடுப்பது சுயராஜ்யமல்ல; ஆனால் அது பரராஜ்யம். எனவே, நீங்கள் ஆங்கிலேயர்களை ஓட்டிவிட்டால், நீங்கள் சுயராஜ்யம் அடைந்து விட்டதாகக் கூறுவது சரியாகாது. சுயராஜ்யத்தின் உண்மையான தன்மையை நான் முன்னரே விரித்துக் கூறியிருக்கிறேன். அதனை நீங்கள் ஆயுதபலியால்

ஒருவனும் அடைய முடியாது. ஸ்தூலபலம் இந்திய பூமிக்குப் பொருந்தியதல்ல. எனவே, நீங்கள் ஆன்ம பலத்தில்தான் முழுமையும் நம்பிக்கை கொள்ளவேண்டும். நமது இலக்கை அடைவதற்கு எந்த நிலையிலும், ஆயுதவலி அவசியமென்று நீங்கள் கருதலாகாது."

நான் மிதவாதிகளுக்குச் சொல்வதாவது:—"விண்ணப்பங்களை செய்துகொண்டிருத்தல் இழிவானதாகும். அதனால் நாம் தாழ்வை ஒப்புக்கொள்கிறோம். பிரிட்டிஷ் ஆட்சி இன்றியமையாததென்று கூறுவது கடவுளே இல்லையென்று சொல்வது போலாம். கடவுளைத் தவிர, வேறு எவரும், எதுவும் இன்றியமையாதவரென்று நாம் சொல்ல முடியாது. மேலும், தற்காலத்திற்கு இந்தியாவில் ஆங்கிலேயர்கள் இருப்பது அவசியமென்று கூறுவது அவர்களை அகந்தையடையுமாறு செய்வதாமென்பதை நாம் சாதாரணமாய் அறியவேண்டும்.

ஆங்கிலேயர்கள் மூட்டை கட்டிக்கொண்டு இந்தியாவை விட்டுப்போய்விட்டால், இந்தியா அநாதையாய்ப் போய்விடுமென்று கருதலாகாது. அவர்கள் அதிகாரத்தால் சமாதானத்துடன் வாழ்ந்திருப்பவர்கள் அவர்கள் போன பின்னர் போராடலாம். கொதிப்பை அடக்கிவைப்பதில் பயனில்லை. அதற்கு வழிவிடவேண்டும். எனவே, நாம் சமாதானத்துடன் வாழ்வதற்கு முன்னர், நாம் நமக்குள் போராட வேண்டியதாயிருந்தால் அவ்வாறு செய்வது நலம். பலவீனர்களைக் காப்பாற்ற மூன்றுவது மனிதர் வேண்டியதில்லை. பாதுகாப்பென்ற இதுதான் நமது வலிமையைக் குறைத்துவிட்டது. இத்தகைய பாதுகாப்பு பலவீனர்களை இன்னும் மிகுந்த பலவீனர்களாகவே செய்யும். இதனை நாம் உணர்ந்தாலன்றி, நமக்குச் சுயராஜ்யம் கிடையாது. ஆங்கிலேயப் பாதிரியார் ஒருவர் கருத்தை நான் விளக்குகிறேன். ஒழுங்கான அந்நிய ஆட்சியைவிடச் சுய ஆட்சியில் அராஜகம் சிறந்தது. சுய ஆட்சிக்கு அந்த அறிவாளியான பாதிரியார் கொண்ட பொருள் மட்டும் இந்திய சுய ஆட்சிக்கு நான்

கொண்டுள்ள பொருளினின்று வேறானது. ஆங்கில ஆட்சியின் கொடுமையும் நமக்கு வேண்டாம்; இந்தியர் ஆட்சியின் கொடுமையும் நமக்குவேண்டாம் என்று நாம் அறிந்து, மற்றவர்களுக்கு அறிவிக்க வேண்டும்.''

இந்த நோக்கம் நிறைவேறினால், அமித வாதிகளும் மித வாதிகளும் ஒன்று சேர்ந்து கொள்வார்கள், ஒருவரை ஒருவர் அஞ்சவோ, அவநம்பிக்கை கொள்ளவோ இடம் கிடையாது.

வா:—பின்னர், நீங்கள் ஆங்கிலேயர்களுக்கு என்ன சொல் வீர்கள்?

பத்:—அவர்களுக்கு நான் வணக்கமாய்ச் சொல்வதா வது:—"நீங்கள் என்னை ஆள்பவர்கள் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். நீங்கள் இந்தியாவை வாள் வலியால் வைத்துக் கொண்டிருக்கிறீர்களா அல்லது எனது சம்மதி யின் மீது வைத்துக்கொண்டிருக்கிறீர்களா என்பதை விசாரணை செய்வது அவசியமில்லை. எனது நாட்டில் நீங்கள் இருப்பதில் எனக்கு ஆட்சேபணையில்லை; ஆனால் நீங்கள் அரசாள்வோரா யிருப்பினும், நீங்கள் ஜனங்களின் ஊழியர்களாக இங்கே இருக்க வேண்டும். உங்கள் விருப்பப்படி செய்யவேண்டியவர்கள் நாங் கள் அல்ல; ஆனால் நீங்கள் எங்கள் இஷ்டப்படி செய்யவேண் டும். இந்த நாட்டிலிருந்து நீங்கள் கொண்டுபோன செல்வங்களை நீங்கள் வைத்துக் கொள்ளலாம். ஆனால் இனிமேல் செல்வங்களைக் கொண்டு போகலாகாது. உங்கள் வேலை, நீங்கள் விரும்பினால், இந்தியாவைக் காவல்புரிவதாகும். நீங்கள் எங்களிடமிருந்து வியாபாரத்தால் பயன் அடையலாமென்ற கருத்தை விட்டு விட வேண்டும். நீங்கள் ஆதரிக்கும் நாகரிகத்தை நாக ரிகமல்லவென்று நாங்கள் கருதுகிறோம். எங்கள் நாகரிகம் உங்கள் நாகரிகத்தை விடப் பெரிதும் சிறந்ததென்று நாங்கள் கருதுகிறோம். இந்த உண்மையை நீங்கள் அறிந்தால் அது உங்களுக்கு நன்மையாகும். உங்கள் பழமொழிப்படியே நீங்கள் அறியாவிட்டால், எங்களைப்போலவே நீங்களும் எங்கள் நாட்டில்

இருக்கவேண்டும். எங்கள் சமயங்களுக்கு மாருக நீங்கள் எதனையும் செய்யக்கூடாது. ஹிந்துக்களுக்காக, நீங்கள் மாட்டிறைச்சியை விலக்குவதும், மகமதியர்களுக்காகப் பன்றியிறைச்சியை விலக்குவதும், ஆள்வோர் என்ற முறையில் உங்கள் கடமை யாகும். எங்களை அச்சமுறுத்தி வைத்தமையால், நாங்கள் இதுவரை ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் உங்கள் நடத்தையால் எங்கள் மனத்தைப் புண்படுத்தவில்லையென்று நீங்கள் நினைக்கவேண்டாம். அற்பச் சுயநலத்தாலாவது, அச்சத்தாலாவது, நாங்கள் எங்கள் உணர்ச்சிகளை வெளியிடவில்லை. ஆனால் துணிவாய வெளியிடுவது இப்பொழுது எங்கள் கடமையாதலால் வெளியிடுகிறோம். உங்கள் பள்ளிக்கூடங்களும் நீதிஸ்தலங்களும் பயனற்றவையென்று நாங்கள் கருதுகிறோம். எங்கள் பழைய காலத்துப் பள்ளிக்கூடங்களும் நீதிச் சபைகளும் மீட்டும் ஏற்படவேண்டும். இந்தியாவின் பொதுப்பாஷை இங்கிலீஷ் அல்ல ; ஹிந்தி. எனவே, நீங்கள் அதனைக் கற்றுக்கொள்ள வேண்டும். எங்கள் நாட்டுப் பாஷையில் மட்டுமே நாங்கள் உங்களுடன் விவகாரம் நடத்துவோம்.

இருப்புப்பாதைகளிலும், இராணுவத்திலும் நீங்கள் பணத்தைச் செலவிடுவதை நாங்கள் பொறுக்க முடியாது. அதற்கு அவசியத்தைக் காணோம். உங்களுக்கு ருஷியாமீது பயமிருக்கலாம்; எங்களுக்கு இல்லை. அது வந்தால், அதனை நாங்கள் பார்த்துக்கொள்வோம், நீங்கள் எங்களோடு இருந்தால் நாம் ஒன்று சேர்ந்து அதனைப் பார்த்துக்கொள்ளலாம். ஐரோப்பிய துணி எதுவும் எங்களுக்கு வேண்டாம். நாட்டில் செய்த சரக்குகளைக்கொண்டு நாங்கள் காரியம் நடத்திக்கொள்வோம். நீங்கள் மான்செஸ்டர்மீது ஒரு கண்ணும், இந்தியாவின்மீது மற்றொரு கண்ணும் வைத்திருக்கக்கூடாது. நமது நன்மைகள் ஒன்றாயிருந்தால்தான் நாம் ஒன்றுசேர்ந்து உழைக்க முடியும்.

இதனை உங்களிடம் கர்வத்தினால் சொல்லவில்லை. உங்களிடம் பெரிய ராணுவ பலம் இருக்கிறது. உங்களிடம்

இணையற்ற கடற்படை இருக்கிறது, உங்களுடன் நாங்கள் போராடவிரும்பினால், அது எங்களால் முடியாது. ஆனால் மேலே சொன்னவற்றை நீங்கள் ஒத்துக்கொள்ளாவிடின், நாங்கள் உங்கள் குடிகளா யிருக்க மாட்டோம். உங்களுக்கு விருப்பம் இருந்தால், நீங்கள் எங்களைத் துண்டு துண்டாக வெட்டுங்கள்; பீரங்கிவாயில் வைத்து எங்களைச் சுட்டுத் தள்ளுங்கள். நீங்கள் எங்கள் விருப்பத்திற்கு மாறாக நடந்தால், நாங்கள் உங்களுக்குத் துணைபுரியமாட்டோம். எங்கள் துணையின்றி, நீங்கள் ஓரடிகூட முன்னே எடுத்து வைக்க முடியாது.

இவைத்தையெல்லாம் நோக்கி, உங்கள் அதிகார வெறியில், நீங்கள் சிரிக்கலாம். உங்கள் மயக்கத்தை உடனே நீக்க எங்களுக்கு முடியாமலிருக்கலாம். ஆனால் எங்களிடம் சிறிதேனும் ஆண்மையிருப்பின், உங்கள் மயக்கம் உங்களுக்குக் கேடானதென்றும், எங்களை நோக்கி நீங்கள் சிரித்தமை அறியாமையென்றும் நீங்கள் விரைவில் அறிவீர்கள். நீங்கள் உள்ளத்தில், ஒரு மதப்பற்றுள்ள ஜாதியாரென்று நாங்கள் நம்புகிறோம். சகல சமயங்களுக்கும் தாயகமான ஒரு நாட்டில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாம் எவ்வாறு ஒன்றாய்க் கூடினோமென்பதைச் சிந்திக்க வேண்டியதில்லை. ஆனால் நமது கூட்டுறவை நாம் இருவரும் நலமுள்ளதாகச் செய்து கொள்ளலாம்.

இந்தியாவிற்கு வந்திருக்கிற ஆங்கிலேயர்களான நீங்கள் நல்ல ஆங்கிலேயர்களல்ல. பாதி ஆங்கிலேயர்களான நாங்களும் உண்மையான இந்தியர்களென்று கூற முடியாது. நீங்கள் செய்ததை யெல்லாம் ஆங்கில மகா ஜனங்கள் அறிந்தால் உங்கள் செயல்களில் பலவற்றை அவர்கள் தடுத்திருப்பார்கள். இந்தியப் பொது ஜனங்களுக்கு உங்களிடம் அதிக வேலை யிருந்ததில்லை. நீங்கள் உங்கள் நாகரிகத்தை விட்டு விட்டு, உங்கள் சொந்த வேதங்களை ஆராய்ச்சி செய்தால், நாங்கள் கேட்பது நியாயமென்று உங்களுக்கு விளங்கும். நாங்

கள் கேட்பவற்றை முற்றிலும் நிறைவேற்றுகிற தென்ற நிபந்தனையின் மீது தான் நீங்கள் இந்தியாவில் இருக்கலாம்; அத்தகைய நிபந்தனைக்குட்பட்டு நீங்கள் இருந்தால், நாங்கள் உங்களிடமிருந்து பல விஷயங்களை அறிந்துகொள்வோம். நீங்கள் எங்களிடமிருந்து பலவற்றை அறிந்து கொள்வீர்கள். இவ்வாறு செய்தால் நமக்கும் ஒருவர்க்கொருவர் நன்மை உண்டு; உலகத்திற்கும் நன்மையுண்டு. ஆனால் நமது உறவு சமமாகிற நிலத்தில் வேரூன்றினால் மட்டுமே அவ்வாறு ஏற்படும்.

வா :—நாட்டாருக்கு நீங்கள் என்ன சொல்வீர்கள்?

பத் :—யார் நாட்டார்?

வா :—நமது கருத்தின்படி, நீங்களும் நானும் சந்தித்து வந்த நாட்டார்; அதாவது ஐரோப்பிய நாகரிகத்தில் அடிபட்டிருப்பவர்களும் சுய ராஜ்யம் பெற ஆவல்கொண்டிருப்பவர்களுமான நம்மவர்கள்.

பத் :—அவர்களுக்கு நான் சொல்வேன்;—"உண்மையான தேசபக்தி பூண்ட இந்தியர்கள் மட்டுமே மேற்கண்டவாறு அச்சமின்றி, ஆங்கிலேயர்களிடம் பேசக்கூடும்; இந்திய நாகரிகம் சாலச் சிறந்ததென்றும், ஐரோப்பிய நாகரிகம் ஒன்பது நாள் கொண்டாட்டம் என்றும், உண்மையாக நம்புகிறவர்களே அவ்வாறு தேசபக்தியுள்ளவர்களாயிருப்பார்கள். இத்தகைய நிலையற்ற நாகரிகங்கள் எத்தனையோ அடிக்கடி தோன்றி அழிந்திருக்கின்றன. இன்னும் அவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கும். ஆன்மாவின் சக்தியைத் தங்களுக்குள்ளே உணர்ந்து மிருகபலத்தில் முன் அஞ்சாமலும், எக்காரணத்தாலும் மிருகபலத்தை உபயோகிக்க விரும்பாமலும் இருப்பவரே அவ்வாறு தேசபக்தி பூண்டவர்களாயிருப்பார்கள். முன்னரே, விஷத்தை யுட்கொண்டிருக்கின்றமையால், தற்கால பரிதாப நிலைமையைக் குறித்துப் பெரிதும் அதிருப்தி கொண்டிருப்பவர்களே அவ்வாறு தேசபக்தி பூண்டவர்களாயிருப்பார்கள்.

இத்தகைய இந்தியன் ஒருவன் இருப்பினும், அவன் மேற்கண்டவாறு ஆங்கிலேயர்களிடம் பேசுவான்; ஆங்கிலேயர்கள் அவனுக்கு செவி சாய்ப்பார்கள்.

இந்தக் கேள்விகள் கேள்விகளல்ல. ஆனால் அவை நமது உள்ள நிலையை விளக்குகின்றன. கேட்பதால் நமக்கு ஒன்றும் கிடையாது. நமக்கு வேண்டியதை நாம் அடைந்து கொள்ள வேண்டும். அந்த முயற்சிக்குத்தக்க வன்மை நமக்கு இருக்க வேண்டும். அந்த வன்மை யாருக்கு ஏற்படுமென்றால்:—

க. ஏகதேசங்களில்மட்டும் ஆங்கில பாஷையை உபயோகப்படுத்தவேண்டும்.

உ. வக்கீலா யிருந்தால், தமது தொழிலை விட்டு விட்டு, கைத்தறி வேலையை மேற் கொள்ள வேண்டும்.

ங. வக்கீலா யிருந்தால் தமது நாட்டாருக்கும், ஆங்கிலேயருக்கும் அறிவு விளக்கஞ் செய்வதில் தனது அறிவைச் செலுத்த வேண்டும்.

ச. வக்கீலா யிருந்தால் கட்சிக்காரர்களின் சச்சரவுகளில் தலையிடாமல், நியாயஸ்தலங்களுக்குப் போவதை ஒழித்து தமது அநுபவத்தைக் கூறி, அவ்வாறு செய்யுமாறு ஜனங்களைத் தூண்ட வேண்டும்.

ரு. வக்கீலா யிருந்தால் தமது (வக்கீல்) தொழிலை விட்டு விடுவது போல, நீதி பதி (ஜட்ஜ்) யாயிருக்கவும் மறுத்து விட வேண்டும்.

சு. வைத்தியரா யிருப்பின், வைத்தியத்தை விட்டுவிட்டு உடல்களைக் குணப்படுத்தலைவிட, உள்ளங்களைக் (ஆத்மாவை) குணப்படுத்த வேண்டுமென்று அறிய வேண்டும்.

எ. வைத்தியரா யிருப்பின், தான் எச்சமயத்தனு யிருப்பினும், ஐரோப்பிய வைத்தியப் பள்ளிக்கூடங்களில் நடை பெறும் தீய மிருகாங்கச் சேதத்தின் வாயிலாக, குணப்படுத்து

லதைவிட உடம்புகள் நோயுடனே இருத்தல் நலமென்று அறிய வேண்டும்.

௮. வைத்தியராயிருப்பினும், நெசவுத்தறிவேலையை மேற்கொள்ளவேண்டும். நோயாளிகள் தன்னிடம் வரின், நோயின் காரணத்தைச்சொல்லி, பயனற்ற மருந்துகளைக் கொடுத்து அவற்றை வளர்ப்பதைவிட, அவற்றின் காரணத்தை ஒழிக்கும்படி அவர்களுக்கும் போதிக்கவேண்டும். மருந்துகள் உட்கொள்ளாமையால் ஒருகால் நோயாளி இறந்துபோனால் உலகத்திற்குக் குறைவு ஏற்பட்டு விடாதென்றும், தான் உண்மையிலேயே அவன்மீது கருணை பாராட்டியவனாவனென்றும் அறியவேண்டும்.

௯. செல்வந்தராயிருப்பினும், செல்வத்தைப் பொருட்படுத்தாமல், தன்மனத்தில் உள்ளதை வெளியிட்டு, எவருக்கும் அஞ்சாம லிருக்கவேண்டும்.

௰. செல்வந்தனாயிருப்பின், தனது பொருளைச் செலவிட்டுக் கைநெசவுத் தறிகள் ஏற்படுத்தி, கைநெசவுத் துணியைத் தான் உபயோகிப்பதால், அதினைப் பிறரும் உபயோகிக்கும்படி தூண்டவேண்டும்.

௧௧. மற்ற இந்தியர்களைப் போல, இது மனந் திரும்புகைக்கும், பிராயச் சித்தத்திற்கும் துக்கத்திற்கும் உரிய காலமென்று அறியவேண்டும்.

௧௨. மற்ற இந்தியர்களைப் போல, ஆங்கிலேயர்கள் மீது குறை கூறுவது வீணென்றும், நம்மாலேயே அவர்கள் வந்தார்களென்றும், அதே காரணத்தாலேயே அவர்கள் இருக்கவும் செய்கிறார்களென்றும் நாம் நம்மைத் திருத்திக் கொள்ளும் பொழுது தான், அவர்கள் போய் விடுவார்கள் அல்லது தங்கள் இயற்கையை மாற்றிக் கொள்வார்களென்றும் அறிய வேண்டும்.

௧௩. மற்றவர்களைப் போல, துக்க சமயத்தில் யாதொரு கொண்டாட்டமும் கூடாதென்றும், நாம் தாழ்ந்த நிலைமையில்

இருக்கும் பொழுது, சிறைச்சாலையில் அல்லது தேசப்பிரஷ்டத்தில் இருப்பது மிகவும் சிறந்ததென்று அறியவேண்டும்.

கச. மற்றவர்களைப் போல, நாம் ஜனங்களுக்கு உழைக்குமாறு, நாம் சிறைச்சாலைக்குச் செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டுவது அவசியமென்று நினைப்பது அறியாமை யென்று அறிய வேண்டும்,

கரு. மற்றவர்களைப் போல, பேச்சைவிடச் செய்கை மிகவும் சிறந்ததென்று அறிய வேண்டும். நாம் நினைப்பதை அவ்வாறே வெளியிட்டு, அதன் பயனை ஏற்றுக்கொள்வது நமது கடமை யென்றும் அப்பொழுது தான், நமது பேச்சு எவர் மனத்திலும் பதியுமென்றும் அறிய வேண்டும்.

கசு. மற்றவர்களைப்போல, கஷ்டப்பட்டுத் தான், நாம் விடுதலை அடையக்கூடுமென்று அறியவேண்டும்.

கஎ. மற்றவர்களைப்போல, ஐரோப்பிய நாகரிகத்தை ஆதரிக்கும் பாவத்திற்கு அந்தமான் தீவில் ஆயுள் பரியந்தம் தீபாந்தர தண்டனை அநுபவித்தலும் போதுமான பரிகாரமல்லவென்று அறியவேண்டும்;

கஅ. மற்றவர்களைப்போல, ஒரு நாட்டாரும், வருத்தமின்றி வாழ்வடையவில்லை யென்றும், போரிலும் கூட உண்மையான பரீட்சை தான் வருந்துதலேயன்றி பிறரைக் கொல்வதல்ல வென்றும், சத்தியாகிரகப்போரில் இன்னும் மிகுந்த வருத்தம் அநுபவிக்கவேண்டுமென்றும் அறியவேண்டும்.

க௯. மற்றவர்களைப்போல, மற்றவர்களும் செய்யும் பொழுது நாம் ஒரு காரியத்தைச் செய்வோமென்று சொல்வது வீண் சாக்கென்று அறியவேண்டும். நாம் சரியென்று அறிந்ததை நாம் செய்யவேண்டும் என்றும், மற்றவர்கள் அறியும்பொழுது அதனைச் செய்வார்கள் என்றும் அறியவேண்டும் நான் ஒரு கலையுள்ள சித்துண்டியைக் கண்டால், மற்றவர்கள் அதனைக் குனி பார்க்கும் வரை நான் பொறுத்திருப்பதில்லை; காட்டுக்காக

ஒரு முயற்சிசெய்து, அதற்காக வருந்துவது அத்தன்மையில் உள்ளதென்றும், கட்டாயத்தினால் வருந்துவது வருத்தமல்லவென்றும் அறியவேண்டும்.

இத்தகையோருக்கே அத்தகைய உண்மை ஏற்படும்.

வா:—இது பெரிய 'ஜாப்தா'வாயிருக்கிறது. இதனை எல்லோரும் எப்பொழுது நிறைவேற்றுவார்கள்?

பத்:—நீர் சொல்வது தவறு. உமக்கும் எனக்கும் மற்றவர்களிடம் ஒரு வேலையும் இல்லை. ஒவ்வொருவரும் தமது கடமையைச் செய்யட்டும். நான் எனது கடமையைச் செய்தால், அதாவது நான் எனக்கு ஊழியம் கொண்டால் நான் மற்றவர்களுக்கு ஊழியம் புரிதல் கூடும். உம்மை விட்டுப் பிரிவதற்கு முன் நான் மீண்டும் சொல்லுகிறேன்:—

௧. உண்மையான சுய ஆட்சி, தன் ஆட்சி, அல்லது தன்னடக்கமாகும்.

௨. அதற்கு வழி, சத்தியாக்கிரகம்: அதாவது ஆத்மசக்தி அல்லது அன்புச் சக்தி.

௩. இந்தச் சக்தியை அடையும்பொருட்டு ஒவ்வோர் வகையிலும் சுதேசியத்தை மேற்கொள்ளல் இன்றியமையாதது.

௪. நாம் செய்யவேண்டுவதை நாம் ஆங்கிலேயர்களை ஆட்சேபிப்பதால் அல்லது, அவர்களை (பதில்) தண்டிக்கவேண்டுமென்பதால்—செய்யவேண்டியதில்லை. ஆனால் அவ்வாறு செய்வது நமது கடமையாதலால் செய்யவேண்டும். உதாரணமாக, ஆங்கிலேயர்கள் உப்பு வரியை ரத்துசெய்தாலும் நமது பணத்தை மீண்டும் கொடுத்துவிட்டாலும், இந்தியர்களுக்கு உயர்ந்த பதவிகளை அளித்தாலும், ஆங்கிலச் சேனைகளை வரவழைத்துக்கொண்டாலும் அதனால் நாம் அவர்கள் யந்திரத்தால் செய்த சரக்குகளை நிச்சயமாக உபயோகிக்க மாட்டோம். ஆங்கில பாஷையையும் வழங்கமாட்டோம். அவர்கள் அநேக கைத்தொழில்களையும் உபயோகிக்கமாட்டோம். இவைகள் தங்கள் இயற்கையிலேயே

தீயவை; எனவே இவை நமக்கு வேண்டாம். ஆங்கிலேயர் கள்மீது எனக்கு விரோதம் கிடையாது. ஆனால் அவர்கள் நாகரிகத்தின் மீது எனக்கு விரோதம் உண்டு.

'சுயராஜ்யம்' என்ற பதத்தை அதன் உண்மைப் பொருளை அறியாது நாம் வழங்கி வந்தோம் என்பது எனது கருத்து. நான் அறிந்துள்ளவாறு, அதனை நான் உமக்கு விளக்க முயன்றேன். இனி எனது வாழ்வை அதனை அடைவதில் அர்ப்பணம் செய்து விட்டேன் என்று எனது மனச் சாட்சி சான்று கூறுகிறது.

கண்டனங்களுக்கு மறுமொழி

(இது காந்தியடிகள் தமது 'யங் இந்தியா' பத்திரிகையில் எழுதிய ஒரு வியாசத்தின் மொழிபெயர்ப்பாகும்.)

எனது இந்தச் சிறிய நூல் பெரிதும் கவனத்தைப் பெற்று வருவது நிச்சயமாக எனது நற்பாக்கியமே யாகும். இதன் மூலம் குர்ஜர பாஷையில் இருக்கிறது. இதன் வாழ்க்கையில் இடையில் ஆபத்து ஏற்பட்டது. இது ஆதியில் தென் ஆப்பிரிக்காவில் நடைபெறும் 'இந்தியன் ஒப்பீனியன்' என்ற பத்திரிகையில் வெளியிடப்பட்டது. இந்திய அராஜகக் கட்சியாருக்கும், தென்னாப்பிரிக்காவில் உள்ள அவர்கள் போன்றவர்களுக்கும் மறுமொழியாக, நான் லண்டனிலிருந்து தென் ஆபிரிக்காவுக்குத் திரும்பிவரும் பொழுது, 1908-ம் வருஷத்தில் இதனை எழுதினேன். நான் தெரிந்த இந்திய அராஜகர் ஒவ்வொருவனுடனும் சந்தித்துப் பேச நேர்ந்தது. அவர்கள் வீரத்தை நோக்கி நான் வியப்படைந்தேன். ஆனால் அவர்கள் ஊக்கம் தவறான வழியில் சென்றது. இந்தியாவின் க்ஷேமங்களுக்குக்கொடுமை சரியான வழியல்லவென்றும், அதன் நாகரிகத்தின் பாதுகாப்பிற்கு வேறு உயர்ந்த கருவி அவசியமென்றும் உணர்ந்தேன்.

தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரகம் இரண்டுவருஷமுள்ள குழந்தையாயிருந்தது. ஆனால், ஒருவாறு நம்பிக்கையுடன், அதனைப் பற்றி நான் எழுதக் கூடிய வண்ணம் அது போதுமான படி அபிவிருத்தி யடைந்திருந்தது. இதனை நண்பர்கள் மிகவும் மெச்சியபடியால் இது புஸ்தக ரூபமாக வெளியிடப்பட்டது. இந்தியாவில் இது பற்றிக் கவனம் ஏற்பட்டது. பம்பாய் அரசாங்கத்தார் இதன் வியாபகத்தைத் தடுத்தார்கள். அதற்குப் பதிலாக நான் இதன் மொழி பெயர்ப்பை வெளியிட்டேன். எனது ஆங்கில நண்பர்கள் இதில் உள்ள விஷயங்களை

அறிய வேண்டுமென்று நான் கருதினேன். இது ஒரு குழந்தையின் கையில் கூடக் கொடுக்கக் கூடிய புஸ்தக மென்பது எனது அபிப்பிராயம். பகைமைக்குப் பதிலாக இது அன்பைப் போதிக்கிறது. கொடுமைக்குப் பதிலாக இது தியாகத்தைப் போதிக்கிறது. மிருக சக்திக்குப் பதிலாக இது ஆன்ம சக்தியைப் போதிக்கிறது. இது எத்தனையோ பதிப்புகளில் வெளிவந்து விட்டது. இதனைப் படிக்க விரும்புபவர்களுக்கு நான் இதனைச் சிபார்சு செய்கிறேன். ஒரு வார்த்தையைத் தவிர, இதில் நான் ஒன்றும் வாபஸ் வாங்கிக்கொள்ளவில்லை. எனக்கு சிநேகமான ஒரு பெருமாட்டியின் விருப்பத்திற்கிணங்கி அவ்வொரு வார்த்தையை வாபஸ் வாங்கிக்கொள்கிறேன்*..

இந்தச் சிறிய நூல் நவீன நாகரிகத்தைப்பற்றிய கடுமையான கண்டனமாகும். இது 1908ம் வருஷத்தில் எழுதப்பட்டது. எனது உறுதிப்பாடு எப்பொழுதையும் விட இப்பொழுது உறுதியாயிருக்கிறது. இந்தியா நவீன நாகரிகத்தை ஒழிக்குமானால், அவ்வாறு செய்வதால், அது பயன் பெறுமென்றே நான் கருதுகிறேன்.

ஆனால், 'இதில் விவரித்துள்ள சுயராஜ்யத்தை அடையுமாறு நான் இன்று வேலை செய்கிறேனென்று நினைக்கக் கூடாதென்று நான் வாசகரை எச்சரிக்கிறேன். இந்தியா அதற்குத் தகுதியாயில்லையென்பதை நான் அறிவேன். அவ்வாறு சொல்வது அதிகப்பிரசங்கித்தனமென்று தோன்றலாம். ஆனால் அவ்வாறு நான் கருதுகிறேன். இதில் விளக்கியுள்ள சுய ஆட்சியைப்பெற நான் தனிமையில் வேலை செய்துகொண்டிருக்றேன். ஆனால் இந்திய ஜனங்களின் விருப்பப்படி பார்லிமெண்டு முறையிலுள்ள சுயராஜ்யத்தை அடைவதற்காகத்தான் நான் இன்று பொதுவாகச் சேர்ந்து உழைத்துவருகிறேன். இருப்புப்

* பார்லிமெண்டைப்பற்றி 'விபசாரி' யென்று கூறுவதை அவர் குறிப்பிடுகிறார். மொ.—பெ.

பாதைகளும், வைத்தியசாலைகளும் இயற்கையாக அழிந்து போவதை நான் நிச்சயமாக விரும்பியபோதிலும், அவற்றை அழிக்கும் நோக்கத்துடன் நான் வேலை செய்யவில்லை. உயர்ந்த, உத்தமமான நாகரிகத்திற்கு இருப்புப்பாதைகளாவது, வைத்தியசாலைகளாவது அடையாளமல்ல. அவை அவசியமான தீமைகளாகும். ஒரு ஜாதியின் தர்மத்தின்பெருமையை அவை ஒரு சிறிதும் உயர்த்தவில்லை. நீதிஸ்தலங்களை நிலையாகஒழித்துவிடுவதும் எனது நோக்கமல்ல. அது மிகவும் விரும்பத்தக்க தொன்றென்றும் நான் கருதவில்லை. அதுபோலவே, சகல யந்திரங்களையும் யந்திரசாலைகளையும் அழித்துவிட வேண்டுமென்றும் நான் கூறவில்லை. ஜனங்கள் இப்பொழுது மேற்கொள்ளச் சித்தமாயிருப்பதைவிட மிகவும் உயர்ந்த எளிமையும், துறவும் அதற்கு அவசியமாகும்.

இதில் உள்ள விஷயத்தில் இப்பொழுது முழுமையும் அநுஷ்டிக்கப்படுகிற பகுதி கொடுமையின்மையே யாகும். அதுவும் கூட இந்த நூலில் கூறியுள்ள உணர்ச்சியுடன், அநுஷ்டிக்கப்படவில்லை யென்பதை நான் விசனத்துடன் ஒத்துக்கொள்கிறேன். அவ்வாறு நடந்தால் இந்தியாவில் ஒரே நாளில் சுயராஜ்யம் ஏற்படுத்தி விடலாம். இந்தியா தனது சமயத்தின் ஒரு முக்கிய பகுதியாக, அன்பென்னும் கொள்கையை மேற்கொண்டு, அதனைத் தனது அரசியல் விவகாரத்தில் அனுஷ்டித்தால், சுயராஜ்யம் இந்தியாவிற்கு தேவலோகத்திலிருந்து இறங்கிவிடும். தற்காலம் நடைபெறுகிற இயக்கத்தை இழிவுபடுத்துவதற்காக இந்தப் புஸ்தகத்திலிருந்து எவ்வெவ்வோ உதாரணங்கள் எடுத்துக்கூறப்படுவதால், நான் இந்த வியாக்கியானத்தைக் கூறுகிறேன். நான் பெரிய பந்தய விளையாட்டு விளையாடுகிறதாகவும், எனது அபிப்பிராயங்களை இந்தியாவின் மீது சுமத்துவதற்காக நான் தற்காலமுள்ள குழப்பத்தை உபயோகிப்பதாகவும், இந்தியாவின் செலவில் நான் சமய சம்பந்தமான சோதனைகள் செய்வதாகவும் சிலர் எழுதியிருப்பதைக் கூட நான் பார்த்திருக்கிறேன். சத்தியாக்கிரகம் மிகவும் உறுதியான பொருளால்

ஆக்கப்பட்டிருக்கிறதென்று மட்டும் நான் மறுமொழி கூறக் கூடும். அதில் மறை பொருள் ஒன்றுமில்லை; ரகசியம் ஒன்றுமில்லை. 'இந்திய சுயராஜ்ய'த்தில் விவரித்திருக்கிற வாழ்க்கையின் கொள்கை முற்றிலும் ஒருபகுதி நிச்சயமாகவே ஒழுக்கத்தில் அநுஷ்டிக்கப்படுகிறது. அதனை முற்றிலும் அநுஷ்டிப்பதால் எவ்விதக்கேடும் ஏற்படாது. ஆனால் காட்டின் தற்கால முள்ள விஷயத்திற்குப் பொருத்தமற்ற வாக்கியங்களை எனது எழுத்துக்களிலிருந்து எடுத்துப் பிரசுரித்து ஜனங்களை வெருட்டுதல் நியாய மாகாது.

மோ. க. காந்தி.

77507